

மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடமும் கிடைக்கும்

மெஸர்ஸ். குப்தா கார்ப்பொரேஷன்

தபால் பெட்டி நெ. 35, 17-A/428, அருணாசல ஆச்சாரி தெரு, சேலம்

I—28-12 1

ஹிந்தி

6 மாதத்தில் ஒழிந்த நேரத்தில் குறைந்த செலவில் தபால் மூலம் கற்றுக் கொள்ளுங்கள். தமிழ் தெரிந்தால் போதும். ஹிந்தி எழுத்தும் பாஷையும் எழுதவும், பேசவும், படிக்கவும் கற்றுக் கொள்ளலாம். தினசரி பாடங்களும் பயிற்சிகளும் கொடுக்கப்படுகின்றன. பயிற்சிகள் திருத்தப்படுகின்றன. பரீட்சையில் தேர்ச்சி பெறலாம். சுதந்திர இந்தியாவின் தேச பாஷையைக் கற்றுக் கொள்ள சிறந்த தருணம். விவரத்திற்கு இரண்டு 3/4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

ஸ்ரீரங்கம் ஆத்தான் ஸ்ரீநிவாஸாச்சாரியார்

ஸரஸ்வதி கலாமந்திர் ஹிந்தி வித்யாலயம்

17, ஆதியப்ப முதலி தெரு :: மதராஸ்-7

உலகமெங்கும் உபயோகிக்கப்படுகிறது!

ப்ரூக்லாக்ஸ் பார்வைக்கும் ருசிக்கும் தித்திப்பான சாக்லெட்டைப் போலிருக்கும். வயிற்றுக் குத்து முதலியன இல்லாமல் உடம்பை இன்பமாய்ச் சுத்திகரிக்கும். ஊக்கமற்ற நிலைமைக்கு காரணமாயுள்ள மலச்சிக்கலை ப்ரூக்லாக்ஸ் விரைவில் அறவே அகற்றிவிடும். வயதானவர்களுக்கும் குழந்தைகளுக்கும் இன்றியமையாதது.

ப்ரூக்லாக்ஸ்

சாக்லெட் லாக்ஸேடிவ்

டின் ஒன்றுக்கு அணா பத்து. எங்கும் கிடைக்கும்

சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜண்டுகள்:

ஓரியண்டல் மர்க்கன்டைல் ஏஜன்ஸி, 99-A, அரமனைக்காரத் தெரு, மதராஸ்

No. 3.




Policy
WORLD WIDE POLICY NO. 558
ஓரே ஒரு பிரீமியம்
உங்கள் வருங்காலத்திய எழுதும் நிலைமையின் முன்னேற்றத்தை இன்ஷ்யூர் செய்கிறது.
. . . என்றும் மென்ட்மோர் ஆடோப்ளோ பேனா இந்தியாவின் சீதோஷ்ண நிலையைத் தாங்கக்கூடிய பொருள்களால் ஸ்பெஷலாக செய்யப்பட்டது. ட்ராப்-பில்லிங், லீவர், ஸ்டட்-பில்லிங் முதலிய மாடல்களில் கிடைக்கிறது. அதனுடைய கெட்டியான நிப் 14 காரட் தங்கத்தால் செய்யப்பட்டது. ஆஸ்மி இருடியத்தில் தோய்க்கப்பட்ட முனையோடுகூடியது. ஒவ்வொரு பேனா குழலின்மேலும் நிப்பின்மேலும் மென்ட்மோர் என்ற பெயர் செதுக்கப்பட்டிருக்கிறதா என்று கவனித்துப் பாருங்கள். உங்கள் ஆயுள்கால சேவையின் அஷ்யூரன்ஸ்.
ரூ. 15/-
இங்கிலாந்தில் செய்யப்பட்டது.
MENTMORE
Auto-Flow
மென்ட்மோர் ஆடோப்ளோ.
FOUNTAIN PEN
வர்த்தக வியாபாரிகளுக்கு உரிமைபெற்ற முழு வினியோகஸ்தர்
முல்லர் & பிப்ஸ் (இந்தியா) லிமிடெட் 15, கங்குராம செட்டித் தெரு, மதராஸ்



L. 80-23 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

Glaxo


கிளாக்ஸோ குழந்தைகளை
புஷ்டியாக வளர்க்கிறது



என்னைப்போல!

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் பிரத்யேக பிரதிநிதிகள் :—
ஹெச். ஜே. பாஸ்டர் அண்டு கம்பெனி, லிமிடெட்
பம்பாய் - கல்கத்தா - மதராஸ் - லாஹூர்.

பாரன்ஸ்வொர்த் ரேடியோக்கள்



சமீப காலத்திய ரேடியோக்கள் சம சீதோஷ்ண நிலைகளுக்குச் சாதகமான ஸ்பெஷல் முறையில் செய்யப்பட்டவை

- 5-வால்வ் ஏ.ஸி.: 6-வால்வ் ஏ.ஸி./டி.ஸி.
- எல்லா வேவ்களிலும் உஷ்ணமடையாமல் ஒலிபரப்பை வழங்கும்.
- சிறந்த உழைப்பு.
- சரியாகத் தெரியுமாறும், நுணுக்கமாக ட்யூன் செய்யவும் உயர்த்தியமைக்கப்பட்ட "ஸ்லைட்ஸ் ரூல் டயல்" உள்ளது.
- கணீரென்ற ஒலி.
- கவர்ச்சிகரமான தோற்றம்.
- அப்பழுக்கற்ற ஒலி பெருக்கி.

★

சோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

இண்டர் நேஷனல் ரேடியோ கம்பெனி

"மலபார் வியூ", சௌபாதி : பம்பாய் - 7

தந்தி : "GRAMORADIO" :: போன் : 22490

ஸ்டாக்கிஸ்டுகள் :—**ப்ரீமியர் ரேடியோ எலெக்ட்ரானிக்ஸ்**


31, ஏகாம்பரேஸ்வரர் அக்ரஹாரம்

பார்க் டவுன் :: மதராஸ்

சிறந்த சரக்கு

பர்ரீஸ் பிஸ்கோத்துகள்

(U.S.A. தயாரிப்பு)



கரகரப்பானவை - புது மணமுள்ளவை - போஷாக்களிப்பவை- குழந்தைகள் விரும்பி வாங்குபவை - பெரியோர்கள் போற்றிப் புகழும் பிஸ்கோத்துகள்-சிறந்த அமெரிக்க பிஸ்கோத்துகள் - இப்பொழுது இந்தியாவில் கிடைக்கின்றன. மிக சிரத்தையோடு தயாரிக்கப்பட்ட பர்ரீஸ் பிஸ்கோத்துகள் பரிசுத்தத்துக்கும், தரத்துக்கும் உத்தரவாத முள்ளவை.

எமது மற்ற இனங்கள் :

டிக்கன்ஸ் கேரக்டர் அஸார்ட்மெண்ட் ஸிம்பில் ஸைமன் ஷுகர் வேபர்ஸ் சாம் ஜைவ்ஸ் குக்கீஸ், க்ரீமி வே குக்கீஸ்

குறைந்த உணவுப் பங்கீட்டை இந்தப் போஷாக்களிக்கும் மலிவான உயர்தர பிஸ்கோத்துகளால் அதிகப்படுத்துங்கள்.



ஸோல் ஏஜண்டு :

T. S. N. ஸ்வாமி

இண்டர்நேஷனல் பேபர் கம்பெனி
26, பிபின்ஸ் பில்டிங்
ஸர் பி. மேதா ரோடு, பம்பாய்
1/21, தங்கசாலை தெரு, சென்னை


சென்னை மாகாணத்திற்கு ஸ்டாக்கிஸ்டு களும் வினியோகஸ்தர்களும் :

தி ஆல் இந்தியா டிரேடிங் கம்பெனி
43-A, சாட்டன் பஜார் ரோடு
மதராஸ்-3



வாழ்த்துக்கள்

இந்தப் பண்டிகை காலத்தில் எமது அபிமானிகளுக்கு மனமார்ந்த ஆசிகள்! வருமாண்டு நம்மனைவருக்கும் சமாதானமும் நல்ல மனமும் நிறைந்தவோர் ஆண்டாக நிகழட்டுமாக!



தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

"எவர்ஸில்வர்" பாத்திரங்கள்

வெள்ளியின் அந்தமும் இரும்பின் உறுதியும் ஒருங்கே கொண்டவை

(பம்பாய் தேவிதயாள் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டவை)

வீடுகளுக்கும் விடுதிகளுக்கும்

ஹாஸ்டல்களுக்கும் ஹோட்டல்களுக்கும்

பிரகாசம் தருகின்ற பலவிதப் பாத்திரங்கள்

அடுக்குகள், அடுக்கு செட்டுகள், தட்டுக்கள், தாம்பாளங்கள், டம்ளர்கள், டபராக்கள், கிண்ணங்கள், கரண்டிகள்,

ஒரு முறை வந்து பாருங்கள்

சுதேச சமஸ்தானங்கள், இலங்கை உள்பட தென்னிந்தியாவிற்குப் பூரண விநியோகஸ்தர்கள்:

ஸாம்ஸன் & கோ.,

எஞ்ஜின், எலக்ட்ரிக் மோட்டார், பம்பு செட் டீலர்கள்

8/22, பிராட்வே, மதராஸ்

தந்தி: "BARAPASH"] [போன்: 4521

சித்தூர், செங்கல்பட்டு, வட ஆற்காடு, திருநெல்வேலி ஆகிய ஜில்லாக்களுக்கும், சுதேச சமஸ்தானங்கள், இலங்கை ஆகிய இடங்களுக்கும் சப்-டீலர்களாக விரும்புவோர் எழுதவும்.

*சித்ரா:
குறுகுறுவென்ற கருவிழிகள் . . .
மாசற்ற மதிவதனம் . . .

உங்கள் சருமத்திற்கு உங்களால் முடியுமான முக்கிய பராமரிப்பு, அதை செம்மையாகச் சுத்தம் செய்வதே யென்பது நீங்களும் அறிவீர்கள், இல்லையா? . . நறுமணங்கமழும் பாண்ட்ஸின் உதவியால், வதனத்தை சுத்தமாகவும் காந்தி யோங்கவும் வைத்துக் கொள்ளுங்கள்.

என்னே* அவளது எழில்! அவள் பாண்ட்ஸ் உபயோகிக்கிறாள்!



பாண்ட்ஸ் தினசரிமுறை



பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம்: தினம் இரண்டு வேளை விரல் நுனிகளால் கோல்ட் க்ரீம் மெதுவாகத் தடவி, முகத்தை செம்மையாகச் சுத்தம் செய்யுங்கள். பாண்ட்ஸ் டிஷ்யூவால் துடைத்துக் களையவும்.



பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்: பின்பு வானிஷிங் க்ரீம் தடவுங்கள். அது சருமத்திலுள் மறைகிறது - சருமத்திற்கு பாதுகாப்பளிக்கிறது.



பாண்ட்ஸ் பௌடர்: பின்னர் வேண்டுமானால் கொஞ்சம் பௌடரும் தடவிக் கொள்ளுங்கள். முகம் பூவிதழ்போன்ற மோகன காந்தியுடன் விளங்கும்.

பாண்ட்ஸ் க்ரீம்ஸ்

வியாபார விவரங்களுக்கு:
எல். டி. ஸெய்மூர் & கோ.
(இந்தியா) லிட்.
பம்பாய்-கல்கத்தா-காராச்சி-சென்னை.

Copyright: Pond's Extract Co. JWT.

கல்கி

பொருளடக்கம்

மலர் 7 இதழ் 22	டிசம்பர் 28	சர்வசித்து ௵ மார்கழி 13

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

இந்த நாளில் பாரதத்தாய் பெற்றளித்த வீரப் பெண்மணிகளில் ஒருவரான ஸ்ரீமதி அனசூயாபாய் காளே அவர்களை இந்த இதழ் அட்டையில் காண்கிறோம்.

இவர் மகாராஷ்டிர தேசத்தில் பிறந்தவர்; நாகபுரி வாசி; நெடும் பல காலமாகப் பெண் குலத்துக்குத் தொண்டு ஆற்றி வருகிறார்.

பெண் குலத்துக்குத் தொண்டு என்றால், ஜோராக நவீன முறையில் உடை உடுத்திக் கொண்டு, 'லிப் ஸ்டிக்' முதலிய நாகரிக சாதனங்களினால் அலங்காரப் படுத்திக்கொண்டு, கையில் ஒரு பையுடன், தினம் லேடீஸ் கிளப்புக்குப் போய்த் திரும்பி வரும் தொண்டு அல்ல இவர் செய்து வந்தது.

பெண் குலத்திலே கஷ்டமடைந்தவர்கள், அபாக்கியசாலிகள், நிராகரிக்கப்பட்டவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களுடைய இருண்ட வாழ்க்கையில் புதிய ஒளி காட்டும் தொண்டை இவர் செய்து வந்தார்.



ஒரு சமயம் சிமூர்-அஷ்டி என்னும் கிராமங்களுக்குப் போனார். அந்தக் கிராமங்களில் பல ஸ்திரீகள் தங்களுடைய கணவன்மார் மரண தண்டனையை எதிர்பார்த்துச் சிறையில் இருப்பது பற்றி முறையிட்டார்கள். 1942-புரட்சியில் ஈடு பட்டதாக மேற்படி கணவன்மார்மீது வழக்கு.

அந்தச் செய்தியை அறிந்ததிலிருந்து ஸ்ரீமதி அனசூயாபாய் காளே ஒரு நிமிஷம் சும்மா இருக்கவில்லை. மனுவுக்குமேல் மனுவும் விண்ணப்பத்துக்குமேல் விண்ணப்பமும் மகஜருக்கு மேல் மகஜரும் அனுப்பிக் கொண்டே யிருந்தார். கவர்னரையும் கவர்னர் ஜெனரலையும் இந்திய மந்திரியையும் தூங்க விடாமல் அடித்தார். பொது மக்களின் அமுங்கிப் போயிருந்த மனச் சாட்சியையும் கிளப்பிவிட்டார். கடைசியில், தாம் எடுத்த காரியத்தில் வெற்றி யடைந்தார். மரண தண்டனைக் குள்ளானவர்களின் உயிர் பிழைத்தது. அவர்களுடைய மனைவிமார்களின் மாங்கல்யமும் நெற்றிக் குங்குமமும் தப்பிப் பிழைத்தன.

இத்தகைய மாதர் திலகம், அகில இந்திய மாதர் மகாநாட்டில் தலைமை வகிப்பதற்காகச் சென்னைக்கு விஜயம் செய்திருக்கிறார். 29உ தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் அமைந்திருக்கும் பந்தலில் அகில இந்திய மாதர் மகாநாடு ஆரம்பமாகிறது; இன்னும் இரண்டு தினங்களும் தொடர்ந்து நடைபெறப் போகிறது. இந்திய நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஸ்ரீமதி ராஜகுமாரி அமிருத கௌர் முதலிய மாதர் பிரதிநிதிகள் விஜயம் செய்யப்போகிறார்கள்.

சென்னையிலுள்ள பெண்மணிகள் பூரணமாக ஒத்துழைத்து, மகாநாட்டை வெற்றிகரமாக நடத்தி வைப்பார்கள் என்று நம்புகிறோம்.

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 22

என்ன சேதி?

பாராட்டுகிறோம்

என். ஜி. ஓ. சங்கத்து நிர்வாகிகளைப் பாராட்டுகிறோம். நிலைமை அடியோடு மீறிப்போவதற்கு முன்னால் வேலை நிறுத்தத்தை நிறுத்தியதற்காகப் பெரிதும் பாராட்டுகிறோம். ஐம்பதினாயிரம் குடும்பங்களைப் பரிதவிக்க விடாமல் இந்தமட்டும் சகித்ததற்காக நன்றி செலுத்துகிறோம்.

வேலை நிறுத்தம் ஆரம்பியாமலே இருந்திருந்தால் ரொம்ப நன்றாயிருந்திருக்கும். ஏதோ ஆரம்பித்து விட்டபிறகு மூன்று நாளைக்குள் விஷயம் கெட்ட வெளிச்சமானதைக் கண்டவுடனேயாவது வேலை நிறுத்தத்தை முடிவு செய்திருக்கலாம். மேலும் நாலுநாள் காலதாமதம் செய்து விட்டார்கள். போனால் போகட்டும்; இந்த மட்டும் ஒரு வாரத்திற்குள்ளே சரியான காரியத்தைச் செய்தார்களே, அதற்காக ஐம்பதினாயிரம் குடும்பங்களின் சார்பாக வந்தனம் செலுத்துகிறோம்.

வியாக்யானம் எதற்கு?

என். ஜி. ஓ. சங்க நிர்வாகிகள் ஒரு சமரசப் பேச்சுக் கமிட்டியை நியமித்தார்கள். அவர்கள் பிரதமரைப் பார்த்து விட்டு, "எல்லாம் திருப்திகரம்; வேலைக்குத் திரும்பலாம்!" என்று சொன்னார்கள். அத்துடன் விட்டுவிடலா மல்லவா? அந்த அறிக்கைக்கு வியாக்யான அறிக்கை ஒன்று சங்கத் தலைவர் எதற்காக வெளியிட வேண்டும்? கொடுக்காத வாக்குறுதியைப் பற்றி ஏன் பிரஸ்தாபிக்க வேண்டும்? கொடுத்திருந்தாலும்தான் எதற்காக அதைக் குறிப்பிட வேண்டும்?

சர்க்கார் சிப்பந்திகள் மாயமான் வேட்டையாடினால் சர்க்கார் மட்டும் சும்மா இருந்துவிடுவார்களா? உடனே அவர்கள் "வாக்குறுதியும் இல்லை; ஒன்றும் இல்லை" என்று பதில் அறிக்கை விட்டு விட்டார்கள்.


வழியோடு போகிற சனியனை விலைக்கு வாங்கிக் கொண்ட கதைதான்!

வேண்டிக் கொள்கிறோம்!

மேற்படி வேலைநிறுத்த விஷயத்தில் சென்னை மந்திரிகள் கூடியவரை நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிறார்கள். கோபத்துக்கு இடம் கொடுத்துத் தாறுமாறான காரியம் செய்யவில்லை. 'இண்டர் வியூ' கொடுக்கவில்லை என்ற குறைக்குக் கூட இடம் வைக்காமல் 'இண்டர் வியூ'வும் கொடுத்து விட்டார்கள். பொதுவாக, பிரதம மந்திரியும் கனம் ஸ்ரீ பக்தவத்ஸலமும் மிகப் பொறுமையுடனும் மிகத் திறமையுடனும் நிலைமையைச் சமாளித்துச் சென்னை மாகாணத்தைப் பெருங் குழப்பத்திலிருந்து காப்பாற்றினார்கள். ஆத்திரப்பட்ட ஆலோசனைகளின்படி 'டிஸ்மிஸ்' செய்தல், 'கல்தா' கொடுத்தல் முதலிய காரியங்களில் இறங்கவில்லை.

ரொம்ப சந்தோஷம். மேலும் சிறிது பொறுமையைக் கடைப்பிடித்து இன்னும் கொஞ்சம் தாராள மனப்பான்மையுடனும் பெருந் தன்மையுடனும் நடந்து கொள்ளுங்கள் என்று வேண்டிக் கொள்கிறோம்.

வேலைநிறுத்தம் செய்த என். ஜி. ஓ. க்களில் பலர் 'சங்கக் கட்டுப்பாடு' என்னும் உணர்ச்சியினால் செய்து விட்டார்கள். வேலைநிறுத்தம் செய்யக்கூடாத தாசில்தார்



சுதந்திர இந்தியாவின் முதல் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் கல்கத்தாவுக்கு டிசம்பர் 15-ல் விஜயம் செய்தார். பாரதத்தாயின் உத்தமத் தவப் புதல்வரைப் பார்க்கவும் வரவேற்கவும் அவர் பேச்சைக் கேட்கவும் பத்து லட்சம் ஜனங்கள் கூடியிருந்த மகத்தான காட்சியை இந்தப் புகைப் படத்திலே காணலாம். உலகத்திலேயே இவ்வளவு மாபெரும் பொதுக் கூட்டம் இதுவரையில் கூடியதில்லையாம்! (ஒலிபெருக்கி சரியாக வேலை செய்யாததால் ஜவாஹர்லால்ஜி இந்தக் கூட்டத்தில் பேச முடியவில்லை என்ற செய்தியை நேயர்கள் தினப் பத்திரிகைகளில் பார்த்திருப்பார்கள்.)

—போட்டோ : பம்பாய் ஸ்டூடியோ, கல்கத்தா.

லப் மாஜிஸ்ட்ரேட் முதலியவர்களும் செய்து விட்டார்கள். ஆனாலும் இந்த ஒரு தடவை ஏதோ விட்டுப் பிடியுங்கள் என்று மந்திரிகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

இரண்டாம் முறையும் இப்படி ஏதாவது சேர்ந்தால், பிறகு கண்டிப்பான நடவடிக்கை எடுத்துக் கொள்வது பற்றி யாரும் குறை சொல்ல இடமிராது.

ஒரு வார்த்தை

வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கும் என். ஜி. ஓ. சங்கத்தின் நிர்வாகிகளுக்கும் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறோம். இனி நடக்கும் பேச்சு வார்த்தைகளில் தயவுசெய்து கொஞ்சம் நிதானமாக யோசித்து நடந்து கொள்ளுங்கள்.

'டிஸ்மிஸ்' செய்யப்படாமலும் சம்பளமும் அலவன்ஸும் குறையாமலும் இருக்கும் வரையில், உத்தியோக மாற்றம்—ஸ்தல மாற்றம் முதலிய சில்லறை நிர்வாக மாறுதல்களைச் சர்க்கார் கைக்கொண்டால் அதைப் பெரிது படுத்த வேண்டாம்; தயவு செய்து, கடுகை மலையாக்கிக் கிளர்ச்சி தொடங்க வேண்டாம். நிச்சயமாய் அதனால் நன்மை விளையாது.

"இரண்டு கையும் கொட்டினால்தான் சத்தம்" என்று சொல்வார்கள். ஒரு கட்சியார் நிதானமாக நடந்து கொண்டாலும் சில நாளைக்குள் நிலைமை சரியாகி விடும். என். ஜி. ஓ.க்கள் கொஞ்ச நாள் ஆத்திரப்படாமல் இருந்தால் அவர்களுடைய குறைகள் பெரும்பாலும் தீர்ந்து விடும் என்பது நிச்சயம்.

மாமணியைத் தோற்போமோ?

இராமர் இருந்த காலத்தில் இராவணனும் இருந்தான்.

கிருஷ்ணனும் தர்மபுத்திரரும் வாழ்ந்த காலத்தில் சிசுபாலனும் தந்தவக்கிரனும் துரியோதனனும் துச்சாதனனும் இருந்தார்கள்.

உலகத்தில் நன்மையும் தீமையும் எக்காலத்திலும் இணை பிரியாமல் வந்து கொண்டிருக்கின்றன. தீமையை வென்று நன்மை வெற்றி யடையும் போது நல்லவர்கள் மகிழ்ச்சியுறுவதும் இயற்கையா யிருந்து வருகிறது.

நாளது 1947-ம் வருஷத்தில் இந்தியா மகத்தான நன்மைகளை அடைந்தது; நினைக்கப் பயங்கரமான தீமைகளையும் அடைந்தது.

ஆயிரம் ஆண்டு அடிமைத் தனம் நீங்கி இவ் வருஷம் ஆகஸ்டு மாதம் 15உ இந்தியா சுதந்திரம் அடைந்தது; அதே சமயத்தில் சென்ற நூறு வருஷங்களாக ஒன்றுபட்டிருந்த தேசம் பிளக்கவும் பட்டது.

"வந்தது சுதந்திரம்!" என்று கோடிக்கணக்கான மக்கள் குதூகலமாக விழாக் கொண்டாடினார்கள். கொண்டாடி இரண்டு தினங்களுக்குள்ளே வட மேற்குப் பிரதேசத்திலிருந்து சொல்ல நாக் கூசும் செய்திகள், — எழுதப் பேனா நடுங்கும் செய்திகள், — வந்தன. வந்து, குதூகலத்தில் ஆழ்ந்திருந்த மக்களைத் துயரக்கடலில் மூழ்கச் செய்தன.

நாற்பது லட்சம் மக்கள் பாகிஸ்தானத்திலிருந்து இந்தியாவுக்கு வந்தார்கள். பதிலுக்கு நாற்பது லட்சம் மக்கள் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானத்துக்குச் சென்றார்கள்.

இரண்டு பகுதியிலும் எத்தனையோ ஆயிரம் பதினாயிரம் பேர் பயங்கரமாகக் கொல்லப்பட்டு, சிதைக்கப்பட்டு, யமனுலகம் சென்றார்கள்.

இந்தக் கோர சம்பவங்களைப் பற்றி ஓர் அமெரிக்கப் பத்திரிகையிலே வந்திருக்கும் விவரத்தைப் பார்த்தால், இந்தியனாய்ப் பிறந்த எவனும் அவமானத்தினால் தலை குனியாமலிருக்க முடியாது.

இராமருடைய தர்மராஜ்யம் நடந்த காலத்தில் நரமாமிச பட்சிணிகளான கோர ராட்சதர்களும் இருந்தார்களல்லவா என்பதை எண்ணிப் பார்த்துத்தான் நாம் ஒருவாறு ஆறுதல் அடைய வேண்டியிருக்கிறது.

எனினும், மேற்குறிப்பிட்ட பயங்கர சம்பவங்கள், அவமானப்படக் கூடிய நிகழ்ச்சிகள், மக்கள் பைசாசங்களாக மாறிய அதிசயங்கள் எல்லாம் நாட்டின் ஒரு மூலையிலேதான் நடந்தன.

இந்திய தேசத்தின் முக்காற்பங்கு பிரதேசம் பூரண சுதந்திரம் பெற்று அமைதியுடன் இருந்து வருகிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

பயங்கரப் பிசாசுகள் சிலகாலம் தலை விரித்தாடிக் கோர தாண்டவம் புரிந்து விட்டு அடங்கி விட்டன.

"இந்தியா சுதந்திரம் அடைந்தது" என்னும் நல்ல செய்தியை மட்டுந்தான் அடுத்த 1948-ம் வருஷத்துக்கு நாம் கொண்டு போகிறோம்.

இந்தியா சுதந்திரம் பெற்றது சாதாரண விஷயம் அல்ல; முப்பத்தைந்து கோடி மக்கள் ஒரே தேசமாக ஒரே அரசாங்கத்தின் கீழ் இருப்பது சாதாரண காரியம் அல்ல; நேற்று வரை அன்னிய அரசாங்கத்தின் கைதிகளாகச் சிறையிருந்த பண்டித ஜவாஹர்லால் ஜீ முதலிய நமது மாபெருந் தலைவர்கள் இன்று இந்தியாவை ஆட்சி புரிகிறார்கள் என்பதும் சாதாரண விஷயம் அல்ல.

"நடக்கவே நடக்காது" "இந்த ஜன்மத்தில் நாம் காணப் போவதில்லை" என்று எவ்வளவோ அறிவாளிகள் எல்லாம் எண்ணிய காரியம் நம் கண்முன் நடந்திருக்கிறது.

சாதாரணமாக ஒரு தேசத்தார் சுதந்திரத்தைப் பெறுவதற்காகவும், சுதந்

திரத்தைக் காப்பதற்காகவும் செய்யும் தியாகத்தில் பத்தில் ஒரு பங்குகூட நாம் சுதந்திரத்துக்காகச் செய்யவில்லை.

அப்படியிருந்தும் நமக்குச் சுதந்திரம் கிடைத்தது என்றால், நமது அரும்பெரும் தலைவரான மகாத்மா காந்தியின் ஆத்ம சக்தியை அதற்குக் காரணம் என்று சொல்லலாம்.

அயர்லாந்தின் தலைவர் டிவாலரா ரொம்ப சரியாகச் சொல்லியிருக்கிறார்:- "மற்ற தேசங்கள் சுதந்திரம் அடைவதற்குப் பட்ட பாடுகளையும் இந்தியா சுதந்திரம் அடைந்த முறையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்தியாவுக்கு மகாத்மா காந்தியின் மூலம் கடவுளே வழிகாட்டியிருக்கிறார் என்றே சொல்லவேண்டும்!"

சுதந்திரத்துக்கு ஆபத்து!

இவ்விதம் உலகம் வியக்கும்படியாகக் கிடைத்திருக்கும் அற்புதச் சுதந்திரத்தை நாம் காப்பாற்றிக் கொள்ளப் போகிறோமா அல்லது கைசோர விடப் போகிறோமா? - என்பதுதான் அடுத்த 1948-ம் ஆண்டில் இந்திய மக்கள் முன்னுள்ள முக்கிய பிரச்னை.

"ஓராயிர வருடம்
ஓய்ந்து கிடந்த பின்னர்
வாராது போல வந்த
மாமணியைத் தோற்போமோ?"

என்றார் கவியரசர் பாரதியார். இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் நேரக்கூடிய நிலைமையையும் முன் கூட்டியே தீர்க்க தரிசனத்தினால் உணர்ந்து பாடினார் அந்த மகாகவி.

வாராது வந்த மாமணியாகிய தேசத்தின் சுதந்திரத்தைக் காக்கவும் காக்கலாம்; தோற்கவும் தோற்கலாம்.

இரண்டும் இந்திய மக்களின் கையில் இருக்கிறது: அவர்கள் முன் ஜாக்கிரதையாயிருப்பதைப் பொறுத்திருக்கிறது; அவர்கள் செய்யப் போகும் காரியங்களைப் பொறுத்திருக்கிறது.

இந்தியா அடைந்திருக்கும் மகத்தான சுதந்திர பாக்கியத்துக்கு எந்தெந்த திசையிலிருந்து என்னென்ன வித ஆபத்துக்கள் வரலாம், அவற்றை எப்படித் தடுப்பது என்று முன்கூட்டியே யோசனை செய்து நடவடிக்கை எடுப்பதைப் பொறுத்திருக்கிறது.

இந்தியாவின் சுதந்திரத்துக்கு ஆபத்தா! அது என்ன ஆபத்து? எங்கிருந்து அது வரும்?

ஆம்: இந்திய சுதந்திரத்துக்கு ஆபத்துத்தான்! ஆயிரங்காலம் தவம் செய்தும் அரும்பாடு பட்டும் பெற்ற கிடைத்தற்கரிய செல்வமான சுதந்திர பாக்கியத்துக்கு ஆபத்துத்தான்!

இந்தியாவுக்கு வெளியிலிருந்து வரக்கூடிய ஆபத்தும் இருக்கிறது; உள்ளேயே தோன்றி வளர்ந்து பெரும் பூதமாகக் கூடிய ஆபத்தும் இருக்கிறது.

வெளி ஆபத்து பாகிஸ்தானிலிருந்து வரக்கூடும் என்று சொல்ல நாக் கூசுகிறது; பேனாவும் தயங்குகிறது. ஆயினும் அது உண்மை.

நேற்றுவரை நமது சகோதரர்களாயிருந்தவர்கள், நம்முடைய சம்மதத்தின் பேரில் இன்று நாட்டிலே ஒரு பகுதியைப் பெற்று அதற்குத் தனி அரசும் அடைந்தார்கள்.

ஆனால் அவர்கள் எதிர்பார்த்தபடி அந்தத் தனியரசில் சுகத்தையோ லாபத்தையோ காணவில்லை. எனவே ஏமாற்றம் அடைந்தார்கள்; மன எரிச்சலும் அடைந்திருக்கிறார்கள்.

இந்த ஏமாற்றத்துக்கும் எரிச்சலுக்கும் போக்குக் காட்டப் பாகிஸ்தான் தலைவர்கள், மேலும் துவேஷத்தையும் பகைமையையும் வளர்த்து யுத்தத்தையே கிளப்புவார்களோ என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது.

காஷ்மீர் சம்பவங்கள் மேற்படி சந்தேகத்துக்கு ஆதாரம் தருகின்றன.

யுத்தம் என்று ஏற்பட்டால், எது எப்படியாகும் என்று யாரும் சொல்ல முடியாது. அன்னிய நாடுகளில் எந்த நாடு எந்தக் கட்சியில் சேரும் என்றும் சொல்வதற்கில்லை.

பாகிஸ்தானையும் பிரிட்டனையும் எதிர்த்து இந்தியா போர் செய்ய நேரிடலாம். அல்லது பாகிஸ்தானையும், ஆப்கானிஸ்தானையும், ருஷியாவையும் எதிர்த்து இந்தியா யுத்தம் செய்யும்படியும் ஏற்படலாம்.

சுதந்திர இந்தியா எதற்கும் தயாராயிருக்க வேண்டும். சுதந்திரப் பாதுகாப்புக்கு வேண்டிய இராணுவ பலத்தைச் சேகரித்துக் கொள்ள வேண்டும். அயல் நாடுகளின் சிநேகத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். உள் நாட்டில் மக்களுக்குள் கட்டுப்பாட்டையும் தியாக உணர்ச்சியையும் ஓயாமல் வளர்த்து வரவேண்டும்.

யுத்தத்துக்குத் தயாராவது என்றால் அது சாதாரண காரியமல்ல. ஆயுதங்கள் வேண்டும்; ஆட்கள் வேண்டும்; மற்றும் எத்தனையோ தளவாட சாமான்கள் சேகரிக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாகப் பணம் நிறைய வேண்டும்.

பணம் வேண்டும் என்றால் தேசத்தில் செல்வம் பெருக வேண்டும். தேசத்தின் செல்வம் பெருகப் பலவகைத் தொழில்கள் செழிக்க வேண்டும். தொழில்கள் செழிக்க அனைவரும் இடைவிடாமல் உழைக்க வேண்டும்.

அதிகச் சம்பளம் கேட்கலாம்.

ஆனால் வேலை நிறுத்தம் என்ற பேச்சே உதவாது.

அதிக வசதிகள் கேட்கலாம்.

ஆனால் வேலை செய்யும் நேரத்தைக் குறைக்கும் பேச்சே உதவாது!

உலகத்திலே செல்வத்திற் சிறந்த அமெரிக்கா "வேலை நிறுத்தம் கூடாது" என்று சட்டம் செய்கிறது.

பிரிட்டனில், "அதிக நேரம் வேலை செய்யும் சட்டம்" நிறைவேறுகிறது.

ருஷியாவிலோ கேட்க வேண்டியதில்லை. வேலைநிறுத்தம் அங்கே தேசத் துரோகம்; அதிக நேரம் வேலை செய்வது அருமையான தேச சேவை.

மேற்படி தேசங்களிலேயே இப்படியானால் புதிதாகச் சுதந்திரம் பெற்ற இந்தியாவில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்ல வேண்டுமா?

ஜவாஹர்லால்ஜி, சர்தார் பட்டேல் முதலிய நமது அருமைத் தலைவர்கள் பிரதிதினமும் பதினெட்டு மணி நேரத்துக்குக் குறையாமல் வேலை செய்கிறார்கள் என்பதை மக்கள் அனைவரும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

போனால் மட்டும் போதாது!

வெளியிலேயிருந்து இந்திய சுதந்திரத்துக்கு வரக்கூடிய அபாயம் யுத்தம் என்று சொன்னோம்.

இந்தியாவின் உள்ளேயே தோன்றிச் சுதந்திரத்தை அழித்துவிடக் கூடிய அபாயம் பஞ்சம் என்று சொல்கிறோம்.

"பசி வந்திடப் பத்தும் பறந்து போம்" என்பது தமிழ் முதுமொழி.

பஞ்சத்தில் அடிபட்ட ஜனங்கள் "சுதந்திரமாவது, மண்ணாங் கட்டியாவது!" என்ற மனோபாவத்தை அடைவார்கள்.

அவர்களுக்குச் சுதந்திரத்தைக் காக்க வேண்டும் என்னும் ஊக்கம் ஏற்படாது. வெளிப் பகைவர்களை எதிர்த்து நிற்கும் திண்மை இராது.

"பழைய பிரிட்டிஷ் ஆட்சியே பரவாயில்லையே! சுயாட்சி அடைந்து என்ன பலனை நாம் கண்டோம்?" என்று நினைக்கவுந் தோன்றும்.

சுதந்திரமென்னும் மாமணியை இழந்து விடுவதற்கு மிகச் சௌகரியமான நிலைமை நாட்டில் ஏற்படும்.

பஞ்சம் வராமல் தடுப்பதற்கு இதுவரை பல முறைகளைக் கையாண்டு வந்தோம்; இப்போதும் கையாண்டு வருகிறோம்.

யுத்த காலத்தில் பஞ்சம் வந்தால் எவ்வளவு பெரிய அபாயம் என்பதை அறிந்திருந்த பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தார் பஞ்சத்தைத் தடுக்கச் சில முறைகளைக் கையாண்டார்கள்.

ரேஷன் ஏற்படுத்தினார்கள்; ரேஷனை அமுல் நடத்தக் கண்ட்ரோல்களை ஏற்படுத்தினார்கள். அதோடு பற்றாக் குறைக்கு ஈடு நிரப்ப வெளிநாடுகளிலிருந்து கூடிய மட்டும் தானியங்களையும் தருவித்தார்கள்.

சுதந்திரம் கிடைத்த பிறகும் இதுவரையில் மேற்கண்ட முறைகளையே நாம் கையாண்டு வந்தோம்.

ரேஷன் முறை—கண்ட்ரோல் முறைகளின் காரணமாகக் 'கறுப்பு மார்க்கெட்' என்னும் பயங்கர பூதம் வளர்ந்து கொண்டே வந்தது. சமூகத்தையே விழுங்கி விடுமோ என்ற பயம் உண்டாகும் அளவுக்கு வளர்ந்து விட்டது.

அயல் நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களைத் தருவித்ததினால் கோடி கோடி ரூபாய் இந்தியாவிலிருந்து வெளியே போய்க்கொண்டிருந்தது.

வருஷத்துக்கு நூறு கோடி ரூபாய் தேசம் நஷ்டம் அடைந்தது. வெளிநாட்டிலிருந்து அதிக விலைக்கு வாங்கி உள்நாட்டில் குறைந்த விலைக்கு விற்றதில் இந்திய சர்க்கார் 20 கோடி ரூபாய் நஷ்டமடைந்து வந்தார்கள்.

உணவுக்காகப் பணம் போய்க்கொண்டிருந்தபடியால், அயல் நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு அவசியம் தேவையாயுள்ள இயந்திரங்கள் முதலியவற்றை நம்மால் தருவித்துக் கொள்ள முடியவில்லை.

இப்படியாக மேற்படி நிலைமை வளர்ந்து கொண்டே போனதைப் பார்த்து மகாத்மா காந்தி எச்சரிக்கை செய்தார். அதை நமது மற்றத் தலைவர்கள் ஒப்புக் கொண்டார்கள்.

மக்களுக்கு உணவுப் பொருள் பகிர்ந்து கொடுக்கும் வேலையைச் சர்க்கார் நடத்தி வரும் வரையில், உள்நாட்டில் உணவு உற்பத்தி பெருகாது என்று முடிவு செய்தார்கள்.

எனவே, கொஞ்சங் கொஞ்சமாக ரேஷன் — கண்ட்ரோல் முறைகளைத்

தளர்த்திக் குறைத்து வந்து கடைசியில் அடியோடு எடுத்து விடுவதென்று நிர்மானித்தார்கள்.

இந்தப் புதிய முறையை நாளது 1947-ம் வருஷக் கடைசியில் அமுலுக்குக் கொண்டுவர இந்திய சர்க்காரும் மாகாண சர்க்கார்களும் ஆரம்பித்திருக்கிறார்கள்.

பரிகாரம் சரியான பரிகாரம் என்பதில் சந்தேகம் இல்லை.

ரேஷனும் கண்ட்ரோலும் போக வேண்டியதுதான். ஆனால் அவை போனால் மட்டும் போதாது.

அவை போகும்போதே, போய்க் கொண்டிருக்கையிலேயே, உணவு உற்பத்தி பெருக வேண்டும்.

ரேஷனும், கண்ட்ரோலும் (சில சமயம் கறுப்பு மார்க்கெட்டுங்கூட) மனிதர்கள் உயிரோடு இருப்பதற்கு உதவியாயிருக்கின்றன.

அவை மட்டும் போய், தேசத்தில் உணவு உற்பத்தி பெருகாவிட்டால், வந்து விட்டது ஆபத்து!

உழைத்தால் கடைத்தேறலாம்!

நூறு பேர் இருக்கும் ஊரில் நூற்றொருவருக்கு உணவுப் பொருள் இருந்தால், எந்தத் தொல்லையும் இல்லை. ரேஷன், விலைக் கட்டுப்பாடு ஒன்றும் தேவையில்லை. இயற்கையான விலைக்கு இயற்கையான முறையில் மக்கள் உணவுப் பொருள் பெறுவார்கள்.

நூறுபேர் உள்ள ஊரில் 90-பேருக்கு மட்டும் உணவுப் பொருள் இருந்தால் என்ன ஆகும் தெரியுமா?

பாக்கி 10 பேர்தான் பட்டினி கிடப்பார்கள் என்பது இல்லை.

"அப்புறம் தானியம் கிடைக்குமோ, கிடைக்காதோ?" என்ற பயத்தினால் சிலர் அவசரமாகப் போட்டியிட்டு வாங்குவார்கள். சிலர் அடுத்த வருஷத்துக்கும் சேர்த்து வாங்குவார்கள். இரண்டொருவர் பிற்பாடு கொள்ளை லாபம் அடிக்கும் ஆசையினால் தேவைக்கு அதிகம் வாங்கிக் கட்டி வைத்துக் கொள்வார்கள்.

ஆக, 100-க்கு 60 பேர் வரை பட்டினி கிடக்கும்படி நேர்ந்து விடலாம்.

வங்காளத்திலே பஞ்சம் வந்த காரணம் இதுவேதான்!

பிரிட்டிஷ் ஆட்சியிலே வங்காளத்துக்கு நேர்ந்த கதி, சுதந்திர இந்தியாவில் எந்த மாகாணத்துக்கும் நேரக்கூடாது. அப்படி நேர்ந்தால், சுதந்திரத்துக்கு ஒரு அரோஹரா!

மற்ற மாகாணங்களை மற்ற மாகாணத்தார் பார்த்துக் கொள்வார்கள். நமது சென்னை மாகாணத்தின் நிலையை நாம் கவனிப்போம்.

இந்த மாகாணம் துரதிர்ஷ்டவசமாகப் 'பற்றாக் குறை' மாகாணம். கோதாவரியும் கிருஷ்ணாவும் காவேரியும் பாய்ந்தும் இது பற்றாக் குறை மாகாணமாயிருக்கிறது!

வேண்டிய தானியத்துக்கு 100-க்கு 90 விதம் இந்தச் சென்னை மாகாணத்தில் விளைகிறது.

இந்த வருஷத்தைப் போல் பருவ மழை தவறிவிட்டால் விளைவு மேலும் 100-க்கு 5 பங்கு குறையலாம்.

இது அப்படி ஒன்றும் பயங்கரமான நிலைமை இல்லை,—செய்ய வேண்டிய காரியங்களை எல்லாரும் சரியாகச் செய்யும் பட்சத்தில்.

100-க்கு 15 விதம் உணவு உற்பத்தியை அதிகமாக்கினால் போதும். சாதாரண வருஷங்களுக்கு வேண்டிய தானியம் கிடைத்து வரும். அதோடு அவசரத்துக்குக் கையிருப்பிலே கொஞ்சம் வைத்துக் கொள்வதற்கும் போதிய தானியம் சேர்ந்து விடும்.

ஆம்; 100-க்கு 15 விதம் நமது மாகாணத்தில் தானிய உற்பத்தியை அதிகமாக்க வேண்டும்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் அவ்விதம் அதிகமாக்க வேண்டும்.

இதற்குச் சர்க்கார் உழைக்க வேண்டும்; சர்க்கார் அதிகாரிகளும் சிப்பந்திகளும் உழைக்க வேண்டும்; மக்கள் எல்லாரும் ஒத்துழைக்க வேண்டும்.

உழைத்தால் கடைத்தேறலாம்; உழைக்காவிட்டால் நாசமடையலாம்.

சர்க்கார் விவசாய இலாகா ஒன்று இருக்கிறது. அதில் பல உத்தியோகஸ்தர்களும் சிப்பந்திகளும் உத்தியோகம் பார்க்கிறார்கள்.

விவசாய டைரக்டராக ஒரு ஐ. சி. எஸ். காரரும் அவருக்குத் துணை டைரக்டராக ஒரு விவசாய என்ஜினியரும் பதவி வகிக்கிறார்கள்.

இவர்களுடைய திறமையான நிர்வாகத்தினால் முன்னைக் காட்டிலும் விவசாய இலாகா சிறிது சுறுசுறுப்பு அடைந்திருக்கிறது.

ஆனால் இன்னமும் ரிஷப வாகன வேகத்திலேதான் காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

ரயில் வேகமும் மோட்டார்காரின் வேகமும் ஆகாய விமான வேகமும் படிப் படியாக விவசாய இலாகா

அடைய வேண்டும். அதற்கு அவசியமான நடவடிக்கைகளை உடனே சென்னை மாகாண சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டும்.

விவசாய இலாகா சுருசுருப்பு அடைவது மட்டும் போதாது; அரசாங்க இயந்திரம் முழுவதையுமே அடுத்த வருஷத்தில் உணவு உற்பத்திப் பெருக்குக்காக உபயோகப்படுத்த வேண்டும்.

கலெக்டர்களுக்குப் புதுப் பொறுப்பு

ஒரு யோசனை சொல்கிறோம். அருமையான யோசனை என்று எண்ணித்தான் சொல்கிறோம்.

இந்த மாகாணத்தில் அடுத்த வருஷத்தில் 100-க்கு 10-விகிதம் உணவு உற்பத்தியை அதிகமாக்கும் பொறுப்பை, மிகத் திறமைசாலிகளும் 'தேவ ஜாதி' என்று கருதப்படுகிறவர்களுமான ஐ. சி. எஸ். வர்க்கத்தாரிடம் ஒப்புவிக்கும்படி சென்னை சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறோம்.

இத்தனை காலமும் பிரிட்டிஷ் ஆட்சியில் ஜில்லா கலெக்டர்களுடைய முக்கியமான கடமை, அந்தந்த ஜில்லாவில் வரி வருமானம் எல்லாத் துறையிலும் அதிகமாக்குவதாயிருந்தது.

'கலெக்டர்' என்ற பெயருக்கு அது பொருத்தமான வேலைதான்.

இனி, சுதந்திர இந்தியாவில் அவர்களுடைய வேலைப் பொறுப்பை மாற்றி அமைக்க வேண்டும்.

அந்தந்த ஜில்லாவில் உணவு உற்பத்தியை அதிகமாக்குவதே இனிமேல் ஜில்லா கலெக்டர்களின் முக்கிய பொறுப்பாயிருக்கவேண்டும்: அவர்கள் கீழே வேலை செய்யும் சகல சர்க்கார் அதிகாரிகளும் அந்த நோக்கத்துடனேயே வேலை செய்ய வேண்டும்.

எந்த ஜில்லாவில் இந்த வருஷத்தைக் காட்டிலும் அடுத்த வருஷத்தில் 100-க்கு 10 விகிதம் உணவு உற்பத்தி அதிகமாகிறதோ அந்த ஜில்லா கலெக்டருக்கு விசேஷ மரியாதை செய்து கௌரவப்படுத்துங்கள்.

அந்த ஜில்லாவில் வேலை பார்த்த எல்லா சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் சம்பளம் அதிகம் செய்யுங்கள்: ஒரு மாதச் சம்பளம் போனஸ் வேணுமானாலும் கொடுங்கள்!

அப்படிச் செய்யாத ஜில்லாவின் உத்தியோகஸ்தர்களுக்கு 'இந்த வருஷம் இன்கிரிமெண்ட் இல்லை!' என்று சொல்லி விடுங்கள்.

மேற்படி யோசனைக்கு நாம் 'காபி ரைட்' பாத்தியதை எதுவும் கொண்டாடவில்லை.

அதை அப்படியே எடுத்துக் கொண்டாலும் சரி; திருத்திக் கூட்டிக் கழித்து ஒப்புக் கொண்டாலும் சரி; அல்லது முற்றிலும் புதிய மாற்றுப் பிரேரணைகளைக் கைக் கொண்டாலும் சரிதான்.

எந்த வழியிலாவது நடக்க வேண்டிய முக்கியமான காரியம் இது:—

இந்த வருஷத்தைக் காட்டிலும் அடுத்த வருஷத்தில் சென்னை மாகாணத்தின் ஒவ்வொரு ஜில்லாவிலும் குறைந்தது 100-க்கு 10 விகிதம் உணவு உற்பத்தி அதிகமாக வேண்டும்.

1947-ல் பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக 1948-ல் இதை நாம் செய்யவேண்டும்.

இந்தப் பெரு முயற்சியில் சர்க்கார் மந்திரிகளும், சர்க்கார் அதிகாரிகளும், பொது மக்களும் ஒரு மனதுடன் ஒத்துழைக்க வேண்டும்.

இப்படிச் செய்து 'வாராது வந்த மாமணி'யைத் தோற்காமல் பாதுகாப்போமாக! அதற்கு வேண்டிய சக்தியை இறைவன் நமக்கு அருள்வாராக!

கல்கி பொங்கல் மலர்



கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் வண்ணம் உயர்ந்த ஆர்ட் காகிதத்தில் பல வர்ணச் சித்திரங்களுடன் பொங்கலன்று வெளிவருகிறது

விலை ரூ. 3—8—0

தபால் மூலம் பெற விரும்புவோர் தபால் செலவு உள்படக் கீழ்க்கண்டபடி அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதி ஒன்றுக்கு (உள்நாடு, இலங்கை) ரூ. 4—0—0

" பர்மா, மலேயா ரூ. 4—8—0

குறிப்பு:—30—12—47-க்குள் நமது காரியாலயத்துக்கு வந்து சேரும்படி தொகை அனுப்புவோருக்குத்தான் தபால் மூலம் மலர் அனுப்ப இயலும்.

தமிழ் விழா

முடியப்போகும் 1947-ம் ஆண்டில் தமிழ்த்தாய் பலவகையிலும் சிறப்புற்றாள். தமிழ் நாட்டின் கௌரவம் உயர்ந்தது. தமிழ் மக்களின் பண்பாடு மேன்மையுற்றது.

வருகின்ற 1948-ம் வருஷமோ பிறக்கும்போதே தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் தொண்டு செய்து கொண்டு பிறக்கப் போகிறது.

மூன்று சங்கங்கள் கண்டு முத்தமிழ் வளர்த்த மதுரைமா நகரில் ஜனவரி 1-ந் தேதியும் 2-ந் தேதியும் தமிழ்த் திருநாள் நடைபெறுகிறது.

திருநாளை நடத்துவதற்காக மதுரையில் ஸ்ரீ பி. டி. ராஜன் அவர்களைத் தலைவராகக் கொண்ட பல பிரமுகர்களும் தமிழன்பர்களும் அடங்கிய வரவேற்புக் கழகம் ஏற்பட்டிருக்கிறது. ஸ்ரீ என். எம். ஆர். சுப்பராமன் அவர்களும் இன்னும் மூன்று காரியதரிசிகளும் இடைவிடா ஊக்கத்துடன் திருநாளுக்கு வேண்டிய பணிகளைச் செய்து வருகிறார்கள்.

இந்திய சுதந்திர அரசாங்கத்தின் நிதி மந்திரி கனம் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் தமிழ் விழாவுக்குத் தலைமை வகிக்கிறார்கள். பிரதம மந்திரி கனம் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் விழாவை ஆரம்பித்து வைக்கிறார்கள். கனம் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் புத்தகக் காட்சியைத் திறந்து வைக்கிறார்கள்.

கனம் எம். பக்தவத்ஸலம் அவர்கள் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறுகிறது.

திருக்குறள் முதலான பழந்தமிழ் ஓலைச் சுவடிகளை யானையின் மீது வைத்து அலங்கரித்து ஊர்வலம் நடத்தப் போகிறார்கள்.

தமிழ்த்தாயை இப்படியெல்லாம் சிறப்பிக்கப் போகிறார்கள்.


• • •

தமிழ் விழாவில் மிக முக்கியமான நிகழ்ச்சி, தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் ஆரம்பித்திருக்கும் பரிசுத் திட்டத்தின்படி, நூலாசிரியர்களுக்குப் பரிசு வழங்குதல். அதாவது 1946-ம் ஆண்டில் தமிழில் வெளியான ஆறு சிறந்த நூல்களின் ஆசிரியர்களுக்குத் தலைக்கு ரூ. 500 வீதம் பரிசு வழங்க ஏற்பாடாகியிருக்கிறது.


சிறு கதை, நாவல், ஆராய்ச்சி, விஞ்ஞானம், கட்டுரை, பொருளாதாரம் என்னும் ஆறு துறைகளில் வெளியான சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்குவதென்று தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் முடிவு செய்து தனித் தனியே பஞ்சாயத்தாரையும் ஏற்படுத்தினார்கள். 1946-ல் வெளியான சுமார் 200 தமிழ் நூல்கள் பரிசுத் திட்டப் பரிசீலனைக்கு வந்தன. பஞ்சாயத்தார் ஆறு புத்தகங்களைப் பரிசுக்கு உரியனவாகத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள். குறிப்பிட்ட நூல்களை எழுதிய ஆசிரியர்களுக்குத் தமிழ் விழாவில் பரிசு வழங்கப்படும்.

விழாவின்போது நாவலர் திரு எஸ். சோமசுந்தர பாரதியார் முதலிய தமிழ்ப் பெரும் புலவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். தற்கால முறையில் தமிழ் வளர்க்கும் "சுதேசமித்திரன்" ஆசிரியர் ஸ்ரீ சி. ஆர். சீனிவாசன் முதலியவர்கள் பேசுவார்கள். சொற்பொழிவுகளுடன் இசைப் பொழிவுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 1உ இரவு இசையரசு திரு தண்டபாணி தேசிகரும், 2உ இரவு கான கலாதர மதுரை மணி ஐயரும் தமிழோடு இசை பாடப் போகிறார்கள்.

திருவிழாவின் இரண்டாம் நாள் மாலை கல்வி மந்திரி அவர்களால் பரிசு வழங்கப்படும். புது வருஷம் நல்ல சகுனத்துடன் இவ்வளவு மகிழ்ச்சிகரமாக ஆரம்பமாகிறது. இப்படி ஆரம்பமாகும் 1948-ம் வருஷத்துக்கு மங்களம் பாடும் காலம் வரும்போது தமிழ்த்தாயும், தமிழ் மக்களும் இன்னும் பல சிறப்புக்களை அடைந்திருப்பார்கள் என்று எதிர்பார்க்கலாமல்லவா?



சென்னையிலிருந்து பதினறு மைல் தூரத்தில் உள்ள பூனமல்லி என்னும் பூவிருந்தவல்லியில் டிசம்பர் 21உ ராஜாஜி பிறந்த தின வைபவத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். சென்னை மேல் சபைத் தலைவர் ஸ்ரீ ராமகிருஷ்ணராஜு தலைமை வகித்தார். "கல்கி" ஆசிரியர் ராஜாஜி படத்தைத் திறந்து வைத்தார். ஸ்ரீ சி. என். முத்துரங்க முதலியார், ஸ்ரீமதி நட்டியம்மாளு அம்மாள், ஸ்ரீ என். எஸ். வரதாச்சாரி,



சேலம் ஏ. சுப்பிரமணியம், ஸ்ரீ சுப்பய்யர், ஸ்ரீ ரகுராஜ பாரதி தம்பதிகள் ஆகியவர்கள் ராஜாஜியின் குண விசேஷங்களைப் பற்றிப் பேசினார்கள். கொத்தமங்கலம் சுப்பு தமது "காந்தி மகான் கதை"யிலிருந்து சில பகுதிகளைப் படித்துக் காட்டிச் சபையோரைக் களிக்கடலில் ஆழ்த்தினர். செங்கற்பட்டு ஜில்லா கலெக்டர் ஸ்ரீ எஸ். வெங்கடேசுவரன் ஐ. சி. எஸ். முதலிய ஜில்லா உத்தியோகஸ்தர்களும் பல பிரமுகர்



களும் விஜயம் செய்திருந்தார்கள். பூனமல்லி ஆலயத்தில் வீற்றிருக்கும் பெருமாளும் தக்க சமயத்தில் மேள வாத்திய முழக்கத்துடன் மாலைகளும் பிரஸாதங்களும் அனுப்பி வைத்தார். பூனமல்லி வக்கீல் ஸ்ரீ சேஷாச்சாரியார், தெரு வாலிப சங்கக் காரியதரிசி ஸ்ரீ பாலசுப்ரமண்யம் முதலிய அன்பர்களின் பெரு முயற்சியினால் பூனமல்லியில் நடந்த ராஜாஜி விழா ஒரு பெரிய வைபவமாக நடைபெற்றது.



ஆடல் பாடல்



"கர்நாடகம்"

இந்த மாதத்தில் தமிழ் நாடெங்கும் ராஜாஜி பிறந்த தினம் கொண்டாடினோம். சில நாளைக்கெல்லாம் ஸ்ரீராமர் பிறந்த தினத்தைக் கொண்டாடப் போகிறோம்.

ராஜாஜியின் பிறந்த தினம் சம்பந்தமாக அவருடைய ஜாதகத்தைப் பற்றிய சர்ச்சை நடந்தது. ராஜாஜி ஜனன விழா சம்பந்தமாக அரும்பெரும் தொண்டுகள் இயற்றிய "ஹிந்துஸ்தான்" பத்திரிகையில் ராஜாஜியின் ஜாதகம் வெளியாயிற்று.

ஆனால் அந்த ஜாதகம் அவ்வளவு சரியானதல்லவென்றும், பிறந்து பத்து வருஷத்துக்குப் பிறகு ஏதோ ஞாபகத்தின் பேரில் எழுதப்பட்டது என்றும், புனர்வஸு நட்சத்திரம் ரோஹிணியாக மாறிப் போயிருக்கிறது என்றும் ஒரு 'நம்பிக்கையான தகவல்' கிடைத்திருக்கிறது.

இத்தனை யுகங்களுக்குப் பிறகு ஸ்ரீராமருடைய ஜாதகத்தையும் சிலர் திட்டமாகத் தயாரித்து வெளியிட்டு வருகிறார்கள்.

ஒரு விஷயம் நிச்சயம். ஸ்ரீராமர் ஜாதகத்திலும் சரி, ராஜாஜி ஜாதகத்திலும் சரி, அவர்கள் பேரில் அநாவசியமாக அநேகர் சண்டைதொடங்குவார்கள் என்பதற்குரிய அம்சம் ஏதோ இருக்க வேண்டும்.

அவர்களுக்கு 'வேண்டியவர்'களாலும் 'வேண்டாதவர்'களாலும் ரொம்பத் தொல்லைக்கு உள்ளாவார்கள் என்பதற்குரிய அம்சமும் இருக்க வேண்டும்.

இராமர் விஷயத்திலே பாருங்கள். சொந்தத் தகப்பனார் அவரைக் காட்டுக்கு அனுப்பினார். கர்ப்பாசியான சீதை மாய



மானைத் தொடரும்படி அவரை அனுப்பிப் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாக்கினார்.

இவ்வளவுதானா? இராமர்பேரில் சண்டை துவக்கியவர்கள் எத்தனை பேர்? இவ்வளவு யுகம் ஆகியும் இன்றைக்குக்கூட அவர் பேரில் சிலர் சண்டை துவக்குகிறார்கள். இராமர் ஆரியர் என்றும், பூணூல் தரித்த சாமவேத பாரங்கத வேதியத் திராவிடனாகிய இராவணனை அவர் குரூரமாகக் கொன்றார் என்றும், பத்துத் தலைகளில் ஒன்றைக்கூட விட்டுவைக்கவில்லை என்றும் சிலர் இராமனை இன்றைக்கும் தாக்குகிறார்கள்!

இராமருடைய ஜாதகம் அப்படி! ஏன்? அவருடைய காலத்தில் அவருடைய சொந்தப் புதல்வர்களே இராமர் பேரில் யுத்தம் துவக்கினார்களே? இதற்கு என்ன சொல்கிறீர்கள்?

அப்படிப்பட்ட இராமனைப் போற்றி வணங்குகிறவர்களும் இந்த நாளில் இருக்கிறார்கள்! இராமர் பேரில் உள்ள பக்தியினால் இந்தியாவில் மீண்டும் "ராமராஜ்யம் வரவேண்டும்" என்று வேண்டுகிறவர்களும் இருக்கிறார்கள். அவர்களில் மகாத்மா காந்தியும் ஒருவர்.

ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இதோ "ராமராஜ்யம்" வந்து விட்டது என்பதைப் பத்திரிகைகளிலேயிருந்து தெரிந்து கொள்கிறோம். அதுவும் தமிழ் "ராம ராஜ்ய"மாக வந்திருக்கிறது.


ஹிந்தி "ராம ராஜ்யம்" முன்னே வந்து விட்டுப் போயிற்று! இப்போது தமிழ் "ராம ராஜ்யம்" வந்திருக்கிறது.

"ராம ராஜ்யம்" என்னும் ஸினிமா தமிழ் உருவத்தில் வந்திருப்பதைத்தான் சொல்கிறோம்.

* * *

மூன்று வருஷங்களுக்கு முன்னால் ஹிந்தி "ராம ராஜ்யம்" தமிழ்நாட்டுக்கு வந்தது. சென்னையிலேயே இருபது வாரத்துக்கு மேல் அபாரமாய் ஓடிற்று.

அதைக் குறித்து விமரிசனம் எழுதும்போது, "அபாரமாய் ஓடுவதற்கு எல்லா வகையிலும் தகுதியான படம்; மாசற்ற படம்; மகத்தான படம்" என்று அடைமொழிகளைக் கொடுத்து எழுதினோம்.



விமரிசனத்தை முடிக்கும்போது பின்வருமாறு குறிப்பிட்டிருந்தோம்:—

"சில டாக்கிகளைத் திரையில் பார்க்கும்போது, 'இந்த ஸினிமா, டாக்கி என்பதை என்னத்திற்காகக் கண்டு பிடித்தார்கள்? இதை அடியோடு ஒழித்து விட்டால் நலம்' என்று பலருக்குத் தோன்றுவதுண்டு. அத்தகைய வெறுப்புக்கு மாற்று இந்த 'ராம ராஜ்யம்' போன்ற படங்கள். 'இவ்வளவு அழகான - தூய்மையான - கலைச் சிறப்பு வாய்ந்த படங்கள் வருவதாயிருந்தால், ஸினிமா இருந்து விட்டுப் போகட்டும்' என்று சொல்லத் தோன்றும்."

இவ்வளவு தூரம் ஹிந்தி பாஷையிலேயே நம்மைப் பரவசப்படுத்திய "ராம ராஜ்யம்" படத்தை இப்போது தமிழிலே கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த நல்ல கைங்கரியத்தைத் தமிழ் நாட்டுக்குச் செய்தவர் ஸ்ரீ ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் அவர்கள்.

"நடிகர்கள் எல்லாரும் அந்தந்தச் சமயத்துக்கு ஏற்றபடி உணர்ச்சியுடன் நடிக்கிறார்கள். இதனால் பாஷை புரியாத குறை கூடத் தோன்றவில்லை" என்றும் மேற்படி விமரிசனத்தில் குறிப்பிட்டிருந்தோம். குறை "தோன்றவில்லை" என்றாலும் குறை இருக்கத்தான் செய்தது. மிக முக்கியமான உணர்ச்சி மிகுந்த கட்டங்களில் "ஸீதை என்ன சொல்கிறாள்?" "இராமர் என்ன சொல்கிறார்?" "குசலவர்கள் என்ன சொல்கிறார்கள்?" என்று தெரியாமல் கஷ்டப்பட்டுப் போனோம். அவர்கள் என்ன சொல்லியிருக்கக் கூடும் என்று நாம் யோசித்து முடிவதற்குள்ளே படம் வெகுதூரம் முன்னேறி நம்மைத் திணறச் செய்து விடும்.

அந்தக் குறையை ஸ்ரீ ஏ. வி. எம். நிவர்த்தி செய்து, "ராமராஜ்ய"த்தின் பாட்டுக்கள், சம்பாஷணைகள் எல்லாவற்றையும் தமிழ்ப் படுத்திப் பொருத்தமாக அமைத்து வெளியிட்டிருக்கிறார்.

* * *

இராமகதை அமரத்துவம் பொருந்தியது. பதினாயிரம் வருஷ காலமாகப் பாரத மக்கள் கேட்டு அநுபவித்து ஆனந்தித்து வருவது. நாமும் ஐந்து வயது முதல் தினந்தினம் இராமாயண கதையின் ஏதேனும் ஒரு பகுதியை ஏதேனும் ஒரு முறையில் கேட்டுக்கொண்டு வருகிறோம். ஆயினும் அலுக்கவில்லை; இன்னமும் கேட்கத் தோன்றுகிறது.

இராம கதையின் அநுபந்தம் போன்றது உத்தர காண்டம். சிலர் "வால்மீகி முனிவர் அதை இயற்றவில்லை" என்று சொல்கிறார்கள். அதனாலேதான் கம்பர் தமிழில் உத்தர காண்டம் பாடவில்லை என்கிறார்கள்.

உத்தர காண்டத்தின் முக்கிய பகுதியான லவகுசர்களின் கதையில் ஒரே ஒரு கலகலத்த பகுதி இருக்கிறது. ஒரு சலவைத் தொழிலாளி தன் இல்லாளைத் திட்டியதைக் கேட்டுவிட்டு இராமர் ஸீதையைக் காட்டுக்கு அனுப்பினார்; அதுவும் கர்ப்பமாயிருந்த காலத்தில் அவளைத் தனியாக வனத்தில் விட்டு வரப் பண்ணினார் என்பதைக் கொஞ்சம் நம்புவது கடினமாயிருக்கிறது.

தசரதருடைய அறுபதினாயிரம் மனைவிமார்களை நம்பினாலும் நம்பலாம்; இதை நம்புவது கஷ்டமாயிருக்கிறது. ஏனெனில், இராமனுடைய குண சித்திரத்துக்கு விரோதமாகத் தோன்றுகிறது.

அந்த ஒரு விஷயத்தை மட்டும் ஒருவாறு சமாளித்து விட்டோமானால்,

அப்புறம் கதைப் போக்கு அபாரம்; கற்பனையின் சிகரம்; உணர்ச்சியின் பிரளயம்.

வால்மீகியின் ஆசிரமத்தில் சீதை லவ குசர்களைப் பெற்றெடுப்பது, அவர்கள் வால்மீகியிடம் இராமாயண காவியத்தைக் கற்று இனிய குரலில் பாடுவது, அயோத்திக்குச் சென்று இராமன் முன்னுலேயே அரங்கேற்றுவது, சீதாதேவி எங்கே என்று கேட்பது, சீதாதேவியைக் காட்டுக்கு அனுப்பியது கேட்டு இராமரிடம் வெறுப்படைந்து திரும்புவது, அசுவமேதக் குதிரையைப் பிடித்துக் கட்டுவது, லக்ஷ்மணனுடன் போராடுவது, இராமர் வந்து தம் குழந்தைகளின் மீது அம்பெய்யப் போகும் தருணத்தில் சீதை குறுக்கிடுவது, பிறகு எல்லாருக்கும் எல்லா விஷயங்களும் தெரிந்து போவது, சீதை பூமிக்குள் செல்வது முதலிய சம்பவங்கள் கதை ரஸத்திலும் காவிய லட்சணத்திலும் தலைசிறந்து விளங்குகின்றன.

"ராமராஜ்யம்" சினிமாவில் மேற்படி சம்பவங்களை யெல்லாம் பொருத்தமாகக் கோர்த்து அமைத்து, சரியான பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து, அற்புதமான படமாகச் செய்திருக்கிறார்கள்.

• • •

அழகுக்கு அழகு செய்வது போல ஸ்ரீ ஏ. வி. எம். தமிழ்ப் படத்தில் இராமாயணத்தின் பூர்வ கதையைச் சேர்த்துச் சிறப்பித்திருக்கிறார். படம் தொடங்கியதும் ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாளின் குரல் "எனக்குன் இரு பதம்" என்னும் இராமாயண பதத்தைக் கேதாரகௌளை ராகத்தில் பாடக் கேட்கிறோம். பாட்டின் பொருளுக்கேற்ப இராமாயண சம்பவங்கள் நிழல் படங்களாகக் காட்டப்படுகின்றன. இராமர் அயோத்திக்கு வந்து மகுடம் சூடிக் கொள்ளும் கட்டத்தில் பாட்டு முடிந்ததும், இராமரும் சீதையும் அரண்மனைச் சபா மண்டபத்தில் கொலு வீற்றிருக்கும் அசல் படக் காட்சி ஆரம்பமாகிறது.

ஸ்ரீமதி பட்டம்மாளின் பாட்டு நன்றாயிருக்கிறது என்று சொல்ல வேண்டியதில்லை; பாட்டைப் போலவே படங்களின் அமைப்பும் முடிவிலே வரும் முத்தாய்ப்பும் மிக வாய்ப்பு என்று சொல்ல வேண்டும்.

படத்தில் வரும் மற்றப் பாட்டுக்களைத் தமிழில் ஸ்ரீமதி பகவதி முதலியவர்கள் பாடியிருக்கிறார்கள். இவையும் நன்றாகத்தான் இருக்கின்றன. சம்பாஷணையில் முக்காலே அரைக்கால் பகுதி பாத்திரங்களின் உதட்டு அசைவுக்குப் பொருத்தமாய் அமைந்திருக்கிறது. படத்தில் அதிகமாகப் பேசும் வால்மீகி முனிவரின் பெரிய தாடி, சம்பாஷணை மொழி பெயர்ப்புக்கு மிகவும் வசதி செய்திருக்கிறது. வால்மீகி வாழ்க! அவருடைய தாடியும் வாழ்க!

"ராமராஜ்யம்" படத்தை ஹிந்தியில் பார்த்தபோது அதிலிருந்த கலைத்திறனை நான் ரொம்பவும் அநுபவித்து மகிழ்ச்சி அடைந்தேன்; இரண்டாவது, மூன்றாவது முறை பார்த்தபோது கூடத்தான்.

ஆனால் தமிழ் "ராமராஜ்யம்" பார்த்தபோது அநுபவித்து மகிழ்ந்தேன் என்றெல்லாம் சொல்வதற்கில்லை. "மனதைப் பறிகொடுத்துப் பரவசமானேன்" என்றுதான் சொல்ல வேண்டும். ஐந்தாறு இடங்களில் தேகம் புல்லரித்தது; கண்ணீர் துளித்தது.

• • •

ஸ்ரீ ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் தமிழ் மக்களுக்கு ஓர் அரிய கலை விருந்தையும் பக்திப் பெரு நிதியையும் அளித்திருக்கிறார். அவருக்கு நமது நன்றி.

ஐந்தாவது ஆண்டு தமிழிசை விழா டிசம்பர் 23ல் சென்னை ஸெண்ட்மேரிஸ் மண்டபத்தில் மிகச் சிறப்பாக ஆரம்பமாயிற்று. கல்வி மந்திரி கனம் டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார் விழாவை ஆரம்பித்து வைத்தார். புது டில்லியிலிருந்து தமிழிசை விழாவுக்காக வந்திருந்த நிதி மந்திரி கனம் ஆர். கே. ஷண்முகம் செட்டியார், திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார், குமாரராஜா முத்தையா செட்டியார், திருவனந்தபுரம் டி. லக்ஷ்மணப் பிள்ளை, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ காமராஜ நாடார், ஸ்ரீ சி. என். முத்துரங்க முதலியார், கனம் எம். பக்தவத்ஸலம், கனம் ஏ. பி. ஷெட்டி, ஸ்ரீ வி. எஸ். தியாகராஜ முதலியார், ஸ்ரீ ஜி. பி. சுப்பையா, டாக்டர் திருமூர்த்தி, மாஜி ஷெரீப் ஸ்ரீ எஸ். ராமசாமி நாயுடு, ஸ்ரீ பி. சாம்பமூர்த்தி, ஷெரீப் ஜனாப் ஷாபி முகம்மது, ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார், ஸ்ரீ தண்டபாணி தேசிகர், ஸ்ரீ வெங்குராம ரோமணியார், ஸ்ரீ ஆதிகேசவலு நாயகர், ஸ்ரீ ராதாகிருஷ்ண பிள்ளை முதலிய பிரமுகர்களும், பெண்மணிகளும் விஜயம் செய்திருந்தார்கள். வரவேற்புப் பிரசங்கமும், கல்வி மந்திரியின் விழா ஆரம்பப் பிரசங்கமும், கனம் ஆர். கே. ஷண்முகம் அவர்களின் நன்றி யுரையும் முடிந்த பிறகு, குமாரி ஹேமா மாலினியின் பரத நாட்டியக் கச்சேரி விமரிசையாக நடைபெற்றது.

(மேலே: தமிழிசை விழா ஆரம்பத்தில் சபையின் தோற்றம். கீழே: தமிழிசை இயக்கத்தின் ஸ்தாபகரும், நிதி மந்திரி ஆர். கே. ஷண்முகம் செட்டியாரும், விழாவைத் தொடங்கி வைத்த கல்வி மந்திரியும் ஒரே குதூகலமாகக் காட்சி யளிக்கிறார்கள்.)

தமிழிசை விழா ஆரம்பம்



படிக்கப் பார்!

இசைக் கலை மர்மம்

[ஆசிரியர்: பிடில் வித்வான் ஸ்ரீனிவாச ஐயர்; கிடைக்குமிடம்: பிடில் ஸ்ரீனிவாசய்யர், 11, டாக்டர் ரங்காச்சாரி ரோடு, மயிலாப்பூர், சென்னை; விலை: ரூபாய் ஒன்று.]

இந்த வருஷத்துத் தமிழிசை விழாவை ஆரம்பித்து வைத்த கல்வி மந்திரி கனம் டி. எஸ். அவிநாசிலிங்கம் தமது பேச்சின் தொடக்கத்தில், "தாய்மார்களே! நண்பர்களே! தமிழ் இசையைப் பற்றி எதற்காகப் பேச வேண்டும் என்று எனக்கு விளங்கவில்லை!" என்று ஆரம்பித்தார்.

அருகிலிருந்த வரவேற்பு சபைத் தலைவர், "தாங்கள் வேண்டுமானால் பாடுங்கள்; எங்களுக்கு ஆட்சேபமில்லை!" என்று மெதுவாகச் சொன்னார்.

கல்வி மந்திரி குபீர் என்று சிரித்தார். சிரித்த காரணம் சபையோருக்கு விளங்காமல் திகைத்தார்கள்.

விஷயம் என்னவென்றால், தமிழ் இசையைப் பற்றியோ வேறு இசையைப் பற்றியோ எல்லாரும் பேசமுடியும்; ஆனால் எல்லாரும் பாட முடியாது!

பாட முடியாத காரணத்தினாலேதான் சங்கீத அபிமானிகள் சில சமயம் சங்கீதத்தைப் பற்றிப் பேசுகிறார்கள்.

சங்கீத வித்வான்களிலேயே சாரீர வசதி குறைந்து பாடக் கஷ்டப்படுகிறவர்கள் சங்கீதத்தைப் பற்றி அதிகமாகப் பேசத் தொடங்குவதைக் காணலாம்.

அப்படிச் சங்கீதத்தைப் பற்றிப் பேச விரும்புகிறவர்களுக்கெல்லாம் ஓர் அருமையான சாதனப் பொக்கிஷம் வேண்டுமென்றால், இந்த "இசைக் கலை மர்மம்" என்னும் புத்தகத்தை வாங்கிப் படியுங்கள். இந்தப் புத்தகத்தை நன்கு படித்து விஷயங்களையும் மனதில் வாங்கிக் கொண்டவர்களிடம் யாரும் சங்கீதக் கலை சம்பந்தமாகச் சர்ச்சை செய்து பிழைக்க முடியாது.

சங்கீதக் கலையின் ஜீவன் எது என்பதை இந்த நூல் நன்கு விளக்குகிறது. அதோடு சங்கீத உலகில் சங்கீதக் கலை சம்பந்தமாகப் பரவியிருக்கும் பல மூட நம்பிக்கைகளையும் பட்டவர்த்தனமாக்குகிறது.

தமிழிசைப் பாடல்கள்
(பதினைந்தாம் தொகுதி)

[இயற்றியவர்: திரு ம. ப. பெரியசாமி பி.ஏ. எல்.டி.; இசைப்படுத்தியவர்: திரு என். சிவராமகிருஷ்ண பாகவதர்; வெளியீடு: அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்; விலை: ரூ. 3.]

இந்த வருஷத்துத் தமிழிசை விழாவில் திரு தண்டபாணி தேசிகர் அரிகாம்போதியில் பாடிய "எங்கே தேடுகிறாய்?" என்னும் கீர்த்தனத்தைக் கேட்டவர்கள் ஸ்ரீ ம. ப. பெரியசாமி இந்தக் காலத்துச் சிறந்த சாஹித்ய கர்த்தாக்களில் ஒருவர் என்று ஒப்புக்கொள்வார்கள். இவருடைய சாஹித்யங்களில் சில முன்னம் அண்ணாமலைச் சர்வகலாசாலை வெளியிட்ட ஏழாந் தொகுதியாக வெளி வந்திருக்கின்றன.


பண்டித மணி கதிரேசச் செட்டியாரின் வாழ்த்துப் பாடலும் வித்யா ரத்னம் திரு பி. எஸ். சுப்பிரமண்ய சாஸ்திரி எம். ஏ. அவர்களுடைய முகவுரையும் வெளியாகியிருக்கும் இந்தப் பதினைந்தாம் தொகுதியில் மொத்தம் 75 கீர்த்தனங்கள் முறைப்படி ஸ்வரங்களுடன் பிரசுரமாகியிருக்கின்றன. இத்தொகுதியில் கனராகங்களிலும் அபூர்வ ராகங்களிலும் கீர்த்தனங்கள் இருக்கின்றன. ஆதி, சாயப்பு, ஜம்பை தாளக் கீர்த்தனங்களும் ஒன்றரை இடத்தில் அமைந்த மத்தியம காலக் கீர்த்தனங்களும் இருக்கின்றன.

கீர்த்தனங்களைப் பதிப்பித்திருப்பதில் பல்லவி, அநுபல்லவி, சரணம் என்னும் சொற்களுக்குப் பதிலாக முதனிலை, இடைநிலை, இறுதிநிலை என்னும் தொடர்களை உபயோகப் படுத்தியிருக்கிறார்கள். இது எதற்காக என்பது விளங்கவில்லை.


பல்லவி, அநுபல்லவி, சரணம் என்பவை தூய தமிழ்ச் சொற்களாகவே நமது செவியில் தொனிக்கின்றன. அப்படியே அவை வடமொழிச் சொற்களாயிருந்தபோதிலும், "பாக்ய சபரி" "புஷ்ப லதிகா" "நாக ஸ்வராவளி" "நவரஸ கன்னடா" முதலிய பச்சை சம்ஸ்கிருத ராகப் பெயர்களை ஒப்புக் கொண்டு விட்டு, பல்லவி அநுபல்லவியைத் தள்ளுவதில் பொருளே யில்லை. முதனிலை இடைநிலை என்னும் பிரதி பதங்கள் சரியான பொருளைக் குறிப்பிடவும் இல்லை. 'ஹாமில்டன் பிரிட்ஜ்' நாவிதத் தொழிலாளியைக் குறிப்பிடும் பெயராகி, பிறகு 'பார்பர்ஸ் பிரிட்ஜ்' என்று மொழிபெயர்க்கப்பட்ட கதையாகவே முடியும்.

உ ஐக்கிய தேச மகாசபையின் முன்னேற்றம்-1947.






உ அமெரிக்காவின் ஆசையும் பீதியும்-1947.



ஐரோப்பாவின் அவதி—1947



தலைவர்களைப் போற்றும் தமிழகம்-1947.





"இதோ இவர் தான் ஆனந்த் மிஸ்ரா...
இப்போதுதான் ஆபீசிலிருந்து விடுதிரும்புகிறார். நல்ல டீ ஒரு கோப்பை சாப்பிட விழைகிறார். ஆனால் பாவம், அது கிடைக்காது. ஏனெனில் கெட்டிலில் காய்ந்து கொண்டிருக்கும் வெந்நீர் நாள் பூராவும் காய்ந்து கொண்டேயிருந்தது. நல்ல தேயிலை பானத்துக்கு புதிதாகக்கொதித்த நீர் தேவை.
கோடிக்கணக்கான மக்கள் சோர்வை மாற்றி புத்துணர்ச்சிபெற தேயிலை பானம் அருந்துகின்றனர். ஆனால் தேயிலை பானம் அருந்தும் பலருக்கு நல்ல டீ எப்படி செய்வதென்பது தெரியாதது வருந்தத்தக்கது. நல்ல டீ தயாரிக்க செலவு ஏதும் அதிகமில்லை. இந்த சுலபமான முறைகளைக் கடைப்பிடிப்பதே போதுமானது. உங்கள் பணத்திற்கு முழு மதிப்பு பெறவும் உங்கள் டீ நறுமணம் மிகுந்ததாயிருக்கவும் இம்முறைகளை உங்கள் மனதில் பதியவைத்து விட்டிலும் சதா அனுசரிப்பது நலம்.
டீ
இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

தேனி நாடார் சரஸ்வதி உயர்தர கலாசாலை அபிவிருத்தி நிதிக்காக



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

★

ஆஸ்தான வித்வான்

மைசூர் டி. சௌடய்யா ... பிடில்

கல்பாத்தி ராமனுதன் ... மிருதங்கம்

ஆலங்குடி ராமச்சந்திரன் ... கடம்

20-2-48 வெள்ளி மாலை 5-30 மணிக்கு

தேனி, நாடார்

சரஸ்வதி ஹைஸ்கூல் காம்பவுண்டில்

ரஸிகமணி ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள்
தலைமை வகிப்பார்கள்

டிக்கெட்டுகள் : ரூ. 250/: 100/: 50/: 25/: 10/:

நாடார் சரஸ்வதி உயர்தரக் கலாசாலைக் கமிட்டி, தேனி

ஒலி பெருக்கி : திருச்சி ரேடியோ ஸேல்ஸ் & ஸர்விஸ்.

உஷ்ணத்தினல் ஏற்படும் புண்கள்


சுட்டப் புண்கள், இவைகள்

சீக்ரமாய் அபாயமின்றி சொஸ்தமாகின்றன



உஷ்ணத்தினல் ஏற்படும் புண்ணையோ அல்லது சுட்டப் புண்ணையோ ஒரு மெல்லிய துணியில் கனமாக ஜாம் பெக்கைத் தடவி கூடுங்கள். ஜாம்பெக்கி லுள்ள அதி சிறந்த மூலிகைத் தைலம் ரணத்தை ஆற்றி வலியையும் நீக்கும். சருமம் பிளந்திருந்தாலும் ஜாம்பெக் தோலை வளரவைத்து புண்ணையும் குணப்படுத்தும்.

சகல சரும நோய்களுக்கும் ரணங்களுக்கும் ஜாம்பெக் ஓர் இணையில்லா சஞ்சீவி.



Zam-Buk

உலகப் பிரசித்திப் பெற்ற மூலிகைக் களிம்பு

மிருகக் கொழுப்பின்மைக்கு உத்தரவாதம்

ஏஜண்டுகள் :—மெஸர்ஸ். தாதா & கோ., பி. டி. மதராஸ்

நாட்டுக்கு ஒரு புதல்வர்



ராகி

நான்காம் பாகம்

இந்திய நாட்டில் காந்தி மகானின் தலைமை ஏற்பட்டுப் பத்து ஆண்டுகள் ஆயின. 1929-ம் வருஷ இறுதியில் நடந்த அமிருதசரஸ் காங்கிரஸில் பூரண சுதந்திரமே காங்கிரஸின் இலட்சியம் என்று தீர்மானமாயிற்று. 1930-ம் வருஷ ஆரம்பத்தில் மகாத்மா காந்தி உப்பு சத்தியாக்கிரஹ இயக்கத்தைத் தொடங்கினார். நூறு தொண்டர்கள் அடங்கிய கோஷ்டியுடன் கால் நடையாகத் தண்டி என்னுமிடத்தில் உப்பு சத்தியாக்கிரஹம் செய்யப் புறப்பட்டார். அந்தப் பிரயாணத்தின் விவரங்கள் இந்தியா தேசத்திற்கே புத்துயிர் அளித்தன.

காந்திஜி காட்டிய வழியைப் பின்பற்றித் தமிழ் நாட்டிலும் ராஜாஜி வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரஹப் போராட்டத்தை ஆரம்பித்தார். திருச்சியில் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் அவர்களின் இல்லத்திலிருந்து நூறு சத்தியாக்கிரஹத் தொண்டர்கள் ராஜாஜியின் தலைமையில் கால் நடையாக யாத்திரை கிளம்பினார்கள்.

அந்த யாத்திரையின்போது தமிழ்நாடு என்றும் காணாத காட்சிகளைக் கண்டது.

சுமார் பதினைந்து நாட்கள் சத்தியாக்கிரஹப் படையினரின் யாத்திரை நடைபெற்றது. இந்த யாத்திரையின்போதுதான் ராஜாஜியின் தமிழ்ப் பேச்சுத் திறமை முதன் முதலாக நன்கு வெளியாயிற்று. மாபெரும் பொதுஜனக் கூட்டங்களில் தமிழிலே பேசி ஜனங்களைக் குலுங்கச் சிரிக்கும்படி செய்யவும், வாதத்துக்கு மேல் வாதமும் உதாரணத்துக்கு மேல் உதாரணமுமாகச் சொல்லி ஜனங்களின் மனதைக் கவரவும் ராஜாஜிக்கு ஆற்றல் உண்டு என்பது தெரிந்தது. ராஜாஜி அதுவரையில் திருச்செங்கோடு கிராமவாசிகளிடம் பேசியதைத் தவிர, அவ்வளவாகப் பெரிய பொதுஜனக் கூட்டங்களில் தமிழில் பேசவில்லை. அறிவாளிகளும் ஆங்கிலம் படித்தவர்களும் அடங்கிய கூட்டங்களிலேதான் தம்மால் பேசிச் சமாளிக்க முடியும் என்று எண்ணியிருந்தார். வேதாரண்ய யாத்திரையின் போது கிராமவாசிகளும் பாமர ஜனங்களும் ரஸித்துப் பரவசம் அடையும்படி பேசமுடியும் என்பதைக் கண்டார்.

ராஜாஜியின் பிரசங்க முறை ஜனங்களின் உணர்ச்சியைத் தூண்டி அறிவை மங்கச் செய்து மனதைக் கவரும் முறையல்ல. "ஆஹா! அந்தோ! தேசம் அடிமையில் ஆழ்ந்து கிடக்கிறதே! அதை நினைக்க நினைக்க என் நெஞ்சம் கரைகிறதே! கண்களிலே இரத்தக் கண்ணீர் வருகிறதே! மக்களே! எழுங்கள்! அன்னியரை விரட்டுங்கள்!" என்றெல்லாம் அவரால் பேச முடியாது. தம்முடைய கட்சி எதுவாயினும் அதைக் கேட்பவர்கள் அறிவினால் அதை ஒப்புக்கொள்ளும்படியாகக் காரணங்களை அடுக்கி உதாரண ரூபத்தில் மனதிலே பதியச் செய்வார். இந்த விதப் பேச்சினாலும் பதினாயிரக்கணக்கான பொது மக்களின் கருத்தைக் கவரலாம் என்பது ராஜாஜியின் வேதாரண்ய யாத்திரையின்போது தெளிவாயிற்று.

தஞ்சை ஜில்லா கலெக்டர் மிஸ்டர் தார்ன் துரை, ராஜாஜியின் தலைமையில் வரும் சத்தியாக்கிரஹப் படைக்கு உணவளித்தல் முதலிய உதவிகளைக் கிராமவாசிகள் செய்யக் கூடாது என்று உத்தரவு போட்டார். இந்த உத்தரவு காரணமாக ராஜாஜியின் யாத்திரை பெரும் முக்கியத்தை அடைந்தது. தார்ன் துரையின் உத்தரவைத் தாக்கியும் பரிகசித்தும் கண்டித்தும் ராஜாஜி செய்த பிரசங்கங்கள் ரஸிகர்களான தஞ்சை ஜில்லா வாசிகளைப்



........என்றும் காணாத காட்சிகளைத் தமிழ்நாடு கண்டது !

பெரிதும் அவருடைய பக்தர்களாகச் செய்து விட்டன. சாரன் துரையின் உத்தரவை ஒருவரும் பொருட்படுத்தவில்லை. ராஜாஜிக்கும் அவருடைய தலைமையில் வந்த தொண்டர்களுக்கும் தஞ்சை ஜில்லா கிராமங்களிலே இராஜோபசாரம் நடந்தது.

யாத்திரை முடிந்து வேதாரண்யத்தை அடைந்ததும், ராஜாஜியைச் சட்ட மறுப்புச் செய்ய முடியாமல் தடுத்து விடுவதென்று போலீஸார் கங்கணங் கட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சூழ்ச்சி பலிக்க முடியாதபடி ராஜாஜி முந்திக் கொண்டார். அதி காலையில் போலீஸார் விழித்தெழுந்து வருவதற்கு முன்னால் கடற்கரைக்குச் சென்று உப்பு எடுத்தார். போலீஸாரால் கைது செய்யப்பட்டு ஒரு வருஷம் சிறைத் தண்டனையும் அடைந்தார்.

* * *

ராஜாஜியின் தலைமை ஏற்பட்ட காலிவிருந்து அகில இந்தியாவிலும் தமிழ் நாட்டின் கௌரவம் உயர்ந்து வந்தது. 1930-ல் அந்தக் கௌரவம் உச்ச நிலைமையை அடைந்தது. தேசியப் போரில் மற்ற மாகாணங்களுக்கெல்லாம் தமிழகம் வழி காட்டக்கூடும் என்று ஏற்பட்டது. பம்பாய் நகரத்துக்கும் குஜராத்துக்கும் அடுத்தபடியாகச் சென்னை நகரமும் தமிழ் நாடும் 1930-ல் தலை சிறந்து நின்றன.

1931-ம் ஆண்டின் தொடக்கத்தில் விடுதலையான ராஜாஜி, அதுவரையில் சிறை புகாமலிருந்த ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்திக்குத் தைரியம் சொல்லி வற்புறுத்தி அவரைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போய்ச் சட்டமறுப்புச் செய்தார். இருவருமாகச் சிறை சென்று சிலநாள் இருந்து, விரைவிலேயே காந்தி - இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டபடியால் வெளியே வந்தார்கள்.

காந்தி - இர்வின் ஒப்பந்தம் அமுலில் இருந்த 1931-ம் வருஷத்தில் ராஜாஜி தமிழ் நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து தேசியப் பிரசாரமும் மதுவிலக்குப் பிரசாரமும் நடத்திய முறை சரித்திரத்தில் எழுத வேண்டியதாகும்.

மகாத்மா காந்தி காங்கிரஸின் ஏகப் பிரதிநிதியாக லண்டனில் நடந்த வட்ட மேஜை மகாநாட்டுக்குச் சென்று ஏமாற்றமடைந்து திரும்பி வந்தார். அவர் வருவதற்குள்ளேயே காந்தி - இர்வின் உடன்படிக்கையைத் தகர்த்துவிட பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் தீர்மானித்திருந்தது. அதற்குத் தகுந்தாற்போல் லார்ட் வில்லிங்டன் புது வைஸ்ராயாக வந்து சேர்ந்திருந்தார்.

மகாத்மா பம்பாயில் வந்து இறங்கிய ஒரு வாரத்துக்குள்ளே கைது செய்யப் பட்டார். எல்லா மாகாணத் தலைவர்களும் அவ்விதமே சிறைக்கு அனுப்பப்பட்டார்கள். ராஜாஜியும் நாலாவது தடவை சிறை

சென்றார். மிகக் கொடுமையான அடக்கு முறை தேசமெங்கும் தாண்டவ மாடிற்று. தேசமும் தேசிய இயக்கமும் உயிரிழந்தவை போல் ஸ்தம்பித்து நின்றன.

* * *

சில காலத்துக்கெல்லாம் பிரிட்டிஷ் பிரதம மந்திரி ராம்ஸே மக்டனால்டின் வகுப்புத் தீர்ப்பு வெளியாயிற்று. இதன்படி, ஹரிஜனங்களை ஹிந்து சமூகத்திலிருந்து தனியே பிரித்துத் தனித்தேர்தல் தொகுதிகள் வழங்கப்பட்டன. சிறையிலிருந்த மகாத்மா காந்தி இதை அறிந்தார். ஹிந்து சமூகத்தைப் பிளவு செய்யும் மேற்படி தீர்ப்பை எதிர்த்துச் சாகும் வரையில் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகத் தெரிவித்தார். பிரிட்டிஷ் சர்க்கார் உடனே மகாத்மாவை விடுதலை செய்து, ஹரிஜனத் தலைவர்களுடன் சமரசம் பேசி ஒப்பந்தம் செய்து கொள்ளும் பொறுப்பை ஹிந்து சமூகத் தலைவர்களின் மேலே சுமத்தினர்.

ஹரிஜனத் தலைவர்களிலே முக்கியமாக டாக்டர் அம்பேத்கரைச் சரிக்கட்ட வேண்டியிருந்தது. அது சுலபமான காரியமாயில்லை. டாக்டர் அம்பேத்கர் யாருடைய வாதத்திற்கும் மசியவில்லை; எதற்கும் செவி சாய்க்கவில்லை; மகாத்மாவின் உயிர் நஷ்டமாகி விடலாம் என்பதையும் அவர் பொருட்படுத்தவில்லை. தாம் பிடித்ததே பிடி என்று உட்கார்ந்திருந்தார்.

அப்படிப்பட்ட விடாக் கண்டரைச் சரிக்கட்டி ஒரு சமரச ஒப்பந்தத்துக்கு வரச் செய்தவர் நமது தலைவர் ராஜாஜியேயாவர். எத்தனையோ பேரின் வற்புறுத்தலுக்கும் வேண்டுதலுக்கும் இணங்காத அம்மனிதரை அரைமணி நேரப் பேச்சில் மசியச்செய்து தனித் தொகுதியை விட்டுக் கொடுக்கச் செய்தார். இதன் மூலம் மகாத்மாவின் உயிரை ஒரு நெருக்கடியான சமயத்தில் ராஜாஜி காப்பாற்றினார் என்பதை பாரத நாடு ஒரு நாளும் மறக்க முடியாது.

அந்தச் சமயம் பூனாவில் இருந்து பார்த்தவர்கள், ஒவ்வொரு நிமிஷமும் மகாத்மாவின் உயிர் ஒளி மங்கி வந்ததையும், நிமிஷத்துக்கு நிமிஷம் ஸ்ரீ தேவதாஸ் முதலியவர்கள் ஓடி வந்து "ஏதாவது முடிந்ததா?" என்று கேட்டதையும், சமரசப் பேச்சு நடத்திய தலைவர்கள் முகத்தில் ஈயாடாமல் உட்கார்ந்திருந்ததையும், கடைசியாக ராஜாஜி வந்து "காரியம் முடிந்தது!" என்று சொன்னவுடனே அனைவரும் தங்களை மறந்து களிக்கூத்தாடியதையும் வர்ணிக்கக் கேட்டோமானால், யாருக்கும் உடம்பு புல்லரிக்காமல் இருக்க முடியாது.

இந்த மாபெரும் சம்பவத்துக்குப் பிறகு ராஜாஜி தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டார். "ஹிந்து சமூகத்திலிருந்து தீண்டாமை என்னும் களங்கம் ஒழிக்கப்படும்" என்று மகாத்மா காந்தியும் மற்ற ஹிந்துத் தலைவர்களும் பூனாவில் ஹரிஜனத் தலைவர்களுக்கு வாக்குக் கொடுத்தார்கள். அந்த வாக்கை நிறைவேற்றுவதற்கு ராஜாஜி பெருமுயற்சி தொடங்கினார். மற்றக் காரியங்களையெல்லாம் மூட்டைகட்டி வைத்துவிட்டுத் தீண்டாமை விலக்குப் பிரசாரத்தில் இறங்கினார். இருபது வருஷத்துக்கு முன்னால், காந்தி மகானைப் பற்றித் தெரியாதிருந்த காலத்திலேயே தீண்டாமை விலக்கில் ஈடுபட்டுச் சாதி பகிஷ்காரத்துக்கு உள்ளானவர் இப்போது அந்த முயற்சியில் பரிபூரணமாய் ஈடுபடுவதற்குக் கேட்க வேண்டுமா?

இந்த நாட்களில் ராஜாஜியின் வாழ்க்கையிலேயே மிகவும் சந்தோஷமான ஒரு



"கல்கி" காரியாலயத்தில் "ராஜாஜி பவனம்" ராஜாஜியினால் திறந்து வைக்கப்பட்டது. (ஆனால் "ராஜாஜி பவனம்" என்னும் பெயர் அப்போது அவருக்குத் தெரியாது!)

காரியம் நடைபெற்றது. ராஜாஜியின் அருமைக் குமாரி ஸ்ரீமதி லக்ஷ்மிக்கும் காந்திஜியின் கடைசித் திருப் புதல்வர் ஸ்ரீ தேவதாஸ் காந்திக்கும் திருமணம் நடந்தது.

* * *


புதிய அரசியல் திட்டத்தை யொட்டி 1938-ல் மாகாண சட்டசபைத் தேர்தல்கள் வந்தன. சட்டசபைகளைக் கைப்பற்றும் கொள்கையை ஏற்கெனவே காங்கிரஸ் ஒப்புக் கொண்டாயிற்று. சென்னை மாகாண சட்டசபையில் காங்கிரஸ் கட்சிக்கு யார் தலைமை வகிப்பது என்ற கேள்வி எழுந்தது. சட்ட சபைத் திட்டத்தில் ஆதி காலத்திலிருந்து நம்பிக்கை கொண்ட ஸ்ரீ சத்திய மூர்த்திதான் மாகாண சட்ட சபையில் பிரவேசித்துத் தலைவராக வேண்டும் என்று ராஜாஜி அபிப்பிராயப் பட்டார். ஆனால் அதற்குச் சில காலத்துக்கு முன்பு மத்திய இந்திய சட்ட சபைத் தேர்தலில் ஸர் ஏ. ராமசாமி முதலியாரைத் தோற்கடித்து வெற்றிக் கொடி நாட்டியிருந்த ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி அதற்கு இஷ்டப்படவில்லை. மாகாண சட்ட சபைக்குத் தாம் வந்தால், ஆந்திரர்கள் தம்மைத் தலைவராக ஏற்றுக் கொள்வார்களா என்ற சந்தேகமும் அவருக்கு இருந்தது. எனவே, ராஜாஜிதான் மாகாண சட்ட சபைத் தேர்தலுக்கு நின்று பிரதம மந்திரியாக வேண்டுமென்று ஸ்ரீ சத்தியமூர்த்தி வற்புறுத்தினர்.

சட்ட சபைகளின் விஷயத்தில் ராஜாஜியின் அபிப்பிராயமும் அப்போது மாறிப் போயிருந்தது. "நிர்மாண திட்டங்களைப் பற்றி இவ்வளவு காலமும் பிரசாரம் செய்தாயிற்று; இனி சர்க்கார் சட்டங்களின் மூலமாகவே நிர்மாண திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்" என்று முடிவுக்கு வந்திருந்தார். புதிய அரசியலின்படி நிர்மாண திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அதிகாரம் மாகாண மந்திரிகளுக்கு உண்டு என்பதையும் அறிந்திருந்தார்.

எனவே, ஸ்ரீ சத்தியமூர்த்தியின் வற்புறுத்தலை ஒப்புக் கொண்டு மாகாண சட்ட சபையில் பிரவேசித்தார். கட்சித் தலைவராகவும் பிரதம மந்திரியாகவும் ஆனர்.

ஸ்ரீ சத்தியமூர்த்தியுடன் போட்டியிட்டு அவர் பிரதம மந்திரியாவதற்கு விடாமல் ராஜாஜி அப்பதவியைக் கைக்கொண்டதாகவும், பிற்பாடு ஸ்ரீ சத்தியமூர்த்தியை மந்திரி சபையில் சேர்த்துக் கொள்ள மறுத்து விட்டதாகவும் சிலர் சொல்லுவதை நான் கேட்டிருக்கிறேன். இந்த அபவாதத்தை இன்று வரையில் சிலர் திருப்பித் திருப்பிச் சொல்லி வருகிறார்கள். இப்படிச் சொல்லுகிறவர்கள் ராஜாஜியையோ ஸ்ரீ சத்தியமூர்த்தியையோ கொஞ்சமும் அறிந்தவர்கள் அல்ல என்பது நிச்சயம். இரண்டு பேர் மீதும் வீண் அவதூறு சொல்லுகிறார்கள் என்பதிலும் சந்தேகமில்லை.

1938-ல் சென்னைச் சட்டசபைத் தேர்தல் நடந்த சமயத்தில் ராஜாஜியும் ஸ்ரீ சத்தியமூர்த்தியும் மிகவும் நட்புரிமை கொண்டிருந்தார்கள். சட்டசபைத் தேர்தல் விஷயமாக அவர்களுக்குள் பேச்சு நடந்தபோது நானும் அருகில் இருக்க நேர்ந்தபடியால் இதைப்பற்றி நான் நிச்சயமாய்ச்



ரஸிகமணி டி. கே. சி. தலைமை வகித்த முதலாவது தமிழிசை மகாநாட்டுக்கு ராஜாஜி விஜயம் செய்தார்.

சொல்லக்கூடும். ஸ்ரீ சத்திய மூர்த்தியே சர்வகலாசாலைத் தொகுதியில் நிற்க வேண்டுமென்றும், சட்டசபையில் காங்கிரஸ் கட்சித் தலைவராகவும் பிரதம மந்திரியாகவும் வர வேண்டுமென்றும் ராஜாஜி திரும்பத் திரும்பச் சொன்னதையும், ஸ்ரீ சத்தியமூர்த்தி அதை மறுத்து ராஜாஜிதான் நிற்க வேண்டுமென்று வற்புறுத்தியதையும் நான் அறிவேன். ஸ்ரீ சத்திய மூர்த்தியின் மூலமாகச் சில நிர்மாண வேலைகளை நடத்திவைக்க வேண்டுமென்று ராஜாஜி எண்ணியிருந்தார். ஸ்ரீ சத்தியமூர்த்தி சென்னைச் சட்ட சபைக்கு நிற்க மறுத்து விட்டபடியால், மேற்படி காரியங்களைத் தாமே செய்யும் நோக்கத்துடன் ராஜாஜி சர்வகலாசாலைத் தொகுதியில் தேர்தலுக்கு நின்றார்.



தூத்துக்குடியில் திரு வ. உ. சிதம்பரனார் ஞாபகார்த்த நிதியை ராஜாஜி ஆரம்பித்து வைக்கிறார்.

ராஜாஜி பிரதம மந்திரியான பிறகு ஸ்ரீ சத்திய மூர்த்திக்கு மந்திரி சபையில் இடம் கொடுக்க மறுத்தார் என்பதும் பெரும் பொய்யாகும். எந்த நிமிஷத்திலும் தமது மந்திரி சபையில் ஸ்ரீ சத்திய மூர்த்திக்கு இடங் கொடுக்க ராஜாஜி தயாராயிருந்தது மட்டுமல்ல; பல முறை வற்புறுத்தி அழைத்ததும் உண்டு என்பதை நானே நேரில் அறிந்திருக்கிறேன்.

• • •

ராஜாஜி தமது வாழ்க்கையில் கைக்கொண்டு ஒழுகும் சிநேக தர்மத்தைப்பற்றி இங்கே கொஞ்சம் சொல்லுதல் பொருத்தமாயிருக்கும்.

“ஒரு தடவை சிநேகிதரானால் வாழ்நாள் முழுதும் சிநேகிதர்” என்பது ராஜாஜி கடைப்பிடிக்கும் சிநேக தர்மம். அவரால் சிநேகம் செய்யப்பட்டவர்களை ஒருகாலும் அவர் மறப்பதில்லை.

அரசியல் வேற்றுமைகளோ வாழ்க்கைத் தரங்களில் மாறுபாடுகளோ, சிநேகத்தைப் பாதிக்க அவர் இடங் கொடுப்பதில்லை.

சேலத்தில் இளம் வக்கீலாயிருந்த காலத்தில் ஸர் டி. விஜயராகவாச்சாரியாருடன் அவருக்கு நெருங்கிய நட்பு உண்டாயிற்று. அந்த நட்பு நாளது வரையில் நீடித்திருக்கிறது. ஸர் டி. வி. யைத் தவிர, அவருடைய குடும்பத்தார் எல்லாருமே ராஜாஜியைத் தங்கள் உற்ற பந்துவாக நாளது வரையில் கருதி வருகிறார்கள்.

ஒரு தடவை நண்பர் ஆனவர்கள் தம்மை விட்டுப் போக முயற்சித்தாலும் அதற்கு ராஜாஜி இலேசில் இடங் கொடுப்பதில்லை.

ஸ்ரீ ஈ. வே. ராமசாமியாரும் ராஜாஜியும் ஒரு சமயம் உற்ற நண்பர்களாயிருந்தார்கள். அரசியல் வாழ்க்கையிலும் பரிபூரணமாக ஒத்துழைத்தார்கள்.

ஒரு சமயம் தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டியில் ஏதோ ஒரு பிரேரணை வந்தது. அதை ராஜாஜி விரும்பவில்லை. “நாயக்கர்! இந்தப் பிரேரணையைத் தாங்கள் எதிர்த்துப் பேசவேண்டும்!” என்றார். “ஆகட்டும்; ஆனால் என்ன காரணங்களுக்காக எதிர்க்கச் சொல்கிறீர்கள்?” என்று ஸ்ரீ ஈ. வே. ரா. கேட்டார். “முதலில் எதிர்த்துப் பேசுங்கள். அப்புறம் காரணங்களைச் சொல்கிறேன். இப்போது நேரமில்லை” என்றார் ஆச்சாரியார். நாயக்கர் பிரேரணையை எதிர்த்துப் பேச ஆரம்பித்தார். பேசப் பேச, பிரேரணைக்கு எதிரான வாதங்கள் எல்லாம் ஸ்ரீ ராமசாமி நாயக்கருக்குத் தோன்றிக் கொண்டேயிருந்தன. தோன்றியதையெல்லாம் சொல்லிக் கொண்டே போனார். அவருடைய பேச்சின் பயனாகப் பிரேரணை தோற்றும் போயிற்று.

பிறகு, ஸ்ரீ ஈ. வே. ரா. “சரி, பிரேரணை தோற்று விட்டது; இப்போது காரணங்களைச் சொல்லுங்கள்!” என்றார்.

"நீங்கள்தான் எல்லாக் காரணங்களையும் சொல்லி விட்டீர்களே? அவைதான் என் மனதிலும் இருந்தன!" என்றார் ராஜாஜி.

இவ்வளவு அந்யோந்யமா யிருந்தவர்கள் விதி வசத்தினால் பிற்காலத்தில் அரசியலில் வட துருவத்தையும் தென் துருவத்தையும் போல் அகன்று மாறுபட்டார்கள். ஆனாலும் அரசியல் வேற்றுமை சிநேகத்தைப் பாதிக்க ராஜாஜி விடவில்லை. எப்போதாவது கோயமுத்தூர்ப் பக்கம் போனால் ஈரோட்டில் இறங்கி ஸ்ரீ ராமசாமியாரைச் சந்தித்துவிட்டுப் போவார். இதைப் பற்றி 'பரிசுத்த' காங்கிரஸ் வாதிகள் புகார் கூறுவதை அவர் இலட்சியம் செய்வதில்லை.

* * *

காலஞ் சென்ற ஸர் டி. சிவஞானம் பிள்ளை அவர்களைப்பற்றி நேயர்கள் பலர் அறிந்திருப்பார்கள். பலகாலம் டெபுடி கலெக்டர் உத்தியோகம் பார்த்தார். உத்தியோகம் விட்டு நீங்கிய பிறகு அரசியலில் பிரவேசித்தார். ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து சட்டசபை சென்று இரட்டை யாட்சியில் மூன்று வருஷம் மந்திரியாகவும் இருந்தார். அடுத்த தேர்தலிலே தோல்வி யடைந்து சில காலத்துக் கெல்லாம் காலமானதும் நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

சேலத்தில் ஸ்ரீ டி. சிவஞானம் பிள்ளை டெபுடி கலெக்டரா யிருந்தபோது அவருடன் ஸி. ஆர். நட்புக் கொண்டார். ஸ்ரீ சிவஞானம் பிள்ளையின் குழந்தைகள் ஸி. ஆர். வீட்டிலேயே வளர்ந்தார்கள். அவ்வளவு நெருங்கிய சிநேகிதம்.

சில மாதங்களுக்கு முன்பு நான் இராஜபாளையம் சென்றிருந்தபோது கேள்விப் பட்ட ஒரு சம்பவத்தைச் சொல்லுகிறேன்.

இராஜபாளையத்தில் ஸ்ரீ ராமச்சந்திரம் பிள்ளை என்று ஒரு பெரிய பண்ணையார் இருக்கிறார். ராஜாஜி காங்கிரஸ் பிரசாரத்துக்காகப் பல வருஷங்களுக்கு முன்பு இராஜபாளையம் சென்றிருந்த போது, பண்ணையார் வீட்டுக்கு அவரை அழைத்துச் சென்றார்கள். சிறிது நேரம் எல்லாருமாகப் பேசிக் கொண்டிருந்த பிறகு, "பண்ணையார்! உங்கள் வீட்டு ஸ்திரீகள் எங்கே இருக்கிறார்கள்?" என்று கேட்டார் ஸி. ஆர்.

இராஜபாளையத்து ராஜாக்கள் வீட்டில் கோஷாமுறை அமுலில் இருக்கிறது. இது காரணமாகப் பண்ணையார் வீட்டிலும் ஏறக்குறைய அப்படியே.

பண்ணையார், ஸ்திரீகள் வசித்த தனி வீட்டைச் சுட்டிக் காட்டினார். ஸி. ஆர். எழுந்து விரைவாக அந்தப் பக்கம் போனார். எல்லாருக்கும் ஒரே வியப்பு. சற்றுப் பொறுத்துப் பண்ணையாரும் போனார்.

ஸி. ஆர். வருவதை வீட்டுக்குள்ளிருந்து பார்த்த பண்ணையாரின் மனைவி "அப்பா!" என்று இரைந்து கூப்பிட்டுக்கொண்டே விரைந்து வெளியே வந்து அவருக்கு நமஸ்கரித்தாள். ஆச்சாரியார் அந்த அம்மாளுடைய க்ஷேமலாபங்களை விசாரித்த பிறகு, பண்ணையாரைப் பார்த்து, "பண்ணையார்! தங்கள் மாமனார் ஸர் டி. சிவஞானம் பிள்ளை காலமாகிவிட்டார் என்று தங்கள் மனைவியை அலட்சியம் செய்ய வேண்டாம். இந்தக் குழந்தை எனக்கும் மகள்தான். ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்றார். பிறகு பண்ணையாரின் மனைவி தான் குழந்தைப் பிராயத்தில் பல வருஷம் ராஜாஜி வீட்டிலேயே வளர்ந்தது பற்றிக் கணவருக்குத் தெரிவித்தார்.

சுமார் இருபது வருஷங்களுக்கு முன்னால் நடந்த இந்தச் சம்பவத்தைப் பற்றி இராஜபாளையத்து நண்பர் ஒருவர் இன்னமும் நீங்காத அதிசயத்துடன் எனக்குச் சொன்னார். அவருடைய மனதில் மேற்படி சம்பவம் அவ்வளவாகப் பதிந்து போயிருந்தது.

ராஜாஜி கடைப்பிடிக்கும் சிநேக தர்மத்துக்கு இன்னும் ஓர் உதாரணம் சொல்ல விரும்புகிறேன். ரஸிகமணி டி. கே. சி. அவர்கள் எப்போதும் காங்கிரஸ் வாதியா யிருந்ததில்லை. சில காலம் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்ததுண்டு; உத்தியோகமும் பார்த்ததுண்டு. ஆயினும் சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பு ரஸிகமணியும் ராஜாஜியும் சந்தித்து ஒரு நாள் இலக்கியம் — கவிதை சம்பந்தமாகப் பேசியவுடனே நெடுங் காலத்து நண்பர்களைப் போல் நெருக்கமாகி விட்டார்கள்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்"

என்னும் வள்ளுவர் பெருமான் வாக்குக்கு ரஸிகமணி—ராஜாஜியின் நட்பு ஒரு சிறந்த உதாரணம் என்று சொல்லலாம்.

மகாத்மா காந்தி சென்னைக்கு விஜயம் செய்திருந்தபோது, ரஸிகமணியை மகாத்மாவுக்கு ராஜாஜி அறிமுகம் செய்து வைத்தார். அப்போது, "அறுபது பிராயத்துக்குப் பிறகு இவரோடு நான் சிநேகமானேன்.

எனினும் இவர்தான் இன்றைக்கு என் சிநேகிதர்கள் எல்லாரிலும் அந்தியந்த சிநேகிதர்'' என்றார். இந்த உதாரணங்களிலிருந்து நட்பு விஷயத்தில் ராஜாஜியின் இதயப் பண்பு எத்தகையது என்பது ஒருவாறு வெளியாகிறதல்லவா?

* * *

ஆனால் எவ்வளவுதான் நெருங்கிய நட்பாயிருந்தாலும், உயிர்க்குயிரான சிநேகிதராயிருந்தாலும், பொதுக் காரியங்களில் சிநேகம் குறுக்கிடுவதற்கு ராஜாஜி இடம் கொடுப்பதில்லை. பொது வாழ்க்கையில் பதவி வகிக்கும்போது, அந்தப் பதவியின் மூலமாகச் சிநேகிதர்களுக்கு எந்தவித நன்மையும் உதவியும் அவர் செய்ய மாட்டார். இது அவர் கடைப் பிடிக்கும் பொது வாழ்க்கையின் தர்மம். சிநேகிதர்களுக்குப் பதவி மூலமாக உதவி செய்ய மாட்டார்; உறவினருக்குச் செய்யவே மாட்டார். ஒரு சிபார்சுக் கடிதங்கூடக் கொடுக்க மாட்டார்!


ஆனால் இந்த நேர்மை நெறி,—பொது வாழ்வு தர்மம், — பலருக்கு அர்த்தமாவதில்லை. "மற்றச் சமயங்களில் எவ்வளவோ தேனொழுகப் பேசுகிறாரே? உதவி செய்வதற்குச் சந்தர்ப்பம் வந்திருக்கும்போது உதவிசெய்ய மறுக்கிறாரே?" என்று மனஸ்தாபப்படுவார்கள். "என்ன கல்நெஞ்சர் இவர்? இதயமே கிடையாது இவருக்கு!" என்றும் சொல்வார்கள். என்ன சொல்லி என்ன? இந்த விஷயத்தில் ராஜாஜியைத் திருத்தவும் முடியாது; மாற்றவும் முடியாது. கொஞ்சம் நிதானமாக — சுய நலத்தை மறந்து — யோசித்துப் பார்த்தோமானால், இந்தப் பண்புதான் ராஜாஜியின் மேன்மைக்கெல்லாம் அடிப்படை என்பதை அறியலாம். இந்தக் குண விசேஷத்துக்காக அவரைப்பாராட்ட வேண்டுமே தவிர, புகார் செய்வது நியாயமல்ல என்பதையும் தெரிந்துகொள்ளலாம்.

ஆனால் அவ்வளவு நிதானமாக யோசித்துப் பார்க்க இந்தக் காலத்தில் பொறுமை யாருக்கு இருக்கிறது? பொறுமை இல்லாதவர்கள் எல்லாரும் ராஜாஜியை விரோதிக்கத் தொடங்கி விடுகிறார்கள்!

ராஜாஜியை இன்னும் சிலர் "பெரிய தந்திரக்காரர்" என்று சொல்லுவதும் உண்டு. அவர் தந்திரக்காரர் என்பது உண்மையாயிருந்து, அந்தச் சக்தியைச் சுயநலத்துக்கும் பயன் படுத்தக் கூடியவராயிருந்தால், அடடா! காரியங்களின் போக்கு எப்படி எப்படியெல்லாம் இருந்திருக்கும்? தென்னாட்டில் அவரைப் போன்ற 'பாபுலர்' தலைவர் இல்லையென்று பெயர் வாங்கி அதை நிலை நிறுத்திக்கொண்டிருக்க மாட்டாரா? இத்தனை பேரின் கோபத்துக்கும் எதிர்ப்புக்கும் ஆளாகியிருக்க மாட்டார் அல்லவா?

* * *

விட்ட இடத்திற்கு மறுபடியும் வருகிறேன். ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்களிடம் ராஜாஜி எவ்வளவு உண்மையான அபிமானம் கொண்டிருந்தார் என்பதை நான் அறிவேன். உப்பு சத்தியாக்கிரஹ இயக்கத்தின்போது ஸ்ரீ சத்தியமூர்த்தி ஒதுங்கி நின்றால் அவருடைய அரசியல் வாழ்க்கையில் ஒரு பெரிய குறையாயிருக்குமென்று நேரில் அவரைத் தேடிச் சென்று சட்ட மறுப்புக்கு அழைத்துச் சென்றதை அறிவேன். அதற்குப் பிறகு பத்து வருஷ காலம் அதாவது 1940 வரையில் ராஜாஜி, ஸ்ரீ சத்தியமூர்த்தி ஆகிய இருவரிடமும் பழகும் சந்தர்ப்பம் எனக்கு வாய்த்திருந்தது. இந்தப் பத்து வருஷமும் அவர்கள் சொந்த முறையிலும் அரசியலிலும் மனமொத்த சிநேகிதர்களாகவே யிருந்தார்கள். 1941-க்குப் பிறகுதான் நிலைமை மாறியது.



டாக்டர் சுப்பராயன் 'மைனர்' ஜமீனரா யிருந்தபோது அவரிடம் ராஜாஜி அன்பு கொண்டார். இன்றளவும் அந்த அன்பு மாறாமல் நீடித்திருக்கிறது.

* * *

இரண்டு வருஷம் ராஜாஜி பிரதம மந்திரியாக இருந்த காலத்தில் ஒன்றன்பின் ஒன்றாக அவர் செய்து வந்த

மகத்தான காரியங்கள் இந்தியா தேசத்தையே பிரமிக்கச் செய்தன.

மதுரை மீனாட்சி ஆலயத்தையும் பழனியாண்டவர் கோயிலையும் ஹரிஜனங்களுக்குத் திறந்து விட்டார். எல்லாக் கோயில்களையும் திறப்பதற்கு மசோதா தயாரித்துச் சட்டமாக்கி வைத்தார்.

முதல் வருஷம் சேலம் ஜில்லாவிலும் அடுத்த வருஷம் இன்னும் மூன்று ஜில்லாக்களிலும் மதுவிலக்குச் செய்தார். மாகாண முழுவதிலும் மது விலக்கைக் கொண்டு வருவதற்குச் சட்டம் இயற்றினார்.

பௌண்ட் ரோட்டின் மத்தியில் இந்தியாவின் அவமானத்துக்கு அறிகுறியாக நின்ற கர்னல் நீலன் சிலையை ஒரே இரவில் அப்புறப் படுத்திக் கண்காட்சிச் சாலைக்கு அனுப்பினார். அதன்மூலம் இந்திய மக்களின் சுயமரியாதையை நிலைநாட்டினார்.

ராஜாஜி அந்த நாளில் கொண்டுவந்து நிறைவேற்றிய சட்டங்களில் விவசாயக் கடன் நிவாரணச் சட்டம் மிகவும் முக்கியமானதொன்றாகும். பொது உடைமைக்காரர்களும் ஸோஷலிஸ்டுகளும் இருபது வருஷப் பிரசாரத்தினால் சாதித்திருப்பதைக் காட்டிலும் பன்மடங்கு ஏழைகளுக்கு உதவும் காரியத்தை மேற்படி சட்டத்தின் மூலமாக ராஜாஜி செய்தார். அச் சட்டத்தின் பலனாகப் பல கோடி ரூபாய்கள் வட்டி வாங்கும் பணக்காரர்களின் கையிலிருந்து ஏழை விவசாயிகள் - குடியானவர்களின் கைக்கு கோடியாக மாறியது.

இந்த மாதிரியான பல காரியங்களினால் சென்னை மாகாணத்தின் நிர்வாகம் இந்தியாவுக்கே ஓர் எடுத்துக் காட்டாக இருந்து வந்தது. மற்ற மாகாணங்கள் எல்லாம் சென்னையைப் பின்பற்ற வேண்டும் என்று முயன்றன. பஞ்சாபில் பல வருஷ காலம் பிரதம மந்திரியாயிருந்த ஸர் ஸிக்கந்தர் ஹயத்கான்; "இந்தியாவிலேயே சென்னை மாகாணத்தில் ராஜாஜியின் நிர்வாகத்துக்கு அடுத்தபடியாகப் பஞ்சாப் மாகாணத்தில் என்னுடைய நிர்வாகந்தான் சிறந்து விளங்குகிறது!" என்று ஒரு சமயம் கூறினார். இம்மாதிரி எல்லா மாகாணங்களும் சென்னைக்கு முதல் ஸ்தானத்தைக் கொடுத்துவிட்டு இரண்டாவது ஸ்தானத்துக்கே போட்டியிட்டன.

* * *

நிர்வாகத்தில் முதன்மையாக இருந்தது போலவே, மந்திரி பதவிகளை விட வேண்டுமென்று காங்கிரஸ் தீர்மானம் செய்தவுடனே ராஜிநாமா செய்வதிலும் ராஜாஜி முதன்மையாக இருந்தார். கையில் அரைகுறையாக இருந்த காரியங்களையெல்லாம் இரவு பகல் இடைவிடாமல் பார்த்து முடித்து விட்டு மற்ற எந்த மாகாண மந்திரி சபையும் ராஜிநாமா செய்வதற்கு முன்னால் ராஜாஜி ராஜிநாமா செய்து விட்டுத் தனி முறைச் சத்தியாக்கிரஹமும் செய்தார்.

ராஜாஜியைச் சிறைக்கு அனுப்ப நேர்ந்த பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் ஜனாப் அப்பாஸ் அலி கான் கண்ணில் நீர் ததும்பப் பகவத்கீதை சுலோகம் சொல்லித் தீர்ப்புக் கூறிய சம்பவத்தை அக்காலத்துப் பத்திரிகைகளைப் படித்த நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

இவ்வாறு சென்னை மாகாணத்தின் பெயரும் தமிழ் நாட்டின் பெருமையும் மிகச் சிறந்து மேலோங்கி நிலையிலிருந்த நாளிலேயே இந்த வரலாற்றையும் முடித்து விடலாம். பின்னால் நடந்த சம்பவங்கள் எல்லாம் பெரும்பாலும் நேயர்களுக்கு ஞாபகம் இருக்கும். மறந்து போன சம்பவங்களை இப்போது நினைவூட்ட வேண்டிய அவசியமும் இல்லை.

"பாட்டுக்கு ஒரு புலவர் பாரதியார்" என்பது கவிமணியின் திருவாக்கு. அது போலவே "நாட்டுக்கு ஒரு புதல்வர் ராஜாஜி" என்று சொல்லி மகிழத் தமிழ் மக்கள் உரிமை கொண்டவர்கள்.


தமிழ் நாட்டுக்குப் பேரும் பெருமையும் சீரும் சிறப்பும் அளித்த மாபெரும் தலைவரின் பிறந்த தினம் முதன் முதலாக இந்தப் புண்ணியம் செய்த 1947-ம் வருஷத்தில் தமிழ்நாடெங்கும் கொண்டாடப் படுகிறது. இன்னும் பல்லாண்டு பல்லாண்டு நமது தலைவர் வாழ்ந்திருக்கவும் இன்னும் பற்பல பிறந்த தினங்களை நாம் கொண்டாடவும் இறைவன் அருள் புரிவானாக.

பாரதி நினைவு மலர் ★

விலை ரூ. 2/-

* ராஜாஜியின் 70-வது பிறந்ததின விழாவை முன்னிட்டு, மூன்று ரூபாயிலிருந்து இரண்டு ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

கல்கி காரியாலயம், கீழ்ப்பாக்கம் :: சென்னை



அபிவிருத்தியில் பங்காளிகள்

நவயுக வாயிற்படிமீது காலூன்றி, நாம் இன்றைய பாரதநாட்டில் மாபெரும் மாறுதல்களை நேருக்கு நேர் கண்ணுறுகிறோம். வலிமையும் ஒன்றிப்பு மோங்கி, மேலான இருக்கை, உணவு . . . உடுக்கை வசதிகளுடன் சிறந்து விளங்குமோர் தேசமாகும் நம் கண்முன் திகழ்வது. அப்படிப்பட்ட நாளைய நாட்டிலும் பக்கிங்ஹாம் & கர்னாடிக் மில்லுகளின் நீடித்துழைக்கும், கவர்ச்சிவாய்ந்த, உயர்ந்த நெசவுத் தரங்களுக்கு நல்ல கிராக்கி யிருக்கத்தான் செய்யுமென்கிற நம்பிக்கை மேன்மேலும் எங்கள் அபிவிருத்திக்குத் தூண்டுகோலாக அமைகிறது.

இன்று ரசாயனங்களுக்கும், சாயங்களுக்கு முள்ள பஞ்சம் எங்கள் உற்பத்தியை மட்டுப்படுத்தியே வருகிறது - ஆவசிய துணி நிறுசுகள் மட்டுமே எங்களால் இப்பொழுதும் தயாரிக்க இயலுகிறது. ஆனால் அந்நெசவுத் தரங்கள், எழுபதாண்டுகளாக எங்கள் தயாரிப்புகளைச் சிறப்பித்துள்ள நேரிய தன்மையிலும், உழைப்பிலும், யாவற்றிற்கு மேலான பெறுமதியிலும் கிஞ்சித்தேனும் குறைபாடுகளின்றியே விளங்குகின்றன.

இப்பொழுது, கிடைக்கும் சொற்ப துணிமணிகளை கூடுமான காலம் உழைக்கச் செய்ய வேண்டியிருப்பதால், நீங்கள் இந்தப் பெயர்போன வர்த்தக முத்திரைகளுடைய டிரில்கள், ட்வில்கள், லாங்க்ளாத்து, ஷர்ட்டிங்குகள், ஷூட்டிங்குகள், டங்கேரிகள் ஆகியவைகளை வாங்குவது முன்னைப் பொழுதையும் விட ஆவசியமாகிறது:

பக்கிங்ஹாம் & கர்னாடிக் மில்ஸ் (சென்னை)

மானேஜிங் ஏஜண்டுகள்: **பின்னி & கோ: ([illegible]) லிட்.**



என் தோல்வி

மணி

கலாசாலையில் காலை வைத்த தினத்திலிருந்தே நான் நாகரிகத்தில் ஒருபடி உயர்ந்து விட்டதாக எண்ணினேன். ஆண்களுக்கு மத்தியில் படிக்க முதலில் எனக்குக் கொஞ்சம் சங்கோசமாய்த்தான் இருந்தது. நாளடைவில் என்னுடன் படித்த பெண்கள் மிடுக்காகவும், அலட்சியமாகவும் ஆண்களுடன் தலை நிமிர்ந்து பழகுவதைக் கண்டு நானும் தைரியம் கொண்டேன். என் இருதயத்திலிருந்த ஆசைகளையெல்லாம் நிறைவேற்றிக் கொள்ள — புதுமையான நாகரிக வாழ்க்கையை நடத்த — எனக்கு அப்போது சந்தர்ப்பம் கிடைத்தது.

அம்புஜம் என் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். படிப்பில் அவளுக்கு அலாதியான பிரியம். ஓய்வு நேரங்களில் கூட ஏதாவது புத்தகங்களை வைத்துக் கொண்டு படித்துக் கொண்டே இருப்பாள். கதர்ப் புடவை கட்டிக்கொண்டு, நேர்வகிடு எடுத்துக் கொண்டு, நெற்றியில் குங்குமப் பொட்டுடன் அவள் சர்வ சாதாரணமாய் வருவது எனக்கு என்னவோபோல் இருக்கும். நாகரிகம் மிகுந்த இந்தக் காலத்தில் கரடுமுரடான கதர்த் துணியும் அநாகரிகமான நேர்வகிடும் யாருக்கு வேண்டி இருக்கிறது?

அவள் பணக்காரியாய் இருந்தும் இப்படி வேஷம் போடுவது எனக்குத் தெரிந்தபோது, அவளை எப்படியாவது நாகரிகமாக்கிவிட வேண்டும் என்று நான் தீர்மானித்து விட்டேன். ஒரு காரியத்தைச் சாதிப்பதில் எவ்வளவு ஆசை இருக்கிறதோ அவ்வளவு பிடிவாதமும் இருக்க வேண்டுமல்லவா? ஆகவே, அவளுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தேன்.

அன்று மத்தியானம், அவளுடன் தனித்துப் பேசவேண்டும் என்ற எண்ணத்தோடு நான் சென்றேன். அவள் வெளி வராந்தாவில் கையில் ஒரு தமிழ்ப் புத்தகத்தோடு உலாவிக் கொண்டிருந்தாள்.

"இதைவிட மில்டனையோ, ஷேக்ஸ்பியரையோ படித்தால் பிரயோஜனப் படாதா?" என்றேன்.

"இதைப் படிப்பதினால் ஒன்றும் பிரயோசனமில்லை என்று யார் உனக்குச் சொன்னது?" என்று அவள் என்னைத் திருப்பிக் கேட்டாள்.

எனக்கென்னமோ தமிழ்ப் புத்தகங்களைப் படிப்பது அநாகரிகமாகத்தான் தோன்றிற்று. ஓர் ஆங்கிலப் புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டிருந்தாலே அது ஒரு தனிப்பட்ட பெருமை அல்லவா?

"அம்புஜம்! இப்படி நீ அநாகரிகமாக இருப்பது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை......!" என்றேன்.

"நம்மை அடிமைகளாக நினைத்து, நம் உரிமைகளைக் காலில் போட்டு நசுக்கிய ஒரு கூட்டத்தார் கொண்டு வந்த பொருளைப் பார்த்து மயங்கிப்போய், நாகரிகம் அடைந்து விட்டதாக எண்ணிக் கொண்டு திரிவதைப் போன்ற முட்டாள்தனம் வேறில்லை......!" என்றாள் அவள்.

"அம்புஜம்! நீ இப்படியெல்லாம் பேசினால் நான் உன்னைச் சும்மா விட்டு விடுவேன் என்று நினைக்காதே! எப்படியும்

"உன்னைத் திருத்தியே விடுவேன்......" என்றேன் பிடிவாதமாக.

அப்போது அவன் என்னை அலட்சியமாகப் பார்த்த பார்வை 'சரி பார்ப்போம்' என்று சவால் கூறுவது போலிருந்தது. நான் திரும்பினேன்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு அம்புஜம் என்னுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தான். இப்படி அவன் மாறி விட்டதற்கு என்னுடைய நடை உடை பாவனைதான் காரணம் என்று நான் எண்ணினேன். எங்களுடைய போக்கிலும் கொள்கைகளிலும் பெரிய வித்தியாசங்கள் இருந்தபோதிலும், நாங்கள் மிகவும் அந்நியோன்னியமாகவே பழக ஆரம்பித்தோம்.

• • •

ஒருநாள் மாலை நான் என் அறையிலிருந்த ரேடியோவைத் திருப்பிவிட்டு, சோபாவில் உட்கார்ந்து, மேஜையின் மீதிருந்த ஆங்கிலப் பத்திரிகை ஒன்றை எடுத்துப் பிரித்தேன்.

"ஜானகி!" என்று கூப்பிட்டுக் கொண்டே அம்புஜம் உள்ளே வந்தான். நான் எழுந்து அவனுடைய கையைப் பிடித்துக் குலுக்க முயற்சித்தேன். அதற்குள் அவன் தன் இரண்டு கரங்களையும் கூப்பி, "நமஸ்காரம்" என்று சொன்னபோது, எனக்குப் பெரும் ஏமாற்றமாகப் போய் விட்டது.

"ஜானகி! நான் சொல்கிறேன் என்று கோபித்துக் கொள்ளாதே! 'நாகரிகம்' என்பதற்கு நீ தவறாக அர்த்தம் செய்து கொண்டிருக்கிறாய். நாம் இருதய பூர்வமாக நாகரிக மடைய வேண்டும். இந்த ஆடம்பரங்களை யெல்லாம் நீ மறந்து விடு!" என்றான்.

நானும் எத்தனையோ பெண்களிடம் பழகி யிருக்கிறேன். அவர்களெல்லாம் வித விதமான ஜவுளிகளைப் பற்றியும் புதுப்புது நகைகளைப் பற்றியும் பேசத்தான் கேட்டிருக்கிறேனே தவிர, இப்படி மேல் நாட்டு நாகரிகத்தை மட்டந் தட்டிப் பேசி நான் கேட்டதில்லை. அதன் பயனாக மேல்நாட்டு நாகரிகத்தில் எனக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருந்தபோதிலும், அம்புஜத்தின் பேச்சு என்னை ஒரு உலுக்கு உலுக்காமல் இல்லை.

"ஜானகி! இந்தா. இந்தப் புத்தகத்தைப் படித்துப் பார். நான் உன்னை மறுமுறை பார்க்கும்போது நீ மாறுபட்டிருக்க வேண்டும்" என்று அவன் தன் கையிலிருந்த ஒரு புத்தகத்தை என்னிடம் கொடுத்து விட்டுச் சென்றான். நான் அதை மேஜையின்மீது வைத்தேன்.

என்னுடைய மனம் குழம்ப ஆரம்பித்தது. 'நான் மறுமுறை பார்ப்பதற்குள் நீ மாறு பட்டிருக்க வேண்டும்' என்று அம்புஜம் சொன்னது என் உள்ளத்தில் பெரும் புயலைக் கிளப்பி விட்டுவிட்டது. நாம் அவனை மாற்றப்போக அவனல்லவா நம்மை மாற்ற வந்து விட்டான்!

ஒன்றும் தோன்றாமல் மேஜைமீது கிடந்த ஓர் ஆங்கிலப் புத்தகத்தை எடுத்துப் பிரித்தேன். 'சே! இந்த ஆங்கிலக் கல்வி யல்லவா நம்மை இப்படிப் பைத்தியமாக அடித்து விட்டது!' என்ற எண்ணம் ஒரு புறத்தில் மெல்லத் தலையைத் தூக்கிற்று. அதை வீசி எறிந்தேன்.

ஒருவேளை அம்புஜம் கொடுத்த புத்தகம் நம் உள்ளத்தைச் சாந்தப் படுத்துமோ?— மேஜையின் மீதிருந்த அந்தப் புத்தகத்தைக் கையிலெடுத்தேன்.

"ஏழை இந்தியா" என்ற பெயர் என் கண்களில் பட்டது. அந்தப் புத்தகத்தை எடுத்துப் பிரித்தேன். அதற்குள்ளிருந்து ஏதோ ஒன்று கீழே விழுந்தது. அதை எடுத்துப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! அது ஒரு வாலிபனின் புகைப் படம்!

என்ன அழகான உருவம்! அலை அலையாக வாரிவிட்ட கேசமும், கம்பீரமான பார்வையும், வெள்ளை வெளேரென்ற ஜிப்பாவுக்கு மேலே 'வெய்ஸ்ட் கோட்'டும் போட்டுக் கொண்டிருந்த அந்த உருவத்தைப் பார்த்ததும், என் உள்ளம் பேதலித்து விட்டது. இவ்வளவு அழகான — கவர்ச்சியான — முகத்தை நான் இதற்கு முன் பார்த்ததே யில்லை. உதடுகள் லேசாகச் சிரித்துக் கொண்டிருந்தன. கண்கள் கம்பீரமாக என்னைப் பார்த்துக் கொண்டிருந்தன. ஆனால் இந்த ஜிப்பா...! இதற்குப் பதிலாக 'ஹாட்டும் ஸூட்டும்' போட்டுக் கொண்டிருந்தால் இன்னும் எவ்வளவு அழகாக இருக்கும்?

தேசிய உணர்ச்சியுடன் நடமாடும் இந்த அம்புஜம் இப்படி ஒருவனுடன் கள்ளக் காதல் புரிவாள் என்று என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. அவன் தன் காதலனை மயக்கவே இப்படி எல்லாம் வெளி வேஷம் போடுகிறான் என்றுகூடத் தோன்றியது எனக்கு. இதை இவ்வளவு ரகசியமாக வைத்திருக்கும் அவன் வாயிலிருந்தே உண்மையை வர

வழைக்க வேண்டும் என்று நான் நிர்மாணித்தேன்.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு, அம்புஜம் மீண்டும் என் வீட்டுக்கு வந்தாள். அவளிடம் "இந்தா, நீ கொடுத்த புத்தகம்" என்று அவள் கொடுத்த புத்தகத்தைத் திருப்பிக் கொடுத்தேன். அதை வாங்கிக் கொள்ளும்போது அவள் சட்டென்று எதையோ நினைத்துக் கொண்டவள்போல் என்னைப் பார்த்தாள். இப்படி அவள் தேள் கொட்டின திருடனைப்போல் தவிப்பது எனக்குப் பரிதாபமாக இருந்தது. ஆயினும், நான் என்னுடைய மௌனத்தைக் கலைத்து விடவில்லை.

"ஜானகி! இதில் புகைப்படம் ஒன்றை வைத்திருந்ததாக நினைவு!" என்று அவளே ஆரம்பித்தாள். அதைக் கேட்டதும் நான் 'குபீர்' என்று சிரித்து விட்டேன்.

"இந்த விஷயத்தை என்னிடம் இது வரை சொல்லாமல் ரகசியமாய் வைத்திருந்தாயே, என்ன அழுத்தக்காரிடி நீ!"

"இல்லை, ஜானகி! அது என் அண்ணாவின் படம்! தவறுதலாய் இதில் வைத்து விட்டேன்!" என்று அவள் சொன்னபோது, என்னுடைய தலையில் பெரிய கல்லைத் தூக்கிப் போட்டது போல் இருந்தது.

"அம்புஜம்! இந்தப் படத்தை உன் காதலன் படம் என்று நான் நினைத்தேன். அவரை மயக்கவே இப்படி யெல்லாம் நீ வெளி வேஷம் போடுகிறாய் என்று எனக்குத் தோன்றிற்று!" என்று சொன்னபோது, அவள் அலட்சியமாய்ச் சிரித்த சிரிப்பு என் அறியாமையைத் துடைத்தெறிந்தது.

2

அன்று மாலை வழக்கம்போல் கலாசாலையிலிருந்து திரும்பிய நான், காரை விட்டிறங்கி 'வீட்டினுள் நுழைந்தேன். என் தந்தை ஹாலில் இருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்தவண்ணம் கையிலிருந்த பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தார். அடுத்த அறையிலிருந்து பேச்சுக் குரல் கேட்டது.

"பையனுக்கு என்ன வயதிருக்கும்?" என்றாள் அம்மா.

"இருபத்தைந்து வயது ... பி. ஏ. படிச்சிருக்கான்!" என்றது ஒரு புதிய குரல்.

"என்ன உத்தியோகமோ?" என்றார் என் தந்தை.

"உத்தியோகம் ஒன்றுமில்லை. அரசியல், காங்கிரஸ் என்று என்னவெல்லாமோ சொல்லிக் கொண்டு திரிகிறான். அவன் படித்த படிப்பிற்கு இப்படி இருக்க வேண்டாம். ஆனாலும் நிறையச் சொத்து இருக்கு. கலியாணமானால் எல்லாம் சரியாகிவிடுமென்று நினைக்கிறேன்" என்றது அந்தப் புதிய குரல்.

"பிள்ளைக்கு உத்தியோகமில்லையே என்று நானும் கவலைப்படவில்லை. ஜானகி மகா கெட்டிக்காரி. கலியாணமான பிறகு அவனைத் திருத்தி விடுவாள்!" என்று அப்பா தைரியமான குரலில் சொன்னார்.



இதற்குமேல் அவர்களின் பேச்சை என்னால் கேட்க முடியவில்லை. இப்படி அம்மாவும் அப்பாவும் சேர்ந்து ஒரு பித்துக் குளியை என் கழுத்தில் கட்டிவிட முயற்சிப்பதை நினைக்கும்போது எனக்குத் துக்கம் பீறிக்கொண்டு வந்தது. படித்தும் பிரயோஜனமில்லாமல், பணமிருந்தும் சுகமாய் வாழத் தெரியாமல் இருக்கும் ஒருவனை எனக்குக் கலியாணம் செய்யத் துணியும் என் பெற்றோர்களின் மீது எனக்குக் கோபம் வந்ததில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

"ஜானகி! போய் முகத்தை அலம்பிண்டு வா! உன்னைப் பார்க்கப் பிள்ளை வீட்டுக்காரர் வந்திருக்கா!" என்றார் அப்பா.

நான் தயங்கித் தயங்கி நின்றேன். அதிலிருந்தே என் உள்ளத்தில் அப்போது நடந்து கொண்டிருந்த போராட்டத்தை ஒருவாறு உணர்ந்து கொண்ட அப்பா, "கவலைப் படாதே, ஜானகி! நீ அவனைக் கல்யாணம் செய்து கொண்டதும், நான் அவனை மேல் படிப்புக்காகச் சீமைக்கு அனுப்பி வைக்கிறேன். முதல்தரமான 'ஸூட்'களையும், 'ஷர்ட்டு'களையும் 'கும்' மென்ற 'ஸெண்டு'களையும் பார்த்து விட்டால் அப்புறம் அந்தப் பைத்தியக்கார எண்ணங்களெல்லாம் அவனை விட்டுப் பறந்து விடாதா?" என்று கூறிவிட்டு, தங்க 'பிரேம்' போட்ட தம் மூக்குக் கண்ணாடியை அலட்சியமாகக் கையில் எடுத்துத் துடைத்துக் கொண்டே புருவத்தை உயர்த்தி என்னைப் பார்த்தார். நானும் தைரியமடைந்து உள்ளே சென்றேன்.

சிறிது நேரத்துக்குப் பிறகு பட்டுப் புடவை அணிந்து கொண்டு, வைர நகைகளுடன், அம்மாவின் எச்சரிக்கைப்படி அடக்க ஒடுக்கமாய் எனக்கு வாய்க்கப் போகும் மாமியாருக்கு நமஸ்காரம் செய்தேன். நான் சரியாகப் பேசுகிறேனா என்று தெரிந்துகொள்வதற்காக என்னை இரண்டு கேள்விகள் கேட்டுப் பதில் சொல்ல வைத்ததும், கைகால் ஊனமில்லாமல் இருக்கிறேனா என்று தெரிந்து கொள்வதற்காகவென்னை இரண்டு முறை காப்பி கொண்டுவரச் சொன்னதும் வெகு விரைவில் நடந்தேறின.



மாப்பிள்ளை என்னைப் பார்க்க விரும்பவில்லையாம். ஆனால் எனக்கு அவரைப் பார்க்கவேண்டும்போலிருந்தது. அதற்காக நான் பிடிவாதம் செய்தால் என் தந்தையின் கோபத்திற்கல்லவா ஆளாக நேரிடும்? என்னதான் கலாசாலையில் படிக்கும் பெண்ணாயிருந்தாலும், என் தந்தையின் பிடிவாதத்துக்கு முன்னால் நான் என்ன செய்ய முடியும்?

கோடை விடுமுறை நாட்களுக்குள்ளேயே என் கலியாணத்தை முடித்துவிட நிச்சயித்தார் என் தந்தை

கலியாண தினமும் குறிப்பிட்டாய்விட்டது. 'வரதட்சிணை' என்று என் கணவர் ஒரு செல்லாத காசுகூட வாங்க விரும்பவில்லை. இது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அப்பா 'டிரஸ்'ஸுக்கென்று கொடுத்த ரூபாய் ஐந்நூறையும் அவர் வந்தனத்துடன் திருப்பி அனுப்பி விட்டதைக் கேட்டபோது எனக்குச் சிரிப்புத்தான் வந்தது, இப்படியும் ஒரு பைத்தியம் இருக்குமா என்று!

என் தந்தைக்கு நான் ஒரே பெண்; ஆகவே என்னுடைய கல்யாணத்தை அவர் மிகவும் ஆடம்பரத்துடன் செய்ய நினைத்தார். இரட்டை மேளம், பாண்டு, பாட்டுக் கச்சேரி, ஒரு தேநீர் விருந்து இப்படியெல்லாம் தடபுடலாக இருக்க வேண்டும் என்பது அவர் எண்ணம். அழைப்பிதழ் அச்சிடும்போது, கலியாண நிகழ்ச்சி நிரலில் எல்லாவற்றையும் குறிப்பிட்டு, அதை மாப்பிள்ளையின் அனுமதிக்கு அனுப்பி வைத்தார். அந்தப் பொல்லாத மாப்பிள்ளை அவற்றையெல்லாம் விரும்பாததோடு நிற்கவில்லை; அந்த அழைப்பிதழுடன் பின்வரும் குறிப்பு ஒன்றும் எழுதி அனுப்பியிருந்தார்:

"கலியாண தினத்தன்று கடவுள் சாட்சியாகக் கன்னிகாதானம் செய்ய வேண்டும் என்பதே முன்னோர்கள் கொண்ட முறை. இப்படி ஆடம்பரமாய் அனாவசியமாய்ச் செலவு செய்வது, நீங்கள் ஒரு பணக்காரர் என்பதை மட்டும் விளம்பரப் படுத்துகிறதே அன்றி, ஏழைகளுக்கு அது என்னவாவது பயன் படுவதாகத் தெரியவில்லை. ஆகவே இதை நான் துளிக்கூட விரும்பவில்லை."

இப்படி எல்லா விஷயத்திலும் ஒரே பிடிவாதமாக இருக்கும் ஒருவரை என் வழிக்குக் கொண்டு வருவது அவ்வளவு சுலபமான காரியமல்ல என்று எனக்குத் தோன்றியது. ஆயினும் அவரையே மணந்து, அந்த அநாகரிகத்தை நவநாகரிகமாக்கிவிடுவதென்று நான் தீர்மானித்தேன்.

கலியாண தினம் வெகு சமீபத்தில் இருந்தது. என் பெற்றோர்கள் பட்டுப் புடவைகளையும், வைர நகைகளையும், வெள்ளிப் பாத்திரங்களையும், வாங்கி அடுக்க ஆரம்பித்தார்கள்.

இந்தச் சமயத்தில் அம்புஜம் ஒருநாள் கையில் கதர்ப் புடவையுடன் என் வீட்டுக்கு வந்து, "ஜானகி! உன் கலியாணத்திற்கு நான் பரிசு கொண்டு வந்திருக்கிறேன். இந்தா, இந்தப் புடவை! இதை அணிந்து கொண்டால் நீ இன்னும் எவ்வளவு அழகாயிருப்பாய், தெரியுமா?" என்றாள்.

ஏற்கெனவே என் புதுமை மோகத்தையும் நாகரிகத்தையும் விட்டொழிக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருந்த அவள், இன்று எனக்கு வரப்போகும் அநாகரிகக் கணவரைப்பற்றிக் கேள்விப்பட்டதும், என்னைக் குத்திக் காட்டவே இப்படிக் கதர்ப் புடவையுடன் வந்திருக்கிறாள் என்று எனக்குத் தோன்றிற்று. ஆகவே, "அம்புஜம்! என்னை இப்படி வதைக்காதே! நான் ஒரு அநாகரிகத்தைக் கட்டிக் கொண்டு அழவேண்டுமென்று என் தலையில் எழுதியிருக்கும்போது, அதற்கு யார்தான் என்ன செய்ய முடியும்?" என்று அழுகையும் துக்கமும் கலந்த குரலில் சொன்னேன்.

"அநாகரிகம் என்று யாரடி சொன்னது, உனக்கு?" என்றாள் அவள்.

"வேறு யார் சொல்ல வேண்டும்? அவர் நடந்து கொள்கிற அழகிலிருந்தே எல்லாம் தெரியவில்லையா?

"வீணாக நீ ஏன் என்னவெல்லாமோ எண்ணி மனதைக் குழப்பிக் கொள்கிறாய்? பார்க்கப்போனால் நீ ரொம்பவும் அதிர்ஷ்டக்காரி! உனக்கு வரப்போகும் கணவர் சாமான்யப்பட்டவரல்ல. அவரை மணந்து கொள்வதினால் உனக்கு நன்மை உண்டாகுமே தவிர, தீமை உண்டாகாது. மேலும் நானல்லவா அவரை உனக்குச் சிபார்சு செய்தேன்?"

"என்ன! நீயா ஒரு பைத்தியத்தை என் காலில் கட்ட முயற்சித்தாய்?"

"ஆமாண்டி, ஆமாம்! நான்தாண்டி உன் சாத்தனார்!" என்றாள் அவள்.

உடனே அவளுடைய இரண்டு கரங்களையும் நான் கெட்டியாய்ச் சேர்த்துப் பிடித்துக் கொண்டு, "அம்புஜம்! உன்னுடைய தந்திரம் எனக்குத் தெரியும். என்னையும் என் நாகரிகத்தையும் குட்டிச்சுவராக்க நீ உன் அண்ணனை என்னை மணந்து கொள்ளும்படி தூண்டி இருக்கிறாய்! ஆனால் நானல்லவா உன் அண்ணனின் அநாகரிகத்தை ஒழித்துக்கட்டப் போகிறேன்!" என்றேன்.

இதைக் கேட்டு அவள் வழக்கம் போல் அலட்சியமாகச் சிரித்தது, என்னை என்னவோ செய்வது போலிருந்தது.

3

கல்யாணமெல்லாம் ஒருவாறு நடந்து முடிந்து, நான் என் கணவர் வீட்டிற்கு

வந்து சேர்ந்தேன். ஒன்றிரண்டு நாட்கள் வரை எனக்கு அந்த வீட்டில் ஒரு சோதனையும் ஏற்படவில்லை. அம்புஜம்தான் அடிக்கடி கேலி செய்து கொண்டிருந்தாளே தவிர, மற்றப்படி என் கணவர் எனக்குக் கட்டளை இடவும் இல்லை, கட்டுப்பாடுகளை நிர்ணயிக்கவும் இல்லை.

அன்று நான் ஹாலில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்து ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தேன். எனக்கு எதிர்த்தாற் போல் சுவரில் மாட்டியிருந்த காந்தி மகானின் கம்பீரமான உருவம் என் கண்களை உறுத்தியது. மேஜையின்மீது வைக்கப்பட்டிருந்த புத்த விக்கிரகம் என்னைப் பார்த்து நகையாடுவது போலிருந்தது. இப்படியே அந்த வீட்டிலிருந்த ஒவ்வொரு பொருளும் என் புதுமை எண்ணங்களையும் நாகரிகத்தையும் குறி பார்த்துக் கொண்டிருப்பது போல் எனக்குத் தோன்றியது. இதற்குக் காரணம் வேறொன்று மல்ல; என் வீடு மேல்நாட்டு நாகரிகத்தில் மூழ்கி யிருந்தது. இந்த வீடோ தேசிய உணர்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தது!

இந்த மாறுதலைக் கண்டு நான் உள்ளூறப் பொருமிக் கொண்டிருந்தபோது, அம்புஜம் என் எதிரில் வந்து நின்றாள்.

“இன்று மாலை ஒரு விருந்து. கலியாணத்தைக் குறித்து ஏற்பாடு செய்திருக்கிறார், அண்ணா! கதராடை அணிந்து கொண்டு நீ பக்கத்தில் உட்கார்ந்தால் அவருக்குப் பரம திருப்தியாக இருக்கும்” என்று அவள் சொன்ன போது, என்னைத் தூக்கி வாரிப் போட்டது.

அம்புஜம் விரும்புவது போல் கதர்ப் புடவை கட்டிக் கொண்டு சர்வ சாதாரணமாகப் போனால் நான் அல்லவா தோல்வி அடைந்தவளாகி விடுவேன்? ஆகவே, முதல்தரமான பட்டாடைகள் அணிந்து, பின்னலை முன்னால் தள்ளிவிட்டுக் கொண்டு அவருக்குப் பக்கத்தில் உட்காருவதென்று நிச்சயித்தேன். என்னுடைய நவநாகரிகமான நடை உடை பாவனைகளைக் கண்டவுடன், தானே அவருக்குத் தன் உடையின் மீது வெறுப்பு ஏற்பட்டு விடாதா?

விருந்து எங்கள் வீட்டுத் தோட்டத்தில் தான் நடப்பதாக இருந்தது. நான் என்னை அலங்கரித்துக் கொண்டிருந்த போது, “இன்னும் தயாராக வில்லையா, மன்னி?” என்று கேட்டுக் கொண்டே அம்புஜம் உள்ளே வந்தாள். என்னுடைய அலங்கார மெல்லாம் ஒருவாறு முடிந்ததும், அவள் என் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு தன் அண்ணாவின் அறைக்குச் சென்றாள். அப்போது தம் கையில் புத்தகம் ஒன்றைப் பிரித்துப் பார்த்தவண்ண மிருந்தார் அவர்.

“அண்ணா! மன்னி வந்து விட்டாள்!” என்று அம்புஜம் கூறியவுடன், புத்தகத்தி லிருந்த பார்வையை விலக்கி அவர் என்னைப் பார்த்தார். முதலில் சற்று ஏமாற்ற மடைந்தவர்போல் காணப்பட்ட போதிலும், பிறகு ஓர் இளம் புன்னகை அவர் உதட்டில் தோன்றியது.

பிறகு எல்லோருமாகச் சேர்ந்து தோட்டத்துக்குச் சென்றோம். என் கணவர் விருந்துக்கு வந்திருந்தவர்களை வரவேற்று வணக்கம் கூறி, அவர்களை நாற்காலிகளில் உட்கார வைத்தார். மிக மிக சாதாரண உடை அணிந்து வந்திருந்த அவர்களை யெல்லாம் பார்த்தபோது, ஏதோ குற்றம்



“இந்தாப்பா, ரெண்டணா! காப்பி கீப்பி சாப்பிடு, போ!”
“ஹி......ஹி......என்னங்க, விளையாடுறீங்க ......!”
“ஏம்பா, நீ காப்பி சாப்பிடறதில்லையா?”
“அதில்லேங்க! ரெண்டணாவுக்கு என்னத்தைச் சாப்பிட முடியுங்க? காப்பி ஓட்டலுக்குப் போறதுன்னா இந்தக் காலத்திலே ஒரு ரூவாயாச்சும் வேண்டாமுங்களா?”

செய்த கைதியைப் போல் என் இதயம் 'படபட' வென்று அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. அதற்கேற்றாற் போல் எல்லோருடைய கண்களும் என்னையே உற்றுப் பார்த்தன. நான் வெட்கித் தலை குனிந்தேன்!

விருந்தும் புது தினுசாக இருந்தது. பலகாரங்களுக்குப் பதிலாகப் பழ வர்க்கங்கள் வைக்கப்பட்டிருந்தன. தேநீருக்குப் பதிலாக இளநீரும் நீர்மோரும் கொடுத்தபோது எனக்கு ஒரே ஆச்சரியமாயிருந்தது.

அவருக்கும் எனக்கும் எவ்வளவு வித்தியாசம்! அவர் ஒரு தேசிய வாதி; லட்சிய வாதி. அசைக்க முடியாத — யாராலும் அணுகமுடியாத — உறுதியான இருதயம் படைத்த ஓர் ஆண் சிங்கம். அப்பேர்ப்பட்டவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் நான் மேல் நாட்டு நாகரிகத்தில் மயங்கிப்போன ஒரு பெண். பணத்தையும் பட்டத்தையும் கௌரவத்தையும் பிரதானமாகக் கொண்ட ஒரு சுயநலப் பிறவி!

இந்த எண்ணம் என் மனதில் தோன்றிய மறுகணமே நான் என் தவறை உணர்ந்தேன். அதற்கு மேல் அங்கிருப்பதே எனக்கு என்னவோ போலிருந்தது.

நல்ல வேளையாக விருந்தினர்கள் என்னுடைய பொறுமையை வெகு நேரம் சோதிக்கவில்லை. சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்கள் ஒருவர் பின் ஒருவராக எழுந்து என் கணவரிடம் விடைபெற்றுக் கொண்டிருந்தனர். அவர் தம்முடைய இரண்டு கரங்களையும் கூப்பி எல்லோருக்கும் வணக்கம் கூறிக்கொண்டே என்னைப் பார்த்து, நீயும் வணக்கம் செய், ஜானகி!" என்றார்.

அப்போது எனக்குத் துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. கன்னத்தில் உருண்டு வர முயற்சிக்கும் கண்ணீர்த் துளிகளை யாராவது பார்த்துவிடப் போகிறார்களே என்று பயந்தவளாய் ஒரே பாய்ச்சலில் வீட்டினுள் ஓடி விட்டேன்.

அந்தக் கணமே நான் அணிந்திருந்த பட்டாடைகளையும் ஆபரணங்களையும் கழற்றி எறிந்துவிட்டு, கதர்ப் புடவை கட்டிக் கொண்டால்தான் எனக்கு அமைதி ஏற்படும் போலிருந்தது. அப்படியே உடையை மாற்றிக் கொண்டு என் கணவரின் அறையினுள் காலை வைத்தேன்.

அந்தச் சமயம் பார்த்த முகத்துடனும், வெற்றிகரமான புன்முறுவலுடனும் இருந்த மகாத்மா காந்தியின் படத்தைப் பார்த்தபோது, என்னுடைய பிடிவாதம் முழுக்க முழுக்கத் தோல்வி அடைந்து விட்டது. அந்தப் படத்தின் பாதத்தடியில் முகத்தை மூடிக் கொண்டு விசித்து விசித்து அழுதேன்.

"ஜானகி!" என்று கனிந்த குரலில் அவர் கூப்பிட்டது என் காதில் விழுந்தது. திரும்பிப் பார்த்தேன். உனக்கு இந்த இடம் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டார் அவர்.

அப்படிக் கேட்கும்போது 'தன்னைப் பிடிக்கிறதா?' என்று அவர் கேட்பது போல் எனக்குத் தோன்றியது.

"பிடிக்கிறது!" என்றேன்.

அடுத்த நிமிஷம், "இப்போது என்னை உங்களுக்குப் பிடிக்கிறதா?" என்று அவரைக் கேட்க வேண்டுமென்று எனக்குத் தோன்றியது. ஆனால், அதற்குத் தைரியம் வரவில்லை. அது மட்டுமல்ல; அதற்குமேல் அவரைப் பார்த்துக்கொண்டு அங்கே நிற்பதற்கும் எனக்கு என்னவோ போலிருந்தது. ஆகவே, எப்படியும் அந்த அறையை விட்டு வெளியே போய்விடும் நோக்கத்துடன், "தங்களுக்கு நீர்மோர் கொண்டு வரட்டுமா?" என்று கேட்டேன்.

"உனக்கு அவ்வளவு சிரமம் வேண்டாம்; நானே போய் எடுத்துக் கொள்கிறேன்!" என்றார்.

"இதோ, நானே கொண்டு வந்து விடுகிறேன்!" என்று கூறிக் கொண்டே நான் வெளியே அடி எடுத்து வைக்க முயன்றபோது, அவர் என் கரங்களைச் சட்டென்று பிடித்துக் கொண்டு, "தன் காரியத்தைத் தானே செய்ய வேண்டும். இது காந்திமகானின் கொள்கைகளில் ஒன்று. அப்படிச் செய்வதினால் நம்மை விடத் தாழ்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்று நினைப்பதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுவதில்லை!" என்றார்.

அவருடைய பிடியில்தான் எவ்வளவு வேகம்! தம்முடைய கொள்கையில்தான் அவருக்கு எவ்வளவு பிடிவாதம்! இத்தனைக்கும் அவர் என்னைத் தம் இஷ்டப்படி நடக்க வேண்டுமென்று ஒருநாளும் வற்புறுத்தவில்லை. ஆனால் அவருடைய அமைதியான பார்வையும் அன்பான உள்ளமும் அல்லவா என்னைத் தோல்வியடையும்படி செய்து விட்டன!


ASPRO
இதோ நொடியில்
நிவாரணம்!
ஜாக்கிரதையாகவும் நிச்சயமாகவும் குணமாக்கும்
ஜலதோஷத்தை அகற்றவும், டிங்குவை ஒழிக்கவும், வலி அல்லது ஜுரமுள்ள நிலைமைகளில் நிவாரணம் பெறவும் நீங்கள் செய்ய வேண்டியது இது தான். இரண்டு 'ஆஸ்ப்ரோ' வில்லைகளை பிரித்து ஜலத்துடன் அல்லது சூடான பானத்துடன் உட்கொள்ளவும். உங்களை குணமாக்க 'ஆஸ்ப்ரோ' சடுதியில் வேலை செய்கின்றது. உடனேயே சமனமும் சுகமும் தெரிகின்றது. நிவாரணம் சீக்கிரமானது — அற்புதமானது. மூட்டு வலி, நரம்பு வலி, உடம்பிலும் மூட்டுகளிலும் வலி நீங்குகின்றது. உஷ்ணமும், ஜலதோஷமும், ஜுரத்தின் சின்னங்களான ஒடுக்கமும், துடிதுடிப்பும் அகன்று, சாந்தமும் சௌகரியமுமான உணர்ச்சி நிலவுகின்றது. இப்படி தனித்தனி வழிகளில் 'ஆஸ்ப்ரோ' உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் உதவி புரிகின்றது.
இரண்டு 'ஆஸ்ப்ரோ' வில்லைகளை சிதைத்து ஜலத்துடன் சாப்பிடவும்
ASPRO
MADE IN ENGLAND
ASPRO REG TRADE MARK
ஆகையால் ஏன் வலியுடனும் ஜுரத்துடனும் கஷ்டப்படுகிறீர்?
உங்களை குணமாக்க
'ஆஸ்ப்ரோ'
இருக்கும்போது ஏன் அவஸ்தைப்படுகிறீர்?
'ஆஸ்ப்ரோ' செய்வது என்ன
விலை:
3 வில்லைகள் அணா 1. 6 வில்லைகள் அணா 2
30 வில்லைகள் அணா 10
எங்கும் கிடைக்கும்
68TH

'விமான கம்பெனிகளால் நம்பப்படும் சர்வீஸ்'

SHELL

பர்மா-ஷெல் ஆயில் ஸ்டோரேஜ் அண்டு டிஸ்டிரிப்யூட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட் (இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பெற்றது) ஏஜெண்டுகள்

9 TM.



முப்பத்தைந்தாம் அத்தியாயம்

யுக்தி பலித்தது!

'பாலனும் ரோதனம் பலம்' என்றார்கள் பெரியவர்கள். ஆனால் என்னைக் கேட்டால், வாழ்க்கைக்கே மிகவும் அத்தியாவசியமானது அழுகை என்பேன். 'அழுகை யில்லையேல் வாழ்க்கை யில்லை' என்று துணிந்து கூறுவேன். இந்த அழுகையில்தான் எத்தனை உல்லாசம், எத்தனை அமைதி, எத்தனை பலம் என்கிறீர்கள்! தன் உயிருக்குயிரானவர்களின் பிரிவாற்றாமையை நினைத்து உருகி, விசித்து விசித்து, விம்மி விம்மி அழாத மனிதனுடைய வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? உப்பு உறைப்பின்றிச் சப்பென்றிருக்கும் வாழ்க்கையில் என்ன சுகம் இருக்கிறது, சொல்லுங்கள். அந்த இன்ப வேதனையில் இருக்கும் ஆனந்தத்தை, அதை அனுபவிக்கும் பாக்கியம் பெற்றவர்களைக் கேட்டுப் பாருங்கள், தெரிய வரும். சற்றுச் சிந்தனையைச் செலவிட்டுப் பார்த்தால், 'சிரிப்புக்குப் பின்னால் ஆத்மா அலுத்து விடுகிறது; மனம் சலித்து விடுகிறது; நாமும் 'இதென்ன வாழ்க்கை?' என்று வெறுப்புடன் கூறுகிறோம். ஆனால் அழுகைக்குப் பின்னால் நம்முள் ஒரு புத்துணர்ச்சி, புத்துயிர், புது வேகம், புதிய இன்பம் முதலியவைகள் குடி கொள்ளுகின்றன' என்பதை உணருவீர்கள்.

'பிரஜாமித்திரன்' காரியாலயத்திலிருந்து வந்த கடிதத்தைப் பார்த்ததும், பத்மாவுக்கு அழுகை அழுகையாக வந்தது. அவள் ஒரு கையில் கடிதத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு, மற்றொரு கையினால் நிலைப்படியைப் பிடித்தவாறே அழ ஆரம்பித்து விட்டாள். அவள் எதை நினைத்துக் கொண்டு அழுதாளோ, யாருக்குத் தெரியும்? ஒருவேளை அவள் தனக்குக் கிட்டிய வெற்றியை நினைத்து ஆனந்தக் கண்ணீர் வடித்திருக்கலாம். ஏனெனில் மனிதன் சிற்சில சமயம் மகிழ்ச்சியில் அழுவும், துயரத்தில் சிரிப்பதும் உண்டல்லவா?

இன்று ஆறு மாதங்களுக்குப் பிறகு அவளுக்கு அந்த சுபச் செய்தி கிட்டியது. இதுவரை அவளுடைய சிந்தனையில் ஏமாற்றமும் நம்பிக்கையும் இரு வர்ணப் புட்களை போல மாறி மாறிக் காட்சி யளித்தன. எத்தனையோ தடவை அவள் 'தன் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடலாமா?' என்று கூட எண்ணியதுண்டு. உண்மையிலேயே அவள் அப்படிச் செய்திருந்தால், இன்று அவரைக் காணும் பாக்கியம் அவளுக்குக் கிட்டியிருக்குமா? என்ன இருந்தாலும் அவருடைய நெஞ்சு கல் நெஞ்சுதான். 'ஏதடா, நான் ஒருத்தி இங்கே இருக்கிறேனே!' என்று ஒரு நாளாவது அவர் எண்ணியிருப்பாரா? ஆறுமாத காலமாக அங்கேதானே உட்கார்ந்திருக்கிறார்! 'சௌக்கியமா?' என்று ஒரு வரி எனக்கு எழுதியிருக்கக் கூடாதா? 'அவள் அழுது சாகட்டும், நமக்கென்ன?' என்றுதானே அவர் இருந்திருக்கிறார்! ஆமாம், என்னைக்குத்தான் அவர் என்ன லட்சியம் செய்தார்? மனிதன் தன் நண்பர்கள் விஷயத்தில் சில சமயம் பத்துப் பதினைந்து ரூபாய்கூடச் செலவழிக்கிறான். அதற்காக அதை அன்பு, காதல் என்றெல்லாம் சொல்லி விட முடியுமா? அன்பு, உள்ளத்தில் உதிக்கும் வஸ்து. அதைக் காசு கொடுத்து வாங்கிவிட முடியாதல்லவா?

ரமாநாத் இருக்கும் இடம் தெரியாதிருந்த வரை, பத்மா குற்ற மனைத்தையும் தன் தலையில் சுமத்திக் கொண்டாள்.

அவன் இருக்குமிடம் தெரிந்து விட்டதும் அவனுடைய மனம் கல்லாய் மாறி விட்டது; வித விதமான சந்தேகங்கள் எழுந்தன. அவருக்கென்ன? சுதந்திர புருஷர். கால்கட்டு, கைக்கட்டு என்று கிடையாது. தன் இஷ்டப்படி நடக்கலாம். யாருக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை; பயப்பட வேண்டியதும் இல்லை. எவர் முன்பும் கைகட்டி வாய்பொத்தி நிற்க வேண்டியதில்லை என்ற தைரியமாயிருக்கலாம். அதேபோல நானும் சொல்லாமல் கொள்ளாமல் ஓடியிருந்தால் சும்மா இருப்பாரா? உயிரையே வாங்கி விருப்பார்? இல்லாவிட்டால் 'இனி உன் முகத்தில் விழிப்பதில்லை' என்று கூறி என்னைக் கை கழுவி விட்டிருப்பார். இப்பொழுது நாம் இதையெல்லாம் கேட்க முடிகிறதா? நல்ல நியாயம் இது! ஆண்களுக்கொன்று; பெண்களுக்கொன்று!

பத்மா அங்கே நின்றபடியே இம்மாதிரிச் சிந்தனையில் ஈடுபட்டு விட்டாள்.

இதே சமயம் ரமேஷ் பாபு வாசலில் வந்து, "கோபி! கோபி!" என்று குரல் கொடுத்தார். தயாநாத பாபு தம் அறையில் படுத்திருந்தார். அவர் இருமிக் கொண்டே, "யார் அது? உள்ளே வா, அப்பா!" என்றார்.

ரமேஷ்பாபு உள்ளே வந்ததும், "அட, ரமேஷ் பாபுவா? வாருங்கள், வாருங்கள்; உட்காருங்கள். நான் செத்துப் பிழைத்தேன், ஸார்! எனக்குப் பிழைப்போம் என்ற நம்பிக்கையே இல்லை, ஸார்! பிழைத்தது புனர் ஜன்மம் என்றுதான் சொல்ல வேண்டும். நான் சொல்வதைக் கேட்பதற்கோ இங்கே யாருமே இல்லை. சமாதாத்தோ ஓடிவிட்டான்; அவனுடைய அம்மாவுக்கோ என் அருகில் உட்காருவதென்றாலே உயிர் போவது போலிருக்கிறது. மற்றது இரண்டும் உதவாக்கரைகள். எப்பொழுது பார்த்தாலும் 'விளையாட்டு, விளையாட்டு' என்று வாசலில் ஓடிக் கொண்டிருக்கிறதுகள். குழந்தைகளாம், குழந்தைகள்! என்ன குழந்தைகள் வேண்டிக் கிடக்கிறது, ஸார்! மாட்டுப் பெண் மட்டும் இல்லையென்றால் என் உயிர் இவ்வளவு நாள் போயே போயிருக்கும், ஸார்! எனக்காக அவள் பட்ட கஷ்டங்களைச் சொல்லி முடியாது. இராத் தூக்கம் பகல் தூக்கம் எதுவுமேயில்லை. ரொம்பத் தங்கமான பெண்!" என்றார் தயாநாதபாபு.

"நீங்கள் இப்படிப் படுத்த படுக்கையாக இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவே தெரியாதே! சொல்லி யனுப்பியிருந்தால் நான் வந்து பார்த்துப் போக மாட்டேனா? பாவம், லீவு எடுத்துக் கொள்ளும்படியாகிவிட்டதாக்கும்!" என்றார் ரமேஷ்பாபு அனுதாபத்துடன்.

"லீவுக்கு மனுப் போட்டுவிட்டேன். ஆனால் டாக்டர் சர்டிபிகேட் வாங்கி அனுப்பவில்லை, ஸார்! பதினாறு ரூபாய்க்கு நான் எங்கே போவேன்? ஒரு நாள் சிவில் சர்ஜனிடம் போய்க் கேட்டேன். அவர் பணமில்லா விட்டால் எழுதித் தர முடியாது என்று கண்டிப்பாய்ச் சொல்லி விட்டார். அவரைப் பற்றித்தான் உங்களுக்கும் தெரிந்திருக்குமே! எதற்கெடுத்தாலும் பணம்! பணம்! பணம்! பணமில்லாமல் ஒரு வார்த்தைகூடப் பேசமாட்டார். நான் பேசாமல் திரும்பி வந்து லீவுக்கு எழுதியிருக்கிறேன். ஒத்துக் கொண்டார்களோ இல்லையோ, தெரியாது. மனிதன் இருந்தால் என்ன, செத்தால் என்ன? இந்த டாக்டர்களுக்குப் பணம்தான் குறி; வைத்தியம் முக்கியமில்லை!" என்றார் தயாநாதபாபு.

"பதினாறு ரூபாய்ப் பிச்சைக் காசுக்கு நீங்கள் இப்படிப் பிசகலாமா? லீவு கிடைக்கா விட்டால் என்ன செய்வது?" என்று ரமேஷ்பாபு கவலையுடன் கேட்டார்.

தயாநாதபாபு தலையில் கையை வைத்துக் கொண்டு, "என்ன செய்வது? லீவு கிடைத்தாலும் சரி கிடைக்கா விட்டாலும் சரி, நான் வீட்டை விட்டு அசையப் போவதில்லை. ஆபீஸர் கேட்டால், 'நான் சர்ஜனிடம் போயிருந்தேன். அவர் பணம் இல்லாமல் 'சர்டிபிகேட்' தர முடியாது என்று சொல்லி விட்டார்' என்று உண்மையைச் சொல்லிவிடுகிறேன். இந்த டாக்டரும் சர்க்கார் உத்தியோகஸ்தர்தானே, ஐயா! வெறுமனே உட்கார்ந்து கொண்டு நாற்காலியைத் தேய்ப்பதற்காகவா அவருக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள்? என்னை 'டிஸ்மிஸ்' செய்தாலும் சரி; நான் பணம் செலவழித்துச் சர்டிபிகேட் வாங்கப் போவதில்லை. இது நிச்சயம். வருவது வரட்டும்......உங்களுக்கு வெற்றிலைத் தட்டுக் கொண்டுவரச் சொல்லலாம் என்றால், இந்த இரண்டு பீடைகளும் எங்கேயோ போய் விட்டதுகள். என்னத்தைச் சொல்லுவது போங்கள்!" என்று அலுத்துக் கொண்டார் தயாநாதபாபு.

ரமேஷ்பாபு இலேசாகச் சிரித்துக் கொண்டே, "எனக்காகச் சிரமப்பட்டீர்கள்! இன்று உங்களை நான் வெறும் வெற்றிலைப்பாக்குடன் மட்டும் விட்டுவிடப் போவதில்லை!" என்றார்.

இதே சமயம் பத்மா அவருக்கெதிரே வெற்றிலைத் தட்டைக் கொண்டு வந்து வைத்தாள். "அதெல்லாம் வெறும் வெற்றிலைப் பாக்கைக் கொடுத்து என்னை ஏமாற்றிவிட முடியாது. இன்றைக்கு ஒரு சந்தோஷச் செய்தி கொண்டு வந்திருக்கிறேனாக்கும்!" என்றார் ரமேஷ்பாபு.

"முன்னால் அந்தச் சந்தோஷச் செய்தியைச் சொல்லுங்கள். நீங்கள் புது சமாசாரமாக எண்ணுவது எனக்குப் பழசாகப் போயிருக்கலாம் அல்லவா?" என்று பத்மா குறும்புப் புன்னகையுடன் சொன்னாள்.

"அதற்குள் அது பழசாகப் போய்விடக் கூடிய சமாசாரம் இல்லை. ரமாகாந்த் இருக்குமிடம் தெரிந்து விட்டது. அவன் கல்கத்தாவில் இருக்கிறானாக்கும்!" என்று ரமேஷ்பாபு ஒருவித எக்களிப்புடன் சொன்னார்.

"எனக்கு முன்னாலேயே தெரியுமே!" என்றாள் பத்மா.

தயாகாதபாபு படுக்கையிலிருந்து சட்டென எழுந்து உட்கார்ந்தார். அவருடைய ஜுரம், பலஹீனம் எல்லாம் எங்கேயோ பறந்து ஓடிவிட்டது. அவர் ரமேஷ்பாபுவின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "நிஜமாகவா? தெரிந்து விட்டதா? கல்கத்தாவிலா இருக்கிறான்? ஏதாவது கடிதம் கிடிதம் உங்களுக்கு வந்ததா?" என்று வெகு ஆவலுடன் கேள்விக்கு மேல் கேள்விகளை அடுக்கினார்.

"கடிதம் வரவில்லை. போலீஸ் விசாரணை ஒன்று வந்தது. 'அவர்மீது யாதொரு விதமான குற்றமும் இல்லை' என்று நான் சொல்லிவிட்டேன். என் அம்மா, உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டார் ரமேஷ்பாபு.

பத்மா, தான் செய்த உபாயத்தை ஆதியோடந்தமாகச்சொல்லி, 'பிரஜாமித்திரன்' காரியாலயத்திலிருந்து வந்த கடிதத்தையும் காட்டினாள். கடிதத்துடன் பணத்துக்கும் ஒரு ரசீது இருந்தது. அதில் ரமாகாந்த் கையெழுத்துப் போட்டிருந்தான்.

"கையெழுத்து ரமாகாந்தினுடையதுதான்; துளிக்கூடச் சந்தேகம் இல்லை. உனக்குத்தான் என்ன கெட்டிக்காரத்தனம். அம்மா! என்ன புத்திசாலித்தனம்! உன் யோசனையே யோசனை! பெண்ணாய்ப் பிறந்தாலும் உன்னைப் போன்ற பெண்ணாக அல்லவா பிறக்க வேண்டும்' நாங்களும் ஒரு ஆண்பிள்ளை மாதிரி! எங்கள் மூளைக்கு இந்த யோசனை எட்டவில்லை, பார்த்தாயா? நீ எவ்வளவு சுலபமாக ஆளைக் கண்டுபிடித்து விட்டாய்! பேஷ்! அந்த ரமாகாந்த் பயலைக் காதைப் பிடித்து இழுத்து வருவதற்கு இப்பொழுதே யாராவது ஓர் ஆளை அனுப்ப வேண்டும்!" என்று உணர்ச்சிப் பெருக்கில் ரமேஷ்பாபு கூறிக் கொண்டே போனார்.

இந்தப் பேச்சு நடந்து கொண்டிருக்கும் பொழுதே ரத்தன் அங்கே வந்து சேர்ந்தான். பத்மா அவனைக் கண்டதும் அறையை விட்டு வெளியே வந்தாள்; அவள் ரத்தனின் கழுத்தில் தன் கையை அன்புடன் போட்டுக்கொண்டு நடந்தவாறே, "கல்கத்தாவிலிருந்து கடிதம் வந்துவிட்டது, ரத்தன்! அவர் அங்கேயேதான் இருக்கிறாராம்!" என்றாள்.



"என்ன! நிஜமாகவா?" என்று ரத்தன் வியப்பு மிகுதியால் கேட்டாள்.

"ஆமாம் ரத்தன், நிஜமாகத்தான்! நான் பொய்யா சொல்லப் போகிறேன்? கடிதத்தை வேண்டுமானாலும் பாரேன்!"

"அப்படியானால் நீ இன்றைக்கே கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப் போயேன்!"

"அதுதான் நானும் யோசிக்கிறேன். நீயும் வருகிறாயா?"

"நான் வரத் தயார்தான். ஆனால் இந்தச் சமயம் வீட்டை விட்டுவிட்டு நான் உன்னுடன் வருவது அவ்வளவு உசிதமாகப் படவில்லை. ஏனென்றால் எனக்குச் சில நாட்களாக மணிபூஷண்மீது நம்பிக்கை யில்லை. அவன் ஏதோ தித்தலாட்டங்கள் செய்கிறான் என்று எனக்குச் சந்தேகமா யிருக்கிறது. பாங்கியில் இருபதினாயிரம் ரூபாய்க்குக் குறைவில்லாமல் இருந்தது. எல்லாவற்றையும் என்ன செய்தானோ, தெரியவில்லை. கேட்டால் வக்கீலின் ஈமக் கிரியைகளில் எல்லாம் செலவழிந்து விட்டது என்கிறான். கணக்குக் கேட்டால் விழிக்கிறான். ஆபீஸ் சாவிகள் எல்லாம் அவனிடம் இருக்கிறது. கேட்டால் 'இதோ தருகிறேன், அதோ தருகிறேன்' என்று சொல்லி அலைக்கழிக்கிறான். நான் கொஞ்சம் கடிந்து கொண்டால் சட்டம் பேச ஆரம்பித்து விடுகிறான். நான் உன்னுடன் வந்தால், அவன் இங்கிருப்பதை யெல்லாம் சுருட்டிக் கட்டிக்கொண்டு ஓடிவிடுவானோ என்று பயமா யிருக்கிறது. பங்களாவை வாங்கிக் கொள்ளுவதற்காக எத்தனையோ பேர் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். நான் இல்லாத சமயத்தில் அவன பங்களாவை விற்று விட்டால், அப்புறம் பணத்தை என் கண்களில்கூடக் காட்ட மாட்டான் போலிருக்கிறது. அதனால்தான் நான் தயங்குகிறேன். நீ துணைக்குக் கோபியை அழைத்துக்கொண்டு இன்றைக்கே புறப்படு! நான் உன் செலவுக்கு வேண்டிய பணத்துக்கு ஏற்பாடு செய்து விடுகிறேன்."

"கோபி வரமுடியுமோ, முடியாதோ? ஏனென்றால் அப்பாவுக்கு வேளா வேளைக்கு மருந்து கொடுக்க யாராவது ஒருத்தர் கூட இருக்க வேண்டாமா?"

"அதற்கு நீ கவலைப்படாதே! அந்தக் காரியத்தை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். தினம் காலையில் ஒரு தடவை, சாயங்கிரம் ஒரு தடவை நானே வந்து மருந்து கொடுக்கிறேன். அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டுவிடு. அவ்வளவுதானே! இன்றைக்கு இரவு ஒன்பது மணி வண்டியில் நீ புறப்பட வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொள்" என்றாள் ரத்தன்.



பிறகு, தயாநாத பாபுவைப் பார்ப்பதற்காக ரத்தன் அவர் இருக்கும் அறைக்குள் நுழைந்தாள். ரத்தனைக் கண்டதும் ரமேஷ் பாபு எழுந்திருந்து, "வாருங்கள், அம்மா! ரமாநாத் இருக்குமிடம் தெரிந்து விட்டது!" என்று மகிழ்ச்சியுடன் சொன்னார்.

"தெரியும்; அவரைக் கண்டு பிடிக்

னும் முயற்சியில் எனக்கும் ஒரு பங்கு உண்டாகும்!''

"நீங்கள் சொல்லவா வேண்டும்? எங்களுக்குத் தெரியாதா, உங்கள் ஒத்துழைப்பும் இருக்கும் என்ற விஷயம்! ஆமாம், அவரை இங்கே அழைத்து வருவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டாமா?''

"ஏற்பாடு என்ன? பத்மா இன்றே புறப்பட்டுப் போய் அவரை அழைத்துக் கொண்டு வருகிறாள். துணைக்குக் கோபியை அழைத்துப் போகட்டும். என், தாத்தா! உங்களுக்கு ஆட்சேபனை ஒன்றும் இல்லையே?''

தயாநாத பாபுவுக்கு மட்டும் இச்சமயம் உடம்பு சரியா யிருந்தால், ஸோமநாத்தை அழைத்து வருவதற்காக அவர் ஊரையே கூடக் கூட்டி யிருப்பார்! அப்படிப்பட்டவருக்குப் பத்மாவும் கோபியும் போவதில் என்ன ஆட்சேபனை இருக்க முடியும்? தானும் கூடப் போய் அவனை அழைத்துக் கொண்டு வர முடியவில்லையே என்ற ஒரே ஒரு வருத்தம்தான் அவருக்கு.

கல்கத்தாவைச் சுற்றிப் பார்க்கும் சந்தர்ப்பம் தனக்கு வாய்த்திருக்கிறது என்பதை யறிந்தது கோபிநாத்துக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. ஆனால் விசுவம்பர்நாத்தோ முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு ஒரு மூலையில் கண்ணீரும் கம்பலையுமாக நின்றான். தனக்கு அந்தப் பாக்கியம் கிட்டவில்லையே என்று அவனுக்கு வருத்தம். படைத்த பிரமன் அவனை ஏன்தான் வயதில் சின்னவனாகப் படைத்தானோ? அதனால் தானே இன்று அவனுடைய உரிமை தட்டிப் பறிக்கப்படுகிறது! கோபி என்ன, ரொம்பக் கெட்டிக்காரனோ? தினம் ஏதாவது ஒரு சாமானைத் தொலைத்துவிட்டு வருகிறான்! 'நான் இதுவரை ஒரு குண்டூசியைக்கூடக் கெட்டுப் போக்கியதில்லையே! இந்தப் பாழும் தெய்வம் செய்த கூத்து! என்னைச் சின்னவனாகவும் கோபியைப் பெரியவனாகவும் படைத்து விட்டது! அதனால்தானே என்னால் 'நான் போய் வருகிறேன்' என்று சொல்ல முடியவில்லை' என்று அவன் வருந்தினான்.

இரவு ஒன்பது மணிக்குப் பத்மா ஸ்டேஷனுக்குப் புறப்படுவதற்கு ஆயத்தமானாள். புறப்படுவதற்கு முன்னால் மாமியார்—மாமனாரை வணங்கி ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டாள். விசுவம்பர் அழுது கொண்டிருந்தான். பத்மா அவனைக் கொஞ்சித் தேற்றி விட்டுக் காரில் ஏறி உட்கார்ந்தாள். அவளை ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் விடுவதற்காக ரத்தன் கார் கொண்டு வந்திருந்தான்.

மோட்டார் புறப்பட்டதும் பத்மா ரத்தனைப் பார்த்து, "என் ரத்தன், கல்கத்தா ரொம்பப் பெரிய பட்டணம் ஆயிற்றே! அங்கே போய் அவரை எப்படித் தேடிக் கண்டுபிடிக்க முடியும்?'' என்று கேட்டாள்.

"முதலில் 'பிரஜாமித்திரன்' காரியாலயத்துக்குப் போ! அங்கே போய் விசாரித்தால் இருக்குமிடம் தெரிந்துவிடும். கோபி தான் கூடவே இருக்கிறானே!'' என்றான் ரத்தன்.

"அங்கே எங்கு தங்கலாம்?''

"எத்தனையோ தர்மசத்திரங்கள் இருக்கின்றன. ஆனால் அங்கே தங்க வேண்டாம். ஏதாவது ஒரு ஹோட்டலில் தங்கு. பணம் — கிணம் தேவையா யிருந்தால் உடனே எனக்குத் தந்தி அடி. நான் ஏதாவது ஏற்பாடு செய்து அனுப்பி வைக்கிறேன். உன் அகத்துக்காரர் வந்து விட்டால் எனக்கும் உபகாரமா யிருக்கும். இந்த மணிபூஷண் என்னைச் சோற்றுக்குத் தாளம் போட வைத்து விடுவானோ என்று எனக்கு ஒரே கவலையா யிருக்கிறது.''

"ஹோட்டல்காரர்கள் காவாலிகளா யிருக்க மாட்டார்களே!''

"யாராவது ஏதாவது காலாடித்தனம் செய்தால், கால் செருப்பைக் கழற்றிக் கொண்டு அடி. எதற்கும் யோசிக்காதே! 'வருவது வரட்டும்' என்று தைரியமா யிரு!'' என்று சொல்லிய வண்ணம், ரத்தன் தன் இடுப்பில் செருகி யிருந்த கத்தியை எடுத்துப் பத்மாவிடம் கொடுத்தான். பிறகு, "இதை எப்பொழுதும் ஜாக்கிரதையாகக் கையோடு வைத்துக் கொள். ஆபத்துக் காலத்துக்கு உபயோகப்படும். நான் வெளியில் போகும்பொழுதெல்லாம் இதை எடுத்துக் கொள்ளாமல் போவதில்லை. இது கையில் இருந்தால் நம் மனத்தில் நம்மை யறியாமலே ஒரு தைரியம் பிறக்கிறது. இது என் சொந்த அனுபவம். பெண் பிள்ளைகளிடம் வாலாட்டும் இந்த ஆண் பிள்ளைகள் இருக்கிறார்களே, இவர்கள் சுத்தப் பேடிகள்; பயந்தாங்கொள்ளிகள்; தொடை நடுங்கிகள்; ஊர் சுற்றித் திரியும் நாய்கள்! உன் கையில் ஒளி வீசும் கத்தியையும், உன் பார்வையில் ஜொலிக்கும் கடுமையையும் கண்டாலே, அவர்கள் நாய் போல வாலைச் சுருட்டி

மடக்கிக் கொண்டு ஓடி விடுவார்கள்! அப்புறம் கிட்ட நெருங்க மாட்டார்கள். அம்மாதிரிச் சந்தர்ப்பம் வந்து, இந்தக் கத்தியையும் உபயோகிக்கும்படி நேர்ந்தால், கொஞ்சங்கூட முன்பின் யோசிக்காதே! அவர்களை இந்தக் கத்திக்கு இரையாக்கி விடு. 'என்ன ஆகுமோ?' என்று யோசனையே வேண்டாம். ஆவது ஆகட்டும் என்று தைரியமாயிரு. புரிகிறதா?" என்று ரத்தன் அவளுக்கு உபதேசம் செய்தாள்.

பத்மா அந்தக் கத்தியை வாங்கி இடுப்பில் செருகிக் கொண்டாள். ஆனால் மறுமொழியொன்றும் கூறவில்லை. அவளுடைய உள்ளத்தை ஏதோ ஒரு சுமை அழுத்தியது. அவள் எத்தனையோ விஷயங்களைப் பற்றி ரத்தனிடம் ஆலோசிக்க வேண்டும், கேட்க வேண்டும் என்று எண்ணியிருந்தாள். ஆனால் அப்பொழுது அவளுக்கு 'என்ன கேட்பது?' என்று ஒன்றுமே புரியவில்லை; மூளை குழம்பிக் கிடந்தது.

ஸ்டேஷன் வந்தது. கூலி யாட்கள் சாமான்களைக் காரிலிருந்து இறக்கினர். கோபிநாத் டிக்கட் வாங்கி வந்தான். காரிலிருந்து இறங்கிய பத்மாவுக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாது. ரத்தனின் பின்னாலேயே பிளாட்பாரத்துக்கு வந்து மௌனமே உருவெடுத்தவளாய்க் கல் போலச் சமைந்து நின்றாள்.

ரத்தன் டிக்கட் வாங்கி வந்த கோபிநாத்தைப் பார்த்து, "சமத்தாயிரு!" என்றாள்.

கோபிநாத் சில மாதங்களாகத் தேகப் பயிற்சி செய்து வந்தான். நடக்கும் பொழுது அவன் தன் மார்பையும் இரு புஜங்களையும் குனிந்து குனிந்து பார்த்துக் கொள்ளுவான். பார்ப்பவர்களுக்கு அவனுடைய தேகத்தில் எவ்வித வித்தியாசமும் தெரியவில்லை; ஆனால் அவனுக்கு மட்டும் 'தான் ஒரு சுற்றுப் பருத்து விட்டதாக' நினைப்பு. வழியில் போகிறவர்கள்—வருகிறவர்கள் அவனுக்குப் பயந்து ஒதுங்கிக் கொடுக்காமல் செல்வது அவனுக்கு வியப்பை அளித்தது. ஆகவே அவன் வெகு வீராப்புடன், "எவனாவது ஏதாவது வாலாட்டினால், அவன் எலும்பை நொறுக்கித் தவிடுபொடி யாக்கிவிடுவேனாக்கும்!" என்றான்.

ரத்தன் இலேசாகச் சிரித்தவாறே, "அதுதான் எனக்குத் தெரியுமே! 'காமா பயில்வான்' கூட உன்னிடம் பிச்சைதானே வாங்க வேண்டும்! அதிருக்கட்டும்; வழியில் தூங்கிக்கிங்கிப் போய்விடாதே!" என்றாள்.

"இமைகூடக் கொட்ட மாட்டேன். என்னை யறியாமல் தூக்கம் வந்து விடுமோ?" என்றான் கோபிநாத்.

அதற்குள் வண்டியும் வந்து விட்டது. கோபிநாத் ஒரு பெட்டியில் ஏறித் தனக்கும் தன் மதனி பத்மாவுக்கும் ஒரு இடம் பார்த்துக் கொண்டான். பத்மாவின் கண்களில் நீர் கவிந்திருந்தது. "ரத்தன், நான் அவரை அழைத்துக் கொண்டு சௌக்கியமாக வந்து சேர வேண்டும் என்று ஆசிர்வாதம் செய்!" என்று அவள் கெஞ்சினாள்.

இந்தச் சமயத்தில் அவளுடைய பலவீனமுற்ற மனத்துக்கு ஒரு ஊன்றுகோல், ஓர் ஒத்தாசை, ஓர் உதவி, ஒரு பக்கபலம் தேவையாயிருந்தது. அந்தப் பக்கபலத்தை அளிக்கும் ஆற்றல், ஆசிர்வாதத்தையும் பிரார்த்தனையும் தவிர வேறு எதற்கு உண்டு? அவைதானே மனோபலத்தையும், அமைதியையும் தரத் தக்க வற்றாக் களஞ்சியங்கள்! ஆபத்துக் காலத்தில் ஆளைக் கை கொடுத்துத் தூக்கி விடுபவையும் அவைதானே? ஆகவே பத்மா அவற்றைத்தான் இச்சமயத்தில் சரணடைந்தாள்.

இஞ்சின் புறப்படுவதற்கு அறிகுறியாக ஒரு தடவை ஊதிற்று. இரு தோழிகளும் ஒருவரை யொருவர் கட்டித் தழுவிக் கொண்டனர். பத்மா வண்டியில் ஏறி உட்கார்ந்தாள்.

"போனதும் கடிதம் எழுது!" என்றாள் ரத்தன்.

பத்மா 'சரி' யென்று தலை யசைத்தாள்.

"நான் வரவேண்டும் என்று தோன்றினால் உடனே எழுது; சங்கோசப்படாதே! இங்கே எவ்வளவு முக்கியமான அலுவல்களிருந்தாலும் அப்படியே போட்டுவிட்டு நான் வந்து விடுகிறேன்" என்றாள் ரத்தன்.

பத்மா அதற்கும் தலையசைத்தாள்.

"வழியில் அழாதே!" என்றாள் ரத்தன்.

பத்மா 'களுக்'கெனச் சிரித்தாள். வண்டியும் நகர்ந்தது. (தொடரும்)

ஆனால் அதனுடைய இதைவிட தான்?

நிச்சயமாய் விலை அதிகம்



ரூ.3/1/

GOLDEN

Platignum

MADE IN ENGLAND.

கோல்டன் பிளாட்டினம்.

இங்கிலாந்தில் செய்யப்பட்டது.

அப்படியில்லை... கோல்டன் பிளாட்டினம் பேனா முன் இருந்த விலையான ரூ. 3-1-0 க்கே கிடைக்கிறது. சரக்குக் குறைவு ஏற்பட்டிருந்தாலும், விலைவாசிகள் அதிகமாயிருந்தபோதிலும் கோல்டன் பிளாட்டினம் பேனாவின் இலக்ஷணம் எப்போதும் போல உயர்வுள்ளதாகவே இருக்கிறது.

ஒவ்வொரு உண்மையான பிளாட்டினம் பேனா குழலின்மேலும் நிப்பின் மேலும் பேனாவின்பெயர் செதுக்கப்பட்டிருக்கிறது—"பிளாட்டினம்" என்ற பெயர் இருக்கிறதா என்று பாருங்கள். போலிகளை வாங்காதீர்கள்

வர்த்தக விசாரணைகளுக்கு ஏகவிலை வியாபார உரிமையாளர்கள்,

முல்லர் அன்டு பிப்ஸ் (இந்தியா) லிமிடெட்

15, கங்குராம செட்டித் தெரு, மதராஸ்



தகுந்த கூலி!

துணி கொடுத்தவர் (தனக்குச் சட்டை தைத்துக் கொடுத்த தையற்காரனிடம்):— என் அப்பா, எனக்குச் சட்டை தைக்க எட்டணா கூலி; என் பையனுக்குத் தைப்பதாயிருந்தால்?

தையற்காரன்:—நாலணா!

துணி கொடுத்தவர்:—சரி, அப்படியானால் இந்தா நாலணா!

தையற்காரன்:—என்னுங்க, அநியாயமாயிருக்குது! உங்களுக்குச் சட்டை தைத்துக் கொடுத்தால், பையனுக்குத் தைக்கிற கூலி கொடுக்கிறீங்களே!

துணி கொடுத்தவர்:—ஆமாம்; நீ எனக்குத் தைத்துக் கொடுத்த சட்டை பையனுக்குத்தானே சரியாயிருக்கிறது?

★

தேட வேண்டியதுதான்!

சினிமா பார்த்துக் கொண்டிருக்கும் போது ஒரு பெரியவர் திடீரென்று நாற்காலியை விட்டு எழுந்து எதையோ விழுந்து விழுந்து தேடினார். அது மற்றவர்களுக்கு இடைஞ்சலாயிருந்தது.

ஒருவர்:—பெரியவரே! என்ன, அப்படி வெகு நேரமாகத் தேடுகிறீர்கள்?

பெரியவர்:—ஒன்றுமில்லை; ஒரு சாக்லெட் விழுந்து விட்டது.

ஒருவர்:—பூ! இதைத்தானா இப்படி விழுந்து தேடுகிறீர்கள்?

பெரியவர்:— இல்லையே! சாக்லெட் மட்டும் விழுந்திருந்தால் பாதகமில்லையே! அத்துடன் என் ஒரு பல்லும் அல்லவா விழுந்துவிட்டது!

★

வேலைக்குக் கூலி!

வீட்டுக்காரர்:—என்னப்பா. துணியைக் கெட்டுப் போக்கினது மில்லாமல் அதற்குக் கூலி வேறு கேட்கிறாயா?

சலவைத் தொழிலாளி:—அது காணமற் போவதற்கு முந்தியே சலவை செய்து விட்டேனுங்க!

ஞாபகம் இல்லை!

பாகவதர்:—என் அப்பா, சுப்பு! உனக்குக் குருசாமியைத் தெரியுமோ?

சுப்பு:—யார், எந்த குருசாமியைச் சொல்லுகிறீர்கள்?

பாகவதர்:—உன்னுடன் மூன்றாவது வகுப்பில் வாசித்தானாம்; ராஜபார்ட் மாதிரி மீசை வைத்துக் கொண்டிருக்கிறான்.

சுப்பு:—அடே! ஆச்சரியமாயிருக்கிறதே! என்னோடு மீசை வைத்துக் கொண்டு மூன்றாவது வகுப்பில் யாரும் படித்ததாக ஞாபகமில்லையே!

★

எச்சரிக்கை!

ஒரு பெரிய பாக்டரியின் வாசற் கதவின் மேல் பின்வருமாறு எழுதப் பட்டிருந்தது:—

"திருடர்கள் ஜாக்கிரதை! இந்தக் கதவில் மின்சாரம் பாய்ச்சப் பட்டிருக்கிறது. இதைத் தொட்டால் இறந்து விடுவார்கள்."

மறுநாள் அதன் கீழே பின்வருமாறு எழுதியிருந்தது.


"தங்கள் எச்சரிக்கைக்கு ரொம்ப வந்தனம். அந்த அபாயத்தை அறிந்து கொண்டதனால்தான் நாங்கள் சுவரில் கன்னம் வைத்து விட்டோம்."

★

சந்தர்ப்பம் ஏது?

"உன் தகப்பனார் காலமாகி விட்டாராமே, நேற்றுத்தான் கேள்விப்பட்டேன். ரொம்ப நல்ல மாதிரி! கடைசியாக ஏதாவது சொல்லிவிட்டுப் போனாரா?"

"ஹூம்! அவர் பேசவே யில்லை!"



"ஏன், பேச முடியாமல் ஸ்மரணையே தப்பிப் போய்விட்டதோ?"

"இல்லை; அவர் நன்றாய்த்தான் இருந்தார். அம்மாதான் பக்கத்திலேயே இருந்தாளே! அப்பாவுக்குப் பேச சந்தர்ப்பம் ஏது?"

ஸ்ரீ மஹாலக்ஷ்மீ தேவி அனுக்கிரஹத்தால்



"ஆருடத்தின் மகிமை"

உங்கள் எதிர்காலத்தைப் பற்றி பூரா ஜாதக நகலுடன் அல்லது கடிதம் எழுதும் நேரத்துடன் நியாயமான 7 கேள்விகள் எழுதி ரூ. 1-2-0 அனுப்பினால் உங்கள் எதிர்கால உண்மைச் செய்தி உங்களை விரைவில் தேடி வந்தடையும்.

1948-ம் வருஷ மாதவாரி பலாபலன்
குறைநிசய பலன் ஆயுள் பூராவும்

பலாபலன் வேண்டியவர்கள் பூரா ஜாதக நகலுடன் அல்லது பிறந்த வருஷம் மாதம் தேதி அல்லது பிறந்த நக்ஷத்திரம், முழுப் பெயருடன் எழுதி ரூ. 2-6-0 மணியார்டர் மூலம் அனுப்பினால் வருஷம் பூராவிற்கும், மாதவாரி பலாபலனும், குறைநிசய பலன் ஆயுள் பூராவும் மறு தபாலில் எழுதியனுப்பப்படும்.

திசா புக்தி பலன்

எந்த திசையானாலும் சரி, எத்தனை வருஷ திசையானாலும் சரி, திசை பூராவிற்கும், 9 புக்திக்கும் விபரமாய் பலாபலன் எழுதியனுப்பப்படும். திசா புக்தி பலன் வேண்டியவர்கள் பூரா ஜாதக நகல் அனுப்பி ரூ. 5 மணியார்டர் மூலம் அனுப்பவும்.

N. B.—வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்பு கட்டணம் அனுப்பவும்.

ஸ்ரீ மஹாலக்ஷ்மீ ஜ்யோதிஷ ஆபீஸ்

கோட்டமருதூர், அரகண்டநல்லூர் P. O. (S. A. Dt.)






நேர் வகிடானாலும் சரி, கோணல் வகிடானாலும் சரி, வாரி எடுத்து இளம்பிறை வடிவாகக் கட்டினாலும் சரி—கூந்தலை எவ்விதமாக ஜோடித்தபோதிலும், தலை நிறைந்த கூந்தலில்லாமல், இச்சிங்காரக் கட்டுகளெல்லாம் சோபிக்க மாட்டா, ஆகையால் கேசவர்த்தினியைக் கொண்டு கூந்தலையும் கூந்தலழகையும் இப்போதே பெருக்கிக் கொள்ளுங்கள். தலையை வித விதமாய் அலங்கரித்துக் கொள்ளுங்கள்.

அழகு என்பது உடன் பிறந்ததே. ஆனால் கூந்தலழகோ சுபாவமாக அமையாவிடினும், கேசவர்த்தினியால் கிட்டுவதே.

கவனக் குறைவாலோ அல்லது வேறு காரணத்தாலோ இழந்த கூந்தலுக்குப் பதில் இளங் கூந்தலைப் பெறுங்கள். சிறு வயது முதல் கேசவர்த்தினியை உபயோகிப்பதால், கூந்தல் ஆரோக்யத்தையும் அழகையும் தவறாமல் ஒருங்கே அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 12.

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயனசாலை,

ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்

இந்தியாவின் புகழ்



லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

கேஸரி குடீரம் லிட்., மதராஸ்

EASTERNS 394

சென்னை, நிஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாடு, முதலிய இடங்களுக்கு ஏஜண்டுகள்:

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பேர்ஹாம்பூர் - செகந்திராபாத்

பெஜவாடா - மதுரை



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras.

கல்கி



ALKI டிஸம்பர் 28, 1947 4 அணா

55 வயதில் பூரணப் பொலிவு பெற்ற தேக ஆரோக்கியம்

அம்மனிதரும் அவரது மனைவியும் க்ருஷனை ஸ்லாகித்துக் கூறுகின்றனர்

"பணம் புத்திசாலித்தனமாக செலவழிந்தது"

ஸ்திரீகளிலும் புருஷர்களிலும் அநேகருக்கு நடுத்தர வயது வந்தவுடனேயே சிறு வலி ஏற்படத் தொடங்குகிறது. அதற்கு "முதுமைப் பருவத்"தையே காரணமாகக் கூறுகிறார்கள். ஆனால் பாட்ரிக் தம்பதிகள் மட்டும் அங்ஙனம் கூறுவதில்லை. இருபது வருஷங்களுக்கு மிகவும் சௌக்யமாக இருந்தவர்கள். அவர்களது அத்தகைய வாழ்க்கையின் தத்துவத்தை யாரும் சுலபமாகவும் சிக்கனமாகவும் கடைப்பிடிக்கலாம். மிஸஸ். பாட்ரிக் எழுதுகிறார்:—

"ஒரு விடுமுறை நாளில்கூடத் தவறாமல் கடந்த இருபது வருஷங்களில் பிரதி தினமும் காலை தேநீருடன் க்ருஷனையும் சாப்பிட்டோம். எங்கள் தேகாரோக்யத்தையே க்ருஷனுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டுமென நாங்கள் கூறத் தயங்க மாட்டோம். டாக்டர் செலவு கொஞ்சங்கூட இல்லையென்றே கூறவேண்டும். 55 வயதான போதிலும் என் கணவர் 45 வயதினராகவே தோற்றமளிக்கிறார். எத்தகைய சீதோஷ்ண ஸ்திதியில் வேலை செய்ய வேண்டியவரானாலும் என் கணவர் ஆரோக்யமே உருவானவர். க்ருஷன் சாப்பிடுமுன், அவரது கை முடக்குகளில் வாதத்தினால் கஷ்டப்பட்டார். அந்த வாதம் குணமடைந்து நெடுநாளாகிய போதிலும், அவர் க்ருஷன் சாப்பிடத் தவறுவதில்லை. க்ருஷன் சால்ட்ஸ் வாங்குவதில் நாங்கள் பணம் செலவிட்டது விரயமேயில்லை — புத்திசாலித்தனமாகும்." —(மிஸஸ்) எச். வி. பாட்ரிக்.

ஆறு வகைப்பட்ட இயற்கை உப்புக்களின் சேர்க்கைதான் க்ருஷன். குடல், மூத்திர கோசம் ஜீரணாசய பாதை ஆகியவற்றை ஆரோக்யத்துடன் சரிவர வேலை செய்யத் தூண்டுகிறது. தேகத்தின் உட்புறத்தையும் இரத்த ஓட்டத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ள உதவுகிறது. எல்லா கெமிஸ்டுகளிடமும் வியாபாரிகளிடமும் க்ருஷன் சால்ட்ஸ் பாட்டில் ஒன்றுக்கு ரூ. 1-10-0 விதம் கிடைக்கும்.

தி இந்தியன் பாங்க் லிமிடெட்

★

தலைமை ஆபீஸ் :
"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"
வடக்கு பீச் ரோடு, மதராஸ்

★

லோகல் ஆபீஸ்கள் :
எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு, மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர்

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப்-ஆபீஸ்களும் உள்ளன.

★

வழங்கி வாக்களிக்கப்பட்ட
மூலதனம் ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட
மூலதனம் ரூ. 53,00,000
ரிசர்வ் நிதி ரூ. 62,00,000

★


சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்
செக்ரடரி



மதராஸ் ஏஜண்டு :
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
பைகிராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி :: மதராஸ்

கோவை, நீலகிரி ஜில்லாக்கள்
& பாலக்காடுக்கு ஏஜண்டு :
B. பாலபட்டாபி,
வைசியாள் தெரு, கோயமுத்தூர்



ஏஜண்டுகள் :—ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், அங்கப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-1; ஸ்டார் ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா, பொம்மனம்பூர் & விசாகப்பட்டணம்; ஸ்ரீ ஜார்ஜ் & கம்பெனி ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி.

சிலோன் ஏஜண்டுகள் :—M.O.A. கனி & கோ., 88, ஜாம்ஸ் ரோடு, செட்டித்தெரு, கொழும்பு.

REGD. No. M. 4392

License No. 18
Licensed to post without prepayment.

ஓர் சர்வதேச சம்பவம்


Muse

'மியூஸ்'

புதியதோர் சிறந்த வாசனைத்திரவியம
ஓர் அபூர்வ சம்பவந்தான்.

வர்ணங்களால் மாத்திரம் வர்ணச்சித்திரம் உருவாகிவிடுமா. ஓசைகளிருந்து மாத்திரம் இன்னிசை பிறந்துவிடுமா. அதேபோல் வெறும் வாசனை மாத்திரமிருந்தால் அது வாசனைத்திரவியமாகிவிடாது.

மியூஸ் 8 வருட ஆழ்ந்த தயாரிப்பு முயற்சியின் வெற்றிச் சிகரமாகும். இதற்கிடையில் எத்தனை மாறுதல்கள். கடைசியில் எல்லாம் சிறந்த வெற்றியிலேதான் முடிந்தது. 8 வருட காலமாக ஏறக்குறைய நூற்றுக்கணக்கான உபசரக்குகளை சேர்த்து மிக நுட்பமாய் கைதேர்ந்த தயாரிப்பின் பயனாக வாசனைத் திரவியங்களின் புதியதோர் சிறந்த சிருஷ்டி உருவாயிற்று. பாரிஸ் நகரின் முக்கிய பகுதியில் பிறந்த மியூஸ் என்னும் இப்புதிய வாசனைத் திரவியம் அழியாச் சிறப்புடன் விளங்கத்தக்கதாகும். அதன் பெருமையும் [illegible] வளரவே செய்யும். மிகச்சிறந்த சரக்கை ஆரம்பத்திலேயே உயர்ந்ததறியும் சக்திவாய்ந்த நாரீமணிகளுக்கேற்ற நறுமணங்கமழும் வாசனைத் திரவியம் இது.



Coty

தயாரிப்பு கோட்டி

ஏஜண்டுகள்: டி. ஏ. டேய்லர் & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்
100, அரமனைக்காரத் தெரு, ஜி. டி., மதராஸ்

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

197. தோழிகள் சொன்னார்கள்!

சுக்கிரீவன் வாலியைப் போருக்கு அழைத்ததைப் பார்த்தோம். வாலியின் மனைவி தாரை பயப்படுகிறாள். அப்படி பயப்படுவதற்குக் காரணமில்லை என்று வாலி பேசுகிறான்.

'ஆற்றலின் அமரரும்
அவுணர் யாவரும்
தோற்றனர்; எனையர்
சொலற் பாலரோ;
கூற்றம்என் பெயர்சொலக்
குலையும்; ஆரினி
மாற்றலர் ஆகிவந்(து)
எதிரும் மாண்பினோர்?'

[ஆற்றலின் அமரரும் அவுணர் யாவரும்: அபாரமான பலம் படைத்த தேவர்கள் அசுரர்கள் ஆகிய எல்லாரும்: கூற்றம் என் பெயர் சொலக் குலையும்: எமனே என் பெயரைச் சொல்ல நடுங்கிப் போவான்; ஆர் இனி மாற்றலர் ஆகி வந்து எதிரும் மாண்பினோர்: என் மேல் பகைவராக வந்து என்னோடு எதிர்க்கும் திறம் உடையவர் யார்?]

∴

'என் அருமை மனைவியே! இன்னொரு விஷயம் கேள்: பைத்தியக்காரத்தனமாய் யாராவது என்னை எதிர்க்கிறார்கள் என்று வைத்துக்கொள், அதனால் என்ன ஏற்படும் தெரியுமா? அந்த எதிரி சம்பாதித்த வரங்கள், இயல்பாக உள்ள பலம், எல்லாவற்றிலும் பாதி என்னிடம் வந்து சேர்ந்து விடும், தெரிகிறதா!'

'பேதையர் எதிர்குவர்
எனினும், பெற்றுடை
ஊதிய வரங்களும்
உரமும் உள்ளதில்
பாதியும் என்னதால்:
பகைப்ப(து) எங்ஙனம்?
நீதுயர் ஒழி'கென
நின்று கூறினான்.

[பெற்றுடை ஊதிய வரங்களும்: ஏதோ தவத்தால் பெற்ற தனிச் சிறப்பு வாய்ந்த வரங்களும்; ஊதியம்: தனியான லாபம்; உரமும்: பலமும்; உள்ளதில் பாதியும் என்னதால்: ஏற்பட்டுள்ளதில் பாதி என்னுடையதாகி விடும். அதாவது, ஒரு வெற்றி கிடைத்தால் அடுத்த வெற்றிக்கு ஆதாரமாகிறது அது—இன்றைக்கும் நாம் பார்க்கிற காரியந்தான். பகைப்பது எங்ஙனம்: காரியம் இப்படி இருக்கும்போது பகைவன் என்று எப்படி ஒருவன் வருவான்; நீ துயர் ஒழிக என நின்று கூறினான்: நீ வருத்தம் கொள்ள வேண்டாம் என்று அமைதியாய் நின்று சொன்னான்.]

∴

அப்படிச் சொன்னவனுக்கு, தான் கேட்ட சமாசாரத்தைச் சொல்லுகிறாள் தாரை:

"சுக்கிரீவனுக்கு ராமன் என்கிற ஒரு சிநேகிதன் வந்திருக்கிறானாம். அவனும் உன்னைக் கொல்லவே உடன்பட்டு வந்திருக்கிறானாம்."

அன்னது கேட்(டு) அவள்,
'அரச! ஆயவற்(கு)
இன்னுயிர் நட்பமைந்(து)
இராமன் என்பவன்
உன்னுயிர் கோடலுக்(கு)
உடன்வந் தான், எனத்
துன்னிய அன்பினர்
சொல்லி னார்' என்றாள்.

[அன்னது கேட்டவள்: வாலி சொன்ன சொல்லைக் கேட்ட தாரை; அரச: அரசனே: ஆயவற்கு: அந்தச் சுக்ரீவனுக்கு: உன் உயிர் கோடலுக்கு: உன் உயிரைப் பறித்துக் கொள்ளுவதற்கு; உடன் வந்தான் என: கூடவே வந்திருக்கிறான் என்று; துன்னிய அன்பினர்: எனக்கு ரொம்பவும் வேண்டிய பெண்கள்.]

வாலி என்ன பதில் சொல்லுகிறான் என்பதை இனிப் பார்க்கலாம்.